# துவக்குகள் தூங்காது...

■ கவிபாஸ்கர்

மழைக்காலத்திற்காக
காத்திருப்பது
பயிர்கள்
மட்டுமல்ல...

போராளிகளும்
சிங்கள இராணுவத்தின்
உயிர் குடிக்க
பீரங்கியும்...

ஆயிரமாயிரம்
குழந்தைகள்
செத்துக்கொண்டே
இருந்தாலும்,

"ஆய்தக்கிடங்கு"
தமிழச்சிகளின்
கருவறை...
பெத்துப்போட்டுக்
கொண்டே இருக்கும்...

போராளிகளின்
இதயம் துடிப்பது
உயிர்த்துடிப்பல்ல
சிங்களவர்களை
தாக்கும்
மனித வெடிகுண்டுச்
சத்தம்...
துடித்து உள்ளே
ஒத்திகை பார்க்கிறது!

பிணங்களை
உண்பதில்லை
இராமேசுவர கடல் மீன்கள்
குண்டுகளை
விழுங்குகின்றன....

சிங்களனின்
முகத்தில் துப்ப...

பதுங்கு குழியில்
முளைத்து வருவது
புல், பூண்டுகளல்ல...
ஒவ்வொன்றும்
துவக்குகள்......!

துவக்குகள்
இனி
தூங்காது!



# புதிய தமிழர் கண்ணோட்டம்

நவம்பர் 2008 6-11



அரசியல் நடிகர்களும் நடிகர்களின் அரசியலும்
**க.அருணபாரதி** *10*

சிங்களர் பங்காளி தமிழர் பகையாளியா? *18*

நான் வித்யா - உரைகல்
**தஞ்சை சாம்பான்** *22*

கலை உலகின் கண்டனக் குரல்
**முனி** *23*

உலகச் சந்தை விழட்டும்
தமிழ்த் தேசச் சந்தை எழட்டும்
**பெ.மணியரசன்** *25*

மருத்துவர்களும் மதகுருமார்களும்
**ம.செந்தமிழன்** *33*

**பாவெளி** *41*





பருவநிலை மாற்றமும் உலக முதலாளியமும்
**கி.வெங்கட்ராமன்** *36*


கட்டண விவரம்

| | |
|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 120/- |
| மூன்றாண்டுக் கட்டணம் | ரூ. 300/- |
| வாழ்நாள் கட்டணம் | ரூ. 1200/- |




அவர்களை அடையாளம் காண்போம்
**பெ.மணியரசன்** *6*





அமெரிக்க நிதி நெருக்கடியின் இன ஒதுக்கல்
**வான்முகில்** *14*



ஆசிரியர் - வெளியீட்டாளர் :
**பெ.மணியரசன்**

இணை ஆசிரியர் :
**கி.வெங்கட்ராமன்**

குழு உறுப்பினர்கள் :
**கவிபாஸ்கர்**
**க.அருணபாரதி**

வடிவமைப்பு
**கவிபாஸ்கர்**

ஒளி அச்சு
**காவிரி கணிப்பொறி,**
**தஞ்சை.**



தொடர்புக்கு
**புதிய தமிழர் கண்ணோட்டம்,**
2ஆம் தளம், 20/7, முத்துரங்கம் சாலை,
தியாகராயர் நகர், சென்னை - 17.
போன் : 24348911
மின்னஞ்சல் : tamizhdesiyam@gmail.com
இணையம் : www.tamizharkannotam.blogspot.com
தமிழ்த்தேசப் பொதுவுடைமைக்கட்சி
இணையம் : www.tamizhdesiyam.blogspot.com

# புதிய போராளிகளின் போர்ப்பரணி

தமிழ்நாட்டில் தமிழினக் காப்புப் போராட்டங்கள், இப்பொழுது அரசியல் பெரும் பீடங்களுக்கு அப்பால் தான் தொடக்கம் பெறுகின்றன. பொதுவாகவே தேர்தல் கட்சிகள் ஆதீனங்களாகிவிட்டன. அவற்றில் கட்டளைத் தம்பிரான்களும், புதுப்பெரியவாள்களும் உருவாகிறார்கள். கனல் மணக்கும் பூக்களாக இலட்சியக் கனவுகள் ஏந்தும் இளைஞர்கள் யாரேனும் இருந்தால் அவர்களை அவை வெளியே கக்கி விடுகின்றன.

சிறு விதிவிலக்காகத் தமிழக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, ஈழத் தமிழர் இனப் படுக்கொலையைக் கண்டிக்க காந்தியடிகள் பிறந்த நாளான 02.10.2008 அன்று அனைத்துக்கட்சிப் பட்டினிப் போராட்டம் நடத்தியது.

அதன்பிறகு தமிழகமெங்கும் தனித்தனியே போராட்ட நெருப்பு சுடர்விட்டு எரிந்தது. விடுதலைச் சிறுத்தைகள், பா.ம.க., ம.தி.மு.க. எனக் கட்சிகள் போராடின. தமிழ்த்தேசப் பொதுவுடைமைக்கட்சி, பெரியார் திராவிடர் கழகம், தமிழ்த்தேசிய விடுதலை இயக்கம் ஆகியவை முன்முயற்சி எடுத்து நடத்திய கண்டன ஆர்ப்பாட்டங்கள் சென்னை, மதுரை, கோவை, தஞ்சை ,திருத்துறைப்பூண்டி, சேலம், ஓசூர், ஈரோடு , திருச்செந்தூர் எனப் பல இடங்களில் நடந்தன. இக்கண்டன ஆர்ப்பாட்டங்களில் மூன்று தெளிவான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

1. இந்திய அரசு இதுவரை இலங்கைக்குக் கொடுத்த படைக்கருவிகள் - ரேடார்கள், போர்க்கப்பல்கள் உள்ளிட்ட அனைத்தையும் திரும்பப் பெற வேண்டும். 2. சிங்களப் படையுடன் சேர்ந்து செயல்பட அனுப்பியுள்ள இந்தியப் படைத்துறையினர் 256 பேரைத் திரும்ப அழைக்க வேண்டும். 3. இந்திய மண்ணில் எங்கேயும் சிங்களப் படையினர்க்கு இந்தியா பயிற்சி தரக்கூடாது.4. சிங்கள அரசுக்கு இந்திய அரசு அரசியல் மற்றும் பொருளியல் உதவி செய்யக்கூடாது.

நாம் மேற்கண்ட கோரிக்கைகளில் போர் நிறுத்தம் என்பதைச் சேர்க்கவில்லை. மேற்படி நான்கு கோரிக்கைகளையும் இந்தியா நிறைவேற்றி, இருதரப்புக்கும் உதவாமல் ஒதுங்கிக் கொண்டால் போதும். விடுதலைப் புலிகள் வெல்வர்.

தமிழகத்திரைப்படத்துறையினர் இந்த முறை தமிழ் இனத்திற்கு மகத்தான பங்காற்றியுள்ளனர். தமிழ்த்திரை உலகை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த பார்ப்பன மற்றும் பிற இனப்புகை மூட்டத்தைக் கிழித்துக்கொண்டு பாரதிராஜா, ஆர்.கே. செல்வமணி, வெ. சேகர், சீமான், அமீர், சேரன், விஜயராஜேந்தர், பார்த்திபன், இன்னும் இன்னும் பலர் வெளிவந்தனர். “நாங்கள் தமிழ் இனத்தின் உரிமைக்காக நிற்கிறோம்” என்று மாற்றார் மருள மார்தட்டி முழங்கினர்.

இராமேசுவரத்தில் 19.10.2008 அன்று திரையுலகத் தமிழர்கள் நடத்திய மாபெரும் பேரணியும் எக்காளமிட்ட போர்முழக்கும் ஈழத்தில் எதிரொலித்திருக்கும். வரலாறு அவர்களுக்கு வாழ்த்துப்பா பாடியது. பார்ப்பன ஆதிக்கக்காரர்களுக்கு வயிறு எரிந்தது.

ஈழத்தமிழர் இனப்படுகொலையைக் கண்டித்தும் போர் நிறுத்தம் கோரியும் போராடுபவர்களைக் கொச்சைப்படுத்தி குமுதம் ஏட்டில் ஞாநி என்ற மாறுவேடப் பார்ப்பனர் எழுதியதைக் கண்டித்து நூற்றுக்கணக்கான திரைத்துறைத்துணை இயக்குநர்கள் அவ்விதழின் அலுவலகத்தில் சென்று கண்டனம் தெரிவித்தனர். அதேபோல் பாரதிராஜா தலைமையில் 150 பேர் சென்னைத் தினமலர் அலுவலகம் சென்று கண்டனம் தெரிவித்தனர்.

சென்னையில் சிங்கள அரசின் துணைத் தூதரகத்தில் மாணவர்களும் , இளைஞர்களும் புகுந்து அதனை முற்றுகையிட்டுத் தாக்கினர். மதுரையில் சி.ஐ.ஏ. உளவாளி சுப்பிரமணியசாமியின் அலுவலகத்தை மாணவர்களும் ,இளைஞர்களும் தாக்கினர்.

சிங்கள அரசின் பன்னாட்டுத் தரகர் ‘இந்து’த்வா என் ராமின் இந்து ஏட்டில் மாலினி பார்த்தசாரதி என்ற பார்ப்பனத்தேள், எழுதுகோலைக் கொடுக்காக்கிக் தமிழ் இனத்தைக் கொட்டியது ( 14.10.2008). அன்றே சீறி எழுந்த சிங்கத் தமிழர் கூட்டம் கோவையில் ‘இந்து’ அலுவலகத்தை முற்றுகை இட்டது. மோதி மிதித்து விட

முனைந்தது. தோழர்கள் தளைப்படுத்தப்பட்டனர். பின்னர் பிணையில் வந்தனர்.

தந்தை பெரியார் பிறந்த மண்ணில் 16.10.2008 விடியற்காலை ஈரோட்டுத் தோழர்கள் இந்து நாளேட்டின் கட்டுகளைப்பிடுங்கி எரித்தனர். எரிந்து போன படிகளின் எண்ணிக்கையை மறுநாள் ராம் வெளியிட்டார். இந்து ஏடு 2400 படிகள்; பிஸ்னஸ்லைன் ஏடு 390 படிகள். இது தொடர்பாகத் தமிழ்த்தேசப் பொதுவுடைமைக் கட்சி மற்றும் பெரியார் தி.க. தோழர்கள் மீது வழக்குப்பதிவு செய்துள்ளனர். தோழர்கள் ஜெயக்குமார் ( த.தே.பொ.க) குமரகுருபன் (பெ.தி.க) ஆகியோர் தளைப்படுத்தப்பட்டனர். பிணையில் வெளி வந்தனர்.

மதுரையில் தொடர் வண்டிப்பெட்டிகள் இரண்டை எரித்ததாகச் செய்திகள் வந்தன. **வணிகர் போராளி த.வெள்ளையன் தலைமையிலான தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை ஈழத்தமிழர் துயர் துடைக்க ஒருநாள் தமிழகம் தழுவிய கடையடைப்பு நடத்தியது.**

ஈழத் தமிழர்களை இனக்கொலை செய்யும் சிங்களரையும் அதற்கு துணை செய்யும் இந்திய அரசையும் கண்டித்து எரிமலையாய் வெடிக்கும் தமிழர்களை "நான் ஆட்சியிலிருந்தால் சிறையில் தள்ளி இருப்பேன்; அவர்களை ஏற்கெனவே பொடாவில் போட்டது நான்தானே" என்று ஆரிய நஞ்சு கக்கிய செயலலிதாவின் கொடும்பாவியை தஞ்சையில் எரித்தனர் தமிழ்த்தேசப் பொதுவுடைமைக்கட்சித் தோழர்கள் (21.10.2008). மற்றும் சில இடங்களிலும் வெவ்வேறு அமைப்பினர் செயலலிதா கொடும்பாவி எரித்தனர்.

இவ்வாறு இன எழுச்சிப் போரை அங்கங்கே நிகழ்த்தியவர்கள், பெரும் பெரும் கட்சியினர் அல்லர்; சிறு சிறு இயக்கத்தினர், அமைப்பு சாரா இளைஞர்கள், மாணவர்கள், வழக்கறிஞர்கள், திரைத்துறையினர்- இவர்களே இந்த எழுச்சியின் நாயகர்கள். கட்சி தொடங்கிய தொடங்க விரும்புகிற திரைக் கதாநாயகர்கள், துரும்பையும் அசைக்கவில்லை. கரையொதுங்கிய துரும்பாகக் கிடந்தன.

இந்த எழுச்சி தரும் படிப்பினை என்ன? அரசியல் பெரும்பீடங்கள், மாரியம்மன்கோயில் யானைகள் போன்றவை. கையேந்த மட்டுமே அவற்றுக்குக் கற்றுக் கொடுத்துள்ளார்கள். கரிகால் பெருவளத்தான் யானைகள் போல அவை களம் காண்பவை அல்ல. தொலைநோக்குப் பார்வையில் பார்த்தால் அரசியல் பெரும் பீடங்கள் காலாவதி ஆகிவிட்டன.

ஈழத்தமிழர் உரிமைக் காப்பிற்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டு உரிமைகளான காவிரி, முல்லைப்பெரியாறு, பாலாறு, மீனவர் , இயற்கைவளங்கள் தாயகமண், தொழில், வணிகம், கல்வி, வேலைவாய்ப்பு போன்ற அனைத்திலும் தமிழர் உரிமைகாக்க, தமிழர் உரிமை மீட்க, தமிழ்த்தேசிய எழுச்சியை முன்னெடுக்க, புதிய ஆற்றல்களே புறப்படும்! அவர்கள் உயர்த்தும் கைகளே வரலாற்றின் போக்கைப் புதிய திசையில் திருப்பிவிடும்.

அந்த சக்திகளை அடையாளம் காண்பதும் அமைப்பு வழிப்படுத்துவதும், இலட்சியச் சுடரை ஏந்தச் செய்வதும் புரட்சிகரத் தமிழ் தேசியத்தின் உடனடிப் பணி!

## செயலலிதா கொடும்பாவி எரிப்பு

தமிழீழ விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தியும், ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக குரல் கொடுப்போரை பொடா சட்டத்தில் கைது செய்ய வேண்டுமென்றும், அ.இ.அ.தி.மு.க. தலைவி செயலலிதா கொக்கரித்தார். அவரது அறிக்கை செய்தித்தாள்களில் வந்த அன்றே (21.10.2008) கண்டனப் போராட்டத்திற்கு தஞ்சை தமிழ்த்தேசப் பொதுவுடைமைக் கட்சித் தோழர்கள் அணியமானார்கள்.

21.10.2008 மாலை 5.00 மணியளவில் தஞ்சைத் தொடர்வண்டி நிலையம் அருகில் திடீரென்று திரண்ட த.தே.பொ.க, தமிழக இளைஞர் முன்னணித் தோழர்கள் தமிழின விரோதி செயலலிதாவுக்கு எதிராகக் கண்டன முழக்கங்கள் எழுப்பி நடுச்சாலையில் செயலலிதாவின் உருவப் பொம்மையை பெட்ரோல் ஊற்றிக்கொளுத்தினர். அங்கேயே நின்று கண்டன முழக்கங்கள் எழுப்பிவிட்டுக் கலைந்து சென்றனர்.



இப்போராட்டம் தொடர்பாக த.தே.பொ.க மாவட்டச்செயலாளர் தோழர் பழ. இராசேந்திரன் , நகரச்செயலாளர் தோழர் இராசு. முனியாண்டி, தமிழக இளைஞர் முன்னணி நகரச் செயலாளர் தோழர் செந்திறல் உள்ளிட்ட தோழர்கள் மீது காவல்துறை வழக்குப்பதிவு செய்துள்ளது.

# அவர்களை அடையாளம் காண்போம்

பெ.மணியரசன்

“அவரைக் கைது செய், இவரைக் கைது செய், உன்னை நீயே கைது செய்துகொள் , என்று இனக் காய்ச்சலில் கண்டபடி உளறிய செயலலிதா, கடைசியில் தன்னைக் கைது செய்யப்போவதாகப் புலம்பினார்.

தமிழகத்தில் தமிழ் இன உணர்வு மட்டம் வெள்ள காலத்தில் மேட்டூர் அணை நீர்மட்டம் போல் வேகமாக உயர உயர, ஆரியச் செல்வி செயலலிதாவுக்குக் காய்ச்சலும், சன்னியும் ஏற்பட்டுவிட்டது.

ஆனால் 02.10.2008 - இல் இந்தியக்கம்யூனிஸ்ட் கட்சி நடத்திய அனைத்துக்கட்சி உண்ணாப் போராட்டத்தில் அ.இ.அ.தி.மு.க.வினர் கலந்து கொள்ளவர் என்று முதலில் மடல் எழுதித்தெரிவித்தார் .பிறகு கலந்துகொள்ள வேண்டாம் என்று கடைசி நேரத்தில் கட்டளை இட்டார் செயலலிதா.

திடீர் “தமிழர் ஆதரவு” உணர்ச்சி ஏற்பட்டு 04.10.2008 அன்று காட்டமான அறிக்கை ஒன்று கொடுத்தார்.

**“இராசபட்சவைத் தில்லிக்கு அழைத்து, பிரதமர் மன்மோகன் சிங் கண்டிக்க வேண்டும். இலங்கையில் இராணுவச் செயல்பாடுகள் அனைத்தும் தமிழர்களுக்கு எதிராகத்தான் அமைந்துள்ளன. இலங்கையின் மீதான இந்தத் தாக்குதலுக்கு இந்திய ஆயுதங்களும் பயிற்சியும் பயன்படுத்தப் படுகின்றன” என்றார்**

**(தினமணி *05.10.2008*)**

ஆனால் 15.10.2008 அன்று அவரது அசல் குணம் வெளிப்பட்டது.

*“இலங்கையில் தற்போது நடக்கும் உள்நாட்டுப் போரை நிறுத்துவதற்கான அதிகாரம் இந்திய அரசிடம் இல்லை. இலங்கை உள்நாட்டு விஷயத்தில் இந்திய அரசு*



*தலையிட்டால், பின்னர் நம்நாட்டு உள் விவகாரத்தில் அண்டை நாடுகள் தலையிடுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டு , அது இந்திய இறையாண்மைக்கு ஊறு விளைவிப்பதாக அமையும்*”.

இப்பொழுது போர் நிறுத்தம் கேட்டால் இலங்கையின் இறையாண்மை என்னாவது என்று கவலைப்படும் செயலலிதா, அந்நாட்டின் குடியரசுத் தலைவரைத் தில்லிக்கு அழைத்துக்கண்டித்தால், அதன் இறையாண்மை என்னாகும் என்று ஏன் சிந்திக்கவில்லை?

தமிழர்கள் மீது அக்கறை காட்டுவது போல் ஒரு பாசாங்கு அறிக்கைதான் முந்தி வெளியிட்டது. பச்சைப் பார்ப்பன அரசியல் நடத்திக் கொண்டிருக்கும் செயலலிதா தமிழ் இனத்தையும் , தமிழ் மொழியையும் கருவறுக்க ஒவ்வொரு தறுவாயையும் பயன்படுத்திக்கொள்கிறார்.

செயலலிதா, “இந்து”த்வா ராம், சுப்பிரமணியசாமி, சோ. இராமசாமி ஆகியோர் சிங்களர் X ஈழத்தமிழர் சிக்கலை, பார்ப்பனர்X தமிழர் சிக்கலாக மாற்றிவிட்டனர்.

இவர்கள்தாம் ஈழத்தமிழர் படுகொலையைக் கண்டித்தும், சிங்கள அரசுக்குப் படைக்கருவிகள் அனுப்பியுள்ள இந்திய அரசை எதிர்த்தும் பேசுவோரைக் கைது செய்யுமாறு தூண்டுகின்றனர். இவ்வாறு கைது செய்ய முதல் குரல் கொடுத்தவர் செயலலிதா.

இந்திய அரசைக் கண்டித்துக் கருத்தரங்கமொன்றில் சென்னையில் பேசிய வைகோ, கண்ணப்பன் ஆகியோரையும் இராமேசுவரத்தில் 19.10.2008 அன்று பேசிய சீமான், அமீர் ஆகியோரையும் கைது செய்ய வேண்டுமென்று காங்கிரசார் கூக்குரல் எழுப்பினர்.

ஆரியச்செல்வி செயலலிதா தமிழ் இனத்திற்கு எதிராகத் தலைவிரி கோலமாக, களமிறங்கும் வரை, பதுங்கிக்கிடந்த தமிழகக் காங்கிரசார், குறிப்பாக தங்கபாலு, எஸ். ஆர். பாலசுப்ரமணியம், சுதர்சனம், சிங்களத் தூதரகச் சம்பளப்பட்டியலில் உள்ள வேலூர் ஞானசேகரன் போன்றோர் வைகோ மற்றும் திரைத்துறையினரைக் கைது செய்யக்கோரி கருணாநிதிக்கு நெருக்கடி கொடுத்தனர்.

‘இருக்கிற குடியில் தலைக்குடி, ஓடுகிற குடியில் முதல் குடி’ என்ற பாணியில் அரசியல் நடத்துபவர் கருணாநிதி . இந்திய அரசுக்கு எதிராகத் துரோகம் செய்ததாக இந்தியத் தண்டனைப்பிரிவிலும், (124A) தனித் தமிழ்நாடு கோரியதாகப் பிரிவினைத் தடைச்சட்டத்திலும் 13 (1) வைகோ, கண்ணப்பன்

ஆகியோரை 23.10.2008 அன்று தளைப்படுத்தி சிறையில் அடைத்தார்.

மறுநாள் 24.10.2008 அன்று இயக்குநர்கள் சீமான், அமீர் ஆகியோர் மீது மேற்படி பிரிவுகளுடன் சமூக ஒற்றுமையைக் கெடுக்கும் வகையில் பேசியதாக இந்தியத் தண்டனைச் சட்டம் 153(ஏ)(1)(பி) பிரிவும் போட்டுத் தளைப்படுத்தி சிறையிலடைக்கச் செய்தார் .

எல்லா இரண்டகங்களுக்கும் சிகரம் வைத்ததுபோல், இந்திய அரசுடன் ஒரு துரோகம் ஒப்பந்தம் போட்டு,போர் நிறுத்தக் கோரிக்கையைக் கைவிட்டார். கலைஞர் கருணாநிதி இந்தியா இலங்கைக்கு ஆயுதம் தரக்கூடாது என்ற கோரிக்கையைக் காற்றில் பறக்கவிட்டார். ஈழத் தமிழர்களுக்கான துயர்துடைப்பு உதவிப்பொருட்களை சிங்களக் கொடூரன் இராசபட்ச வசம் கொடுக்க ஒப்புக்கொண்டார்.

நிலநடுக்கப்பேரலை (சுனாமி) வந்தபோது உலகெங்கும் உள்ள தமிழர்களும் உலக நாடுகளும் கொடுத்த துயர் துடைப்புப் பொருட்களையும் நிதியையும் சிங்களர்களுக்கு மட்டுமே செலவு செய்தவர்கள் சிங்கள ஆட்சியாளர்கள். இப்பொழுது தமிழக அரசு திரட்டித் தரும் பொருட்களும் நிதியும் இராசபட்ச கையில்தான் போய்ச் சேரவுள்ளது. இந்திய அரசும் அவ்வாறே இராச பட்சயிடம் தரவுள்ளது.

இராசபட்ச தன் கட்டுப்பாட்டில் உள்ள அகதிகள் முகாம்களுக்கும் சிங்களப் படைக்கும் இவற்றை வழங்குவார். வன்னிப் பகுதியில், தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகத்தின் கீழ் உள்ள பகுதிகளில் விமானக் குண்டுவீச்சால் இடம் பெயர்ந்தோர், காயமுற்றோர், பட்டினி கிடப்போர், குழந்தைகள் ஆகிய இன்னலுற்ற மக்களுக்கு இந்த உதவிகள் போய்ச் சேருமா என்பது ஐயம்.

காரணம் அப்பகுதியில் பன்னாட்டு செஞ்சிலுவைச் சங்கத்தையோ ஐ.நா. மனித உரிமை அமைப்பையோ இராசபட்ச அனுமதிக்கவில்லை.துயர் துடைப்பு உதவி வேண்டுமானால் வன்னியிலிருந்து வெளியேறி அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள வவுனியாப் பகுதிக்கு வாருங்கள் என்று அழைப்பு விடுப்பார்.

அவ்வாறு அழைப்பதன் நோக்கமென்ன? தண்ணீரை இறைத்து விட்டு மீன்களை மட்டும் விட்டு விடும் சூழ்ச்சி அது. மக்களை வெளியேற்றி விட்டு விடுதலைப் புலிகளை மட்டும் வெறும் திடலிலும் காட்டிலும் விட்டு விட்டால் பின்னர் அவர்களை வீழ்த்தி விடலாம் என்று நினைக்கிறார்.

இவ்வாறு விடுதலைப் புலிகளை வீழ்த்த ஒரு பொறியை இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜியும் இராசபட்ச தம்பி பசில் இராச பட்சவும் மற்றும்இரு தரப்பு அதிகாரிகளும் 26.10.2008 அன்று அணியம் செய்துள்ளனர். கலைஞர் கருணாநிதி இந்த சூழ்ச்சித் திட்டத்தை ஏன் ஏற்றுக்கொண்டார்?

போர்நிறுத்தம் கோர மாட்டோம் என்று தெள்ளத் தெளிவாகப் பிரணாப் முகர்ஜி முதலமைச்சர் வீட்டு வாசலில் 26.10.2008 அன்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார். அதுமட்டுமின்றி, இலங்கைக்கு இராணுவக்கருவிகள் கொடுத்ததை ஞாயப்படுத்தி அவை இந்தியப் பாதுகாப்புக் கருதி கொடுக்கப்பட்டவை என்று உறுதி படத் தெரிவித்தார். சிங்களப் படையினர்க்கு இந்தியாவில் பயிற்சி தருவதையும் ஞாயப்படுத்தி, பலநாட்டுப் படையினர்க்கும் இதுபோல் பயிற்சி தருகிறோம் என்று கூறினார்.

இந்த முடிவுகள் அனைத்தையும் முதல்வர் கருணாநிதியிடம் பிரணாப் முகர்ஜி விளக்கி, முதல்வரும் ஒப்புதல் தெரிவித்தபின், செய்தியாளர்களிடம் கூறினார். அதன்பிறகு கலைஞர் கருணாநிதியைச் செய்தியாளர்கள் கருத்துக் கேட்டபோது "எனது நம்பிக்கை வீண்போகவில்லை நடுவண் அரசின் நடவடிக்கைகள் மன நிறைவு அளிக்கின்றன" என்று கூறினார்.

ஈழத் தமிழர்களுக்கு அனுப்புவதற்கென்று நிதி வசூலிலும் இறங்கிவிட்டார். அந்தந்த மாவட்ட ஆட்சியாளரிடம் பொருள்களை வழங்கும்படிக் கூறியுள்ளார்.

14.10.2008இல் நடந்த அனைத்துக்கட்சிக்கூட்டத்தின் முடிவுப்படி போர் நிறுத்தம் கோராத இந்திய அரசைக் கண்டித்து, தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்நேரம் பதவி விலகியிருக்க வேண்டும். விலகல் கடிதங்கள் வாங்குவதை விழாபோல் நடத்திக் கொண்டிருந்த கலைஞர் கருணாநிதி, கோரிக்கைகளில் வெற்றி பெற்று விட்டது போல் மாயத் தோற்றத்தை உருவாக்கிக்கொண்டுள்ளார். அந்தத் துரோகத்தை மறைத்து, மக்கள் கவனத்தை மடைமாற்றும் உத்தியாக துயர்துடைப்பு நிதி வசூலை விளம்பரப்படுத்திக் கொண்டுள்ளார்.

கலைஞர் ஆதரவாளர்களும், ரசிகர்களும், அவரது இந்தத் துரோகத்திற்கு ஞாயம் கற்பிக்கின்றனர். நடுவண் அரசின் இக்கருத்தை ஏற்கவில்லை எனில் கலைஞர் ஆட்சியைக் கவிழ்த்து விடுவார்கள். அவ்வாறான ஒரு நிகழ்வுக்காக செயலலிதா காத்திருக்கிறார் என்கிறார்கள்.

போர்நிறுத்தம் என்பதுதான் அனைத்துக்கட்சித் தீர்மானத்தின் உயிர். அதைக் கொன்றுவிட்டனர் தில்லி ஆட்சியாளர்கள்; போர் நிறுத்தம் பற்றி என்னிடம் இந்திய அரசுப் பிரதிநிதிகள் பேசவே இல்லை என்று பசில் இராசபட்ச கொழும்பில் போய் கூறியுள்ளார். சில நாட்கள் முன், அவர் அண்ணன் இராசபட்ச மன்மோகனுடன் தொலைபேசியில் பேசிவிட்டு, இந்தியப் பிரதமர் போர் நிறுத்தம் கோரவில்லை என்றும், போர் தொடரும் என்றும் கூறினார்.ஏடுகளில் அச் செய்தி வந்துள்ளது. போர் நிறுத்தம் என்ற உயிரைக் கொன்றுவிட்டனர் சோனியாவும் பிரணாப்பும். பிணமாக்கப்பட்ட அனைத்துக்கட்சித் தீர்மானத்தைத் தன் முன்னால் போட்டுக் கொண்டு வெற்றி வீரர் போல் பேசியும் எழுதியும் வருகிறார் கலைஞர்.

தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவிவிலகினால், தி.மு.க. ஆட்சிக்குக் கொடுக்கும் ஆதரவை காங்கிரஸ் விலக்கிக்கொள்ளும், ஆட்சி கவிழும் அபாயம் எழும் என்று கலைஞர் கருதியிருக்கலாம். இந்த எதிர்விளைவுகளைத் தீர்மானம் நிறைவேற்றும்போது அவர் எண்ணிப் பார்க்கவில்லையா? மக்களின் கவனத்தைத் தம்பக்கம் ஈர்த்து, தமிழ் இன உணர்வாளர்களின் தன்னெழுச்சிப்போராட்டத்தை முனை மழுங்கச் செய்வதற்காகத் திட்டமிட்ட நாடகமாகவே அத்தீர்மானத்தை நிறைவேற்றினாரா?

ஆட்சி போய் விடுமோ என்ற அச்சத்தில் அவர் இருந்தால், அனைத்துக் கட்சிக்கூட்டம், பதவி விலகல் தீர்மானம், அன்றாட வீரவசனம் ஆகியவற்றைத் தவிர்த்திருக்கலாம். அவர் பாட்டிற்கு ஆட்சிப் பணியைக் கவனித்துக் கொண்டிருக்கலாம். போராடுபவர்கள் போராடட்டும். எல்லை மீறினால் கைது செய்வோம் என்ற அளவில் ஒதுங்கியிருக்கலாம்.

இந்திய அரசின் எச்சரிக்கையை மீறி ஈழத்தமிழர்களை இலங்கை அரசு கொன்றால் "அதற்குப் பிறகு நாங்கள் இந்த அரசு தேவையா என்ற கேள்விக்கு விடை கண்டாக வேண்டும்" என்று மயிலை மாங்கொல்லைப் பொதுக்கூட்டத்தில் 06.10.2008 இல் அவர் முழங்கியிருக்கவேண்டாம். அப்படி முழங்கிவிட்டு, ஆட்சி போய்விடும் என்பதற்காக, கலைஞர் பின்வாங்கி விட்டார் என்றால் அதில் என்ன நேர்மை இருக்கிறது?

கலைஞரின் மயிலை மாங்கொல்லை முழக்கத்தைக் குறுந்தகடுகளாக, ஒலி நாடாக்களாக பல லட்சம் வெளியிடவேண்டும் என்று ஆசிரியர் வீரமணி அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதே கூட்டத்தில் "இருப்பது ஒரு உயிர் அது போவது ஒரு முறை ; அது நல்ல காரியத்துக்காகப் போகட்டுமே" என்று பேசியுள்ளார். இச்சொற்களெல்லாம் தி.மு.க.வால் பலநூறு தடவை மலினப்படுத்தப் பட்டவை என்பதை நாடறியும் , ஏடறியும் .

இந்த அகவையிலாவது, தம் ஆசையறிந்து, அர்ப்பணிப்பறிந்து, அளவோடு பேசியிருக்கலாமே என்பது தான் நமது திறனாய்வு.

ஆரியச் சார்பும் ஆர்.எஸ்.எஸ். கொள்கையும் கொண்ட செயலலிதா தமிழ் இனத்தின் மீது தீராத பகை கொண்டுள்ளார் என்று சான்றுகளோடு நாள்வாரியாகக் குறிப்பிட்டு கருணாநிதி அம்பலப்படுத்தினால், அந்த அம்மையார் பின்வாங்க வேண்டி வந்திருக்கும். தமிழகமே தமிழ் இன உணர்ச்சியில் கொந்தளித்துக் கொண்டிருக்கிறது. இந்தக் கொந்தளிப்பு உருவாகும் முன் ஆனந்த விகடன் எடுத்த கருத்துக்கணிப்பில் 56 விழுக்காட்டுத் தமிழ் மக்கள் பிரபாகரனை ஆதரிக்கிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஈழத்தமிழர்க்காதரவான இந்தக் கொந்தளிப்பு எழுந்தவுடன் அந்த விகிதம் இன்னும் அதிகரித்திருக்கும். அண்மையில் தினமணி ஒரு வினா கேட்டு கருத்துக் கணிப்பு நடத்தியது. விடுதலைப் புலிகளும் ஈழத்தமிழர்களும்ஒன்றா, வேறுவேறா என்பதே அவ்வினா. அதற்கு 72.58 விழுக்காட்டினர் இருவரும் ஒருவரே என்று விடையளித்திருந்தனர்.

"உயிர் போனால் போகட்டும், ஆட்சி தேவையா, ஈழத்தில் ரத்த ஆறு ஓடுவது நிறுத்தப்படவில்லை எனில் தமிழகத்திலும் ரத்த ஆறு ஓடும் " என்றெல்லாம் பேசிய கலைஞர் கருணாநிதி பார்ப்பனிய செயலலிதாவின் தமிழ் இன எதிர்ப்புச் சிந்தனையை ஏன் அம்பலப்படுத்தவில்லை? மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் டி.கே.ரங்கராஜனை பார்ப்பனர் என்றும் பூணூல் என்றும் கவிதை எழுதிச் சாடியவர், பார்ப்பனியத்தின் சின்னமாகச் செயல்படும் செயலலிதாவை இனக்கொள்கை அடிப்படையில் ஏன்அம்பலப்படுத்த வில்லை?

இங்கே தான் கருணாநிதியின் சந்தர்ப்பவாதம் மறைந்து கிடக்கிறது. தமிழ் மக்களிடம் உள்ள பார்ப்பனிய எதிர்ப்பு, ஈழத்தமிழர் ஆதரவு, விடுதலைப் புலிகள் ஆதரவு போன்ற எல்லாவற்றையும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள முயல்வது, எதிரிகள் எதிர்த்துக் கிளம்பினால், பின்வாங்கி ஓடிவிடுவது என்பது அவரது வாடிக்கையான நடைமுறை. பின்வாங்கி விடுவது மட்டுமல்ல, எதிரியின் கட்டளைப்படி கீழ்ப்படியத் தொடங்கிவிடுவார்.

அப்படிக் கீழ்ப்படிந்து தான் திரைப்பட இயக்குநர்கள் சீமான், அமீர் ஆகியோரை சிறையிலடைத்தார். ஆனால் அவருக்கே உரிய சூழ்ச்சிக் குணத்தின் காரணமாக, முதலில் வைகோவையும் கண்ணப்பனையும் கைது செய்தார். வைகோ செயலலிதா கூட்டணியில் இருப்பதால் இவ்வாறு கைது

## ஐந்தாவது ஆண்டாக பொங்கல்மலர்

தமிழர் கண்ணோட்டம் கடந்த நான்கு ஆண்டுகளாகப் பலரும் பாராட்டும்படி சிறப்பாக பொங்கல் மலர் கொண்டு வந்தது.

இப்போது ஐந்தாவது ஆண்டாக, புதிய கோணத்தில் பொங்கல் மலர் (2040) - 2009 அணியமாகிறது.

வரலாற்று ஆய்வாளர்களுக்கும் , மக்கள் இலக்கியம் கலை ஆகியவற்றின் தோய்வாளர்களுக்கும் விருந்து படைக்கும் மலராக இருக்கும்.

வாசகர்கள் மற்றும் விளம்பரதாரர்கள் ஆதரவை வழக்கம்போல் நாடுகிறோம்.

- ஆசிரியர்
புதிய தமிழர் கண்ணோட்டம்

செய்தார்.

"இந்தியா ஆயுதம் கொடுத்து இலங்கைப் போரை நடத்துகிறது. ஈழத் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்படுவதற்கு மூலகாரணம் இந்தியா தான். இந்த நிலை நீடித்தால் தனி ஈழம் மட்டுமல்ல. தனித்தமிழ்நாடும் பிறக்கும் என்று எச்சரிக்கை செய்து அவர்கள் பேசினார்கள்". இதில் என்ன குற்றம்?.

அடி தாங்காமல் அழுகின்றவன் ' இலக்கணப்படி அழவில்லை', என்று சொன்னால் அது எவ்வளவு ஆணவமோ அவ்வளவு ஆணவம்தான் , இந்திய இறையாண்மையை இத்துடன் இணைப்பது.

முல்லைப்பெரியாறு அணை நீர்மட்டம் உயர்த்தல், ஒகேனக்கல் கூட்டு குடிநீர்த்திட்டம் ஆகியவற்றை மலையாள, கன்னட இனவெறியர்கள் எதிர்த்தபோது, தமிழ்நாடு கிளர்ந்தெழுந்தது. அப்போதெல்லாம் முதலில் ஆதரவாகத் தலையிட்டு, பின்னர் சாக்குப் போக்குச் சொல்லி அவ்வெழுச்சியை அணைத்தார். ஆனால் ஈழத்தமிழர்க்காதரவாக எழுந்துள்ள இவ்வெழுச்சியை அவரால் அணைக்க முடியாது.

ஈழத்தமிழர்களை ஒழித்துக்கட்ட இந்திய அரசு சிங்கள அரசுக்கு ஆய்தம் தருவதும், சிங்களர் நம்மக்களை இனப்படுகொலை செய்வதும் மூவாயிரம் ஆண்டு இனப்பகைமையின் தொடர்ச்சி. தமிழர்களுக்கு எதிராகக் கன்னடர், மலையாளி, தெலுங்கர் என யார் கிளம்பினாலும் அவர்களை இந்திய அரசு ஆதரிப்பதை நாம் நடைமுறையில் கண்டு வருகிறோம்.

அதே நோக்கில்தான் தமிழ்நாட்டு மீனவர்களைக் கொல்லும் சிங்களர்களை இந்திய அரசு ஆதரிக்கிறது. இந்திய அரசின் இந்த தமிழ் இன எதிர்ப்புக் கொள்கையின் நீட்சிதான் ஈழத்தமிழர்களை இனப்படுகொலை செய்யும் சிங்கள இனவெறி அரசுக்கு படைக்கருவிகள் வழங்கும் செயல்.

ஈழத் தமிழர்களின் அரசியல் உரிமை, மனித உரிமை ஆகியவற்றுக்காகத் தமிழ்நாட்டில் நாம் நடத்தும் போராட்டம் தமிழக உரிமைகளை மீட்பதற்கான போராட்ட உணர்வையும், இன ஒற்றுமையையும் வளர்க்கும் என்பதை மறந்துவிடக்கூடாது.

எழுந்துள்ள இன உணர்ச்சி, யாருடைய தேர்தல் அரசியலுக்கும் பயன்பட்டுப்போகும்படி விட்டுவிடக்கூடாது.

வரையறுக்கப்பட்ட தமிழ்த்தேசியக் கருத்தியலின் அடித்தளத்தில் தமிழர் என்ற இன எழுச்சி கட்டமைக்கப்பட வேண்டும் போராட்டம் தொடர்கிறது.

■

## தமிழினத்திற்கெதிராக நஞ்சு கக்கிய இந்து ஏடு எரிப்பு

ஈழத்தமிழர்கள் மீது சிங்கள அரசு நடத்தும் இனக்கொலைப் போரை ஞாயப்படுத்தியும், போர்நிறுத்தம் கோருவோரை இழிவுப்படுத்தியும், பொய்யுரைக்கூறி ***தி இந்து*** ஆங்கில நாளேட்டில் ஆசிரியர் குழுவைச் சேர்ந்த மாலினி பார்த்தசாரதி எழுதிய சிறப்புக் கட்டுரையில் இனவெறி நஞ்சு கக்கியிருந்தார்.

இதனைக் கண்டிக்கும் வகையில், தமிழ்த்தேசப் பொதுவுடைமைக் கட்சி முன்முயற்சியில் த.தே.பொ.க. மற்றும் பெரியார் தி.க. தோழர்கள் 16.10.2008 அன்று அதிகாலை 5.00 மணிக்கு ஈரோடு நகரில் வந்திறங்கிய இந்து நாளேட்டை மொத்தமாகக் கொளுத்தினர்.

இது தொடர்பாக த.தே.பொ.க. தோழர் செயக்குமார் , பெ.தி.க தோழர் குமரகுரு ஆகியோர் மீது பல்வேறு பிரிவுகளின் கீழ் தொடர்ந்தது காவல்துறை அன்று மாலையே பிணையில் தோழர்கள் விடுதலை செய்யப் பட்டனர்.





# அரசியல் நடிகர்களும் நடிகர்களின் அரசியலும்

க. அருணபாரதி

கடந்த நூற்றாண்டின் தொடக்க காலத்தில், தமிழ் மக்களிடையே பரவிக் கிடந்த அடிமைத்தனங்களையும் பல்வேறு மூடநம்பிக்கைகளையும் உடைத்தெறியவும், அவர்களிடையே அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் நாடகங்கள் மற்றும் தெருக்கூத்துக்கள் ஆகியவை பிரச்சார வடிவங்களாக திராவிட இயக்கத்தவரால் அறிமுகப் படுத்தப்பட்டன. பின்னர், காலப் போக்கில் வெகுசன மக்களின் ஊடகமாகிய வெள்ளித்திரையும் அப்பிரச்சாரத்திற்கு பயன் படுத்தப்பட்டது.

இந்தியத் தேசியத்தை எதிர்த்து வந்த திராவிட தேசிய அரசியல் நடைமுறையிலும் தத்துவவீதியிலும் வலுவில்லாத காரணங்களால் காலப் போக்கில் காலாவதியானது. திராவிட அரசியல் கட்சிகள், இந்தியத் தேசியத்திடமே சரணடைந்தன. ஆரியப் பார்ப்பனிய எதிர்ப்பு, இந்தியத் தேசிய எதிர்ப்பு ஆகியவற்றை கைவிட்டுவிட்டு இந்தியத் தேசியத்தோடு கலந்துவிட்ட திராவிட இயக்கம், தான் சீரழிந்ததோடு மட்டுமல்லாமல் சீரழிவு அமைப்புகள் புதிதாகத் தோன்றக் காரணமாகிவிட்டது.

அதன் எச்சங்கள் இன்று தமிழகத்தில் பலவகைகளிலும் பரவிக் கிடக்கின்றன. அதன் பரிணாம வளர்ச்சியால் தான் இன்று தமிழ் இளைஞர்கள் பலர், தன்னை ஆளவேண்டிய தலைவனை மக்கள் திரளில் தேடாமல் வெள்ளித்திரையில் தேடிக் கொண்டிருக்கின்றனர்.

தமக்கென தெளிவான தத்துவ மில்லாத காரணத்தாலோ என்னவோ தத்துவங்கள் மீது மக்களுக்கு நம்பிக் கையை ஊட்டாமல் தனி மனிதர்கள் மீது நம்பிக்கை ஊட்டின திராவிட இயக்கங்கள். தமிழக அரசியலில் நடைபெறும் இன்றைய கட்அவுட் அரசியல் சீர்கேட்டின் ஆரம்ப விதை அங்கு தான் விதைக்கப்பட்டது.

சுரண்டலையே அடித்தளமாகக் கொண்டு தொடர்ந்து செயல்படும் முதலாளிய பாணி அரசுகளால் ஓட்டாண்டி ஆக்கப்பட்டு வறுமையில் வாடும் உழைக்கும் மக்கள் காலங் காலமாக விடியலுக்காக ஏங்கிக் கிடக்கின்றனர். நடைமுறையில் செய்ய முடியாத பல சாகசங்களை திரைப் படங்களில் கணிணி உள்ளிட்ட தொழில் நுட்பங்கள் மூலம் செய்துவிட்டு அதன் விளைவால் கிடைக்கும் கவர்ச்சிகர



விளம்பரமும், நாயகன் என்ற பிம்பமும் ஒரு திரைப்பட நாயகனை இது போன்ற மக்களிடம் நன்கு அறிமுகப்படுத்தி விடுகின்றன.

இவ்வகை நாயகர்கள் கோடிகோடியாக சம்பளம் பெறுவதால் வருமானவரி அதிகமாகக் கட்ட வேண்டும். அதிலிருந்து தப்பிக்க வருமானவரித் துறை சில சலுகைகளை வைத்திருக்கிறது. அதன்படி இவர்கள் வருமானத்தில் சில பகுதிகளை நாட்டு நலத்திட்டப் பணிகளுக்கோ அல்லது மக்களுக்கு உதவிகள் வழங்குவதன் மூலம் வரி விலக்குப் பெற்றுவிடலாம். வள்ளல் என்ற பெயரையும் ஈட்டி விடலாம்.

வருமானவரித் துறையிலிருந்து வரி கட்டாமல் விலக்கு வாங்கிக் கொள்ளவேண்டும் என்கிற சுயநலத்தோடு நடிகர்கள் தங்களின் ரசிகர்கள் மீதும் மக்களின் மீதும் திடீர் அக்கறையுடன் தையல் எந்திரங்கள், மிதிவண்டிகள், ஊனமுற்றோர் வாகனங்கள் உள்ளிட்டவற்றை வழங்குகின்றனர். இவ்வகை நடிகர்களை வாரிக் கொடுக்கும் வள்ளல்களாக ஊடகங்கள் காட்டுகின்றன. இது போன்ற ஏதோவொரு நாயகனால் வறுமையே வாழ்வாகக் கொண்ட நமது நிலை மாறாதா, என்ற உழைக்கும் மக்களின் நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் தான் திரை நாயகர்கள் அரசியல் நாயகர்களாக பரிணமிப்பதின் பின்னணியாகிவிட்டது.

இவற்றையெல்லாம் அறியாமல், திரைப்படங்களில் கதாநாயகத்தனம் (ஹீரோயிசம்) என்ற பெயரில் நியாயப்படுத்தப்பட்டு வரும் தனிமனித துதிப்பாடல்கள், பாலியல் சீண்டல்கள் போன்றவற்றால் கவரப்பட்ட விளிம்புநிலை இளைஞர்கள் ரசிகர் மன்றங்கள் என்ற பெயரில் பணம் சம்பாதித்துக் கொடுக்கும் கூலியற்ற அடிமைகளாயினர். திரையில் கிருஷ்ணர் வேடமிட்டு நடித்து வந்த என்.டி.ஆர். வறுமையில் கிடந்த ஆந்திர மக்களைக் காக்க வந்த கடவுளாகவே தொடர்ந்து ஊடகங்களால் கட்டமைக்கப்பட்டார் ஆந்திராவின் முதல்வராக மக்கள் தேர்ந்தெடுத்ததற்கு இந்த பிம்பம் முக்கிய பங்காற்றியது.

பல்லாண்டுகளுக்கு முன்பே தமிழக மக்களின் நம்பிக்கையை இழந்த இந்தியத் தேசியக் கட்சிகள் மீதும், பல்லாண்டுகளாக தமிழகத்தை தொடர்ந்து ஆண்டு வந்த திராவிடக் கட்சிகள் மீதும் மக்கள் வெறுப்பு கொண்டுள்ளனர். தமிழகக் கங்காணி அரசியலில் காரணத்தால் அந்த இடம் தொடர்ந்து வெற்றிடமாகவே இருந்தது. அதனை பயன்படுத்திக் கொள்ள *தினமலர்* போன்ற பார்ப்பனிய ஊடகங்கள் திரைத்துறை நாயகர்களை அவ்விடத்தில் வைத்து அழகு பார்ப்பது வழக்கமான ஒன்றானது. இவ்வாறு செய்வதன் மூலம் தமிழகத்தில் வலுவுடன் உள்ள பார்ப்பனிய எதிர்ப்பு சிந்தனைகளை இதுபோன்ற விளிம்பு நிலை நடிகர்களின் அரசியல் கட்சிகளின் மூலம் எளிதில் தூக்கியெறிந்துவிடலாம் என்ற எண்ணம் காரணமாக இருக்கக்கூடும் . இவற்றுக்கு ஏற்றாற்போலவே தமிழகத்தின் திரைத் துறையும் இருக்கிறது. ஏனெனில் தமிழ் திரையுலகிற்கும் தமிழக அரசியலிற்கும் உள்ள தொடர்புகள் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இந்தியத் தேசியத்திற்கு கங்காணிகளாக செயல்பட தமிழகத்திற்கு 5 முதல்வர்கள் இத்துறையிலிருந்து தான் சென்றிருக்கிறார்கள். இன்னும் ஏராளமான வருங்கால முதல்வர்களும் இத்துறையில் அதிகரித்துக் கொண்டே போகிறார்கள். சில நடிகர்கள் குறிப்பிட்ட சமூகத்தின் மீது நம்பிக்கை வைத்து அரசியலில் சாதியை நம்பி இறங்கினர். பரவலான ரசிகர் மன்றங்களைக் கொண்டவர்கள் என்ற முறையில் பல ஆண்டுகளாக முன்னிலைப் படுத்தப் படும் நடிகர்கள் ரஜினிகாந்த் மற்றும் விஜயகாந்த் ஆவர்.

ஆன்மிகம் என்ற பெயரில் இந்துமதப் பார்ப்பனியத்தின் மறைமுக பாதுகாவலனாக விளங்கிய நடிகர் ரஜினிகாந்த், நாடாளுமன்றத் தேர்தலின் போது பச்சையாக பா.ச.க.விற்கு ஆதரவு தெரிவித்து ஏற்கெனவே தன்னை தமிழ் மக்களிடமிருந்து தனிமைப்படுத்திக் கொண்டார். காவிரிப் பிரச்சினையில் திரையுலகமே ஒன்று திரண்டு நெய்வேலியிலிருந்து கர்நாடகத்திற்கு அளிக்கப்படும் மின்சாரத்தைத் தடுத்து நிறுத்த ஓர் அடையாளம் போராட்டம் நடத்திய போது தான் மட்டும் வராமல் உண்ணாவிரதம் இருந்து கன்னட விசுவாசத்தைக் காண்பித்தார். ஒகேனக்கல் பிரச்சினையில் தானும் குழம்பி மக்களையும் குழுப்பி கர்நாடக மக்களிடம் மன்னிப்புக் கேட்டுத் தமிழ் மக்களிடம் எளிதில் அம்பலப்பட்டுப் போனார்.

'அரசியலுக்கு வருவேன்... ஆனா வரமாட்டேன்'. என்ற குழப்ப பதிலையே அளித்து வந்த இவரை நம்பி கோவையில் ஆர்வக்கோளாறால் உந்தப்பட்ட இவரது ரசிகர்களே தனியாக தேசிய திராவிட மக்கள் முன்னேற்றக் கழகம் என்ற பெயரில் கட்சி ஒன்றை தொடங்கினர். அதனைக் கண்டிப்பது போல அவர்கள் மீது நடவடிக்கையும் எடுத்துவிட்டு நான் அரசியலுக்கு வருவதை யாராலும் தடுக்க முடியாது என்று அரசியல் தூபமிட்டு அறிக்கையும் விட்டுவிட்டு குழப்பத்தின் உச்சியில் ஒளிந்து கொண்டிருக்கிறார் இவர்.

ஆரம்ப கட்டத்தில் சிவப்பு மல்லி, ஏழை ஜாதி போன்ற திரைப் படங்களில் மக்கள் நலனுக்காக போராடுபவராக தம்மைக் காட்டிக் கொண்டவர் நடிகர் விஜயகாந்த் , பின்னாட்களில், காவல்துறை அதிகாரியாக பல படங்களில் நடித்து மனித உரிமை மீறல்களை நியாயப் படுத்துவதிலும் முஸ்லீம் சமுதாயத்தினரை தீவிரவாதிகளாக சித்தரித்து இந்தியத்தேசிய வெறியைக் கட்டமைப்பிலும் கவனம் செலுத்தினார். நரசிம்மா என்ற திரைப்படத்தில் இந்தியாவில் ஒரு முஸ்லீம் குடியரசுத்தலைவராக முடியும். ஆனால் பாகிஸ்தானில் ஒரு இந்து குடியரசுத் தலைவராக முடியுமா என்று இந்து முன்னணியின் பிரச்சார பீரங்கியாகவே முழங்கினார். திரையுலகில் தான் நடித்த படங்களில் ஏற்பட்ட தொடர் தோல்வியால் இவரது தொழில் அரசியலாக மாறியது. இங்கு நடைபெறும் கங்காணி அரசியலையும் கவர்ச்சிகர அரசியலையும் புரிந்து

கொண்டு தெளிவாகவே கட்சி தொடங்கினார் விஜயகாந்த்.

சோதிடர் கூற்றுப்படி நல்ல நேரமும் நாள் நட்சத்திரமும் குறித்து விட்டு மேடையேறி அம்மேடையில் பெரியாரின் படத்தையும் வைத்து கட்சியை ஆரம்பித்த தினத்திலேயே தன் குழப்பவாத கொள்கைகளை மறை முகமாக வெளிப்படுத்தினார். கூட்டணி பேரங்கள் பேசுவதற்கு ஏற்ற வகையில் கடந்த சட்டமன்றத் தேர்தலில் யாருடனும் கூட்டணி வைக்காமல் தனித்து போட்டியிட்டு முதல்வராவேன் என்ற கனவுடன், போட்டியிட்டு தான் மட்டும் சட்டமன்ற உறுப்பினரானார். அத்தேர்தலில் அ.தி.மு.க. பல இடங்களில் தோற்றுப் போகும் அளவிற்கு கணிசமான வாக்குகளையும் பெற்றார். தனிக்கட்சியின் ஆட்சி இனி தமிழகத்தில் கிடையாது என்று மக்கள் தெளிவாகத் தீர்ப்புரைத்த பின்பும் கூட மக்களுடன் மட்டுமே கூட்டணி என்று சொல்லி வந்தார். ஆனால் சொல் வேறு செயல் வேறு என்பது நடிகருக்கும் தேர்தல் கட்சித்தலைவர்களுக்கும் கைவந்த கலையாயிற்றே. தேர்தல் கூட்டணிக்காக மார்க்சிஸ்ட் கட்சித் தலைவர் வரதராஜனுடனும், தில்லிக்கே சென்று இந்தியத் தேசியக் கட்சி களுடனும் பேச்சுவார்த்தை நடத்தி பேரம் பேசினார். இந்தியத் தேசியத்திற்கு செய்யும் கங்காணிசேவையை கூட்டணிக் கட்சிகள் இன்றி தான் ஒருவனே மேற்கொள்வேன் என்று பறை சாற்றி அதன்மூலம் இந்திய அரசிடம் வெகுமதி பெறுவது தான் இவரின் நோக்கமே தவிர வேறென்ன?

ஊழலை ஒழிப்பேன் என்று எங்கு சென்றாலும் பேசித் திரியும் இவரது கட்சியில் தான் தி.மு.க., அ.தி.மு.க. உள்ளிட்ட திராவிடக் கட்சிகளின் ஆட்சியில் ஊழல் செய்து விட்டு ஓடி ஒளிந்தவர்கள், தேடி வந்து இணைந்து கொண்டிருக்கின்றனர். அ.தி.மு.க. ஆட்சியில் அமைச்சராக இருந்த போது வருமானத்தை மீறி ரூ. 3.72 கோடி அளவுக்கு சொத்து சேர்ந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட முன்னாள் அமைச்சர் கு.ப.கிருஷ்ணன், அதே ஆட்சியில் தனியார் ஆசிரியர் பயற்சிக்கல்லூரிகளுக்கு அனுமதி வழங்கியதில் பெரும் ஊழலில் ஈடுபட்டு பின்னர் அது நிரூபிக்கப்பட்டு சிறைத் தண்டனை பெற்று வெளியே வந்த முன்னாள் அமைச்சர் பொன்னுச்சாமி உள்ளிட்டவர்கள் தே.மு.தி.க.வில் இணைந்தது ஊழலை ஒழிக்கத் தான் என்பதை நாம் நம்பித்தான் ஆக வேண்டும் !

இவ்வாறு வார்த்தைக்கு வார்த்தை ஊழலைப் பற்றி பேசிக் கொண்டிருக்கும் விஜயகாந்த் அவரது துறையான திரைத்துறையில் பதுங்கிக் கிடக்கும் கருப்புப் பணத்தை பற்றி மட்டும் வாய் திறக்காமல் இருப்பதற்கு காரணம் இல்லாமல் இல்லை. திரைத்துறை மட்டுமல்லாமல், பொறியியல் கல்லூரி, பண்ணை உள்ளிட்ட பல்வேறு வகைகளில் சேர்த்து வைத்திருக்கும் கருப்புப் பண மூட்டையையே அவர் சுமந்து கொண்டுள்ளார் என்பது யாரும் அறியாததல்ல. திரைப்படத் தயாரிப் பாளர்கள் தற்கொலை செய்து கொள்ளும் அளவிற்கு படங்கள் நஷ்டம் அடைவதற்குக் காரணம் நடிகர்களின் சம்பளமே என்று விவாதம் எழுந்த போது கூட சுமார் 3 கோடி ரூபாய் கொடுத்தால் தான் படம் நடிப்பேன் என்று அடம்பிடித்து திரைத்துறையை காப்பாற்றியர் இவர்.

அண்மையில் நடந்த குண்டு வெடிப்பு சம்பவங்களைப் பற்றி கேள்வி ஒன்றிற்கு பதில் அளிக்கையில் மறுபடியும் எமர்ஜென்சி வந்தால் தான் நாடு உருப்படும் என்று சொன்ன இவரது ஒற்றை பதிலே இவரது சனநாயகத் தன்மை என்னவென்று அளந்து காட்டுகின்றது. பல மாவட்டங்களில் பல்வேறு கட்சிகளிலும் பொறுப்புகள் வகித்து விட்டு ஊழல் குற்றம் சாட்டப்பட்டவர்களும் பதவி கிடைக்காமல் ஏமாந்து போனவர்களும் தே.மு.தி.க.வையே தங்கள் சரணாலயமாக கருதிக் கொண்டிருக் கின்றனர்.

தி.மு.க. அ.தி.மு.க. உள்ளிட்ட அனைத்துக்கட்சி அதிருப்திப் பிரிவினரும் இங்கு குவிவதால் பதவி பேரமும் அதற்காக பெரும் பண பேரமும் இங்கு சகஜமாகவே நடக்கிறது. பணம் இருந்தால் தான் பதவி என்கிற நிலையே தே.மு.தி.க.வில் நீடிக்கிறது. இதனா லேயே கோஷ்டிகள் என்ற பெயரில் இவரது கட்சிக்குள் எந்நேரமும் புகைச்சல் இருக்கிறது. நிர்வாகிகள் நியமிப்பதில் பணம் வசூலிக்கலாம் என்ற காரணத்தால் தமிழகத்தில் உள்ள 31 மாவட்டங்களை 57 மாவட்டங்களாக பிரித்த பெருமை விஜயகாந்தின் தே.மு.தி.க.விற்கு உண்டு. அனைத்துப் பதவிகளுக்கும் பணம் என்ற அடிப்படைக் கொள் கையைக் கட்சியில் புகுத்தியுள்ளார். கட்சியின் தலைமை வசூல் ஏஜெண்டாகச் விஜயகாந்தின் மைத்துனர் சுதீஷ் செயல்படுகிறார் என்று அவரது கட்சி வளர்ச்சிக்கு உழைத்து பின்னர் கட்சியிலிருந்து நீக்கப்பட்ட திருமயம் அழகுராஜ் என்பவர் கூறுகிறார். ( பார்க்க தமிழன் எக்ஸ்பிரஸ் http/ valai.blogspirit.com/archive/2007/05/ 25 vijayakanth.com) ஒரு வேளை இவர் ஆட்சியைக் கைப்பற்றினால் அரசியல் தான் செலவு செய்த லட்சங்களை கோடிகளாக திரும்ப எடுத்துக் கொள்ளமாட்டார் என்று அவரது கட்சியினர் கூட உத்தரவாதம் கொடுக்கமுடியாது. இலவசக் கல்வி வேண்டும் என்று மக்களிடையே பேசும் இவர், தான் நடத்தும் பொறியியல் கல்லூரியில் நடக்கும் கல்விக்கட்டணக் கொள்ளை பற்றி வாய் திறக்கவே மாட்டார்.

குடும்ப அரசியலை ஒழிப்பேன் என்று தி.மு.க.வையும், பா.ம.க.வையும் பார்த்து விமர்சனம் செய்கிறார் விஜயகாந்த். நல்லது தான். ஆனால் அவரது கட்சியில் நடப்பதற்கு பெய ரென்ன? அவரது மனைவி பிரேமலதா தே.மு.தி.க.வில் செலுத்தும் ஆதிக்கம் அழகிரி தி.மு.க.வில் செலுத்தும் ஆதிக்கத்திற்கு சற்றும் குறையாதது. மேலும் அவர் மைத்துனர் சுதீஷ் மாநில இளைஞரணி செயலாளர். இவர் கடந்த சட்டமன்றத் தேர்தலில் குடியாத்தம் தொகுதியில் தே.மு.தி.க. சார்பில் போட்டியிட்டு தோற்றும் போனார். இது

பற்றி செய்தியாளர்கள் கேள்வி எழுப்பிய போது வளர்ந்த கட்சியில் உள்ள குடும்ப அரசியல் நிலைமைகளைத் தான் சொன்னேன். இதுஇப்போதுதான்வளர்ந்து வரும்கட்சி என்று மழுப்பியவாறு பதிலளித்தார். இது தான் இவரது அரசியல் ஒழுக்கம்.

ஈழத்தில் தமிழர்கள் மீது இனப்படுகொலையை நடத்தி வரும் சிங்கள அரசிற்கு இந்திய அரசு இராணுவ உதவிகள் செய்வதை தமிழகக் காங்கிரஸ் கட்சியே நியாயப்படுத்தி பேசாத பொழுது முதல் தமிழக அரசியல் வாதியாக வரவேற்றுப் பேசியர் இவர் தான். ( பார்க்க : தினக்குரல் இலங்கைத் தமிழ் நாளேடு http/www.thinakkural.com:80/news/2008/5/8/importantnews page 50533.htm) பின்னர் தமிழகத்தில் ஈழத்தமிழர்களின் இன்னல்களுக்காக ஆதரவு அலை எழுந்தபோது தனது குரலை மாற்றி இளைஞரணி மாநாட்டின் மேடையில் இலங்கைக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ செய்யப்படும் ராணுவ உதவிகளை இந்திய அரசு நிறுத்திக் கொள்ளவேண்டும் என்று பேசினார். மேலும் இது பற்றி யாரேனும் கேட்டுவிட்டால், தனது மகனுக்கு பிரபாகரன்என பெயர் சூட்டியுள்ளதைத் தெரிவிப்பார். 'கேப்டன் பிரபாகரன்' என்ற தனது வெற்றிப் படத்தின் நினைவாக அப் பெயரை வைத்தாரா அல்லது தமிழுணர்வில் வைத்தாரா தெரியாது.

அண்மையில் தனது கட்சியின் இளைஞரணி மாநாடு சென்னையில் நடந்தபோது அவரது தொண்டர்கள் , தே.மு.தி.க. கட்சிக்கு மட்டுமல்ல டாஸ்மாக்மூலமும் மறைமுகமாக தமிழக அரசிற்கும் பணத்தை வாரி இறைத்தனர். மாநாட்டு முடிவில் வரலாறு காணாத அளவிற்கு தீவுத்திடலில் கிடந்த சாராய புட்டிகள் இதனை பறைசாற்றுகின்றன. இம்மாநாட்டிற்காக ரூ.300 கொடுத்து இலவச உணவும் சாராயமும் கொடுத்து இளைஞர்களை அழைத்து வந்து சென்னையை மிரளவைத்து சாதனை படைத்திருப்பதாக இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளேடு இவருக்குப் புகழாரம் சூட்டுகிறது.

விஜயகாந்தின் கட்சிக்கு கிடைத்த வரவேற்பை (?) பார்த்து பிரமித்துப்போன நடிகர் சரத்குமார் தன் சாதி வாக்கு வங்கியை நம்பி அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி என்ற கட்சியைத் தொடங்கினார். நடிகர் கார்த்திக் சாதி வாக்குகளை நம்பி அகில இந்திய நாடாளு மக்கள் கட்சி என்ற கட்சியைத் தொடங்கினார். இவர்களது கட்சிகளுக்கு முன்னால் போடப்படும் அகில இந்திய என்ற வார்த்தை தாம் எந்த வகையிலும் மற்ற கங்காணிக் கட்சிகளுக்கு சளைத்தவர்கள் அல்லர் என்று இந்தியத் தேசியத் தலைமைக்கு பறைசாற்றுவதற்காகத் தான். இதில் சரத்குமார் நேரடியாகவே துக்ளக் சோவின் ஆலோசனைகளை பெற்றுக் கட்சி நடத்துகிறார். இவர்கள் மட்டுமில்லாமல் ஏற்கெனவே தேர்தல் அரசியலில் இருக்கும் லட்சிய தி.மு.க.வின் விஜய டி.ராஜேந்தர் உள்ளிட்ட பலரும் இன்னும் வருங்கால முதல்வர் கனவில் தான் தங்கள் நாட்களைக் கடத்துகிறார்கள்.

அண்மையில் சென்னை லயோலா கல்லூரி மாணவர்கள் எடுத்த ஒரு கருத்துக்கணிப்பில் நடிகர் விஜய், நடிகர் ரஜினிகாந்தை விட சில புள்ளிகள்அதிகம் பெற்று மக்களிடையே பிரபலமடைந்திருக்கிறார் என்பது தெரியவருகிறது. இதனை முன்னிட்டு அன்றைய தினமே மாலைமலர் நாளிதழில் நடிகர் விஜயின் ரசிகர் மன்றத்தினர் நடிகர் விசயை வருங்கால முதல்வர் என்று வர்ணித்து விளம்பரம் கொடுத்திருந்தனர். அரசியலில் எனக்கு ஆர்வமில்லை என்று வெளிப்படையாக எந்தவொரு நடிகரும் தெரிவிப்பதில்லை. ஆனால் ஆர்வமுண்டு என்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்திக் கொண்டு அதன்மூலம் ரசிகர்களை தக்க வைத்துக் கொள்ளும் திரைமறைவு அரசியல்தான் இவர்களுக்குப் பிடித்திருக்கிறது.

ஏற்கெனவே உருப்படியான கொள்கைகளும் செயல்திட்டங்களும் இல்லாமல் தமிழக தேர்தல் கட்சிகள் மக்கள் போராட்டங்களால் திணறிக் கொண்டிருக்க, இது போன்ற கொள்கைகளற்ற நடிகர்களின் கவர்ச்சிகர அரசியல் கட்சிள் புதிது புதிதாக முளைப்பது மக்களை ஏமாற்றுவதற்குத் தானேத் தவிர மக்களுக்காக உழைப்பதற்கு அல்ல. இவ்வகை கட்சிகள் செய்யும் அரசியல், திராவிட அரசியல் கட்சிகளுக்கு மாற்றான அரசியல் அல்ல. சீரழிந்த வடிவத்தில் உள்ள திராவிடஅரசியலின் பரிணாமமே ஆகும்.

அடுத்து வரும் சட்டமன்ற நாடாளுமன்றத் தேர்தல்களில் இவர்கள் கணிசமான வாக்குகளைக்கூட பெறலாம். ஆனால் அவ்வாக்குகள் ஒவ்வொன்றும் இவர்கள் மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கை அல்ல. திராவிட கட்சிகள்மீதும் இந்திய தேசிய அரசின் மீதும் மக்களுக்குள்ள வெறுப்பும் ஏமாற்றமும் தான் இவருக்கு ஓட்டுப்பிச்சை யாக விழுகின்றது. ■

## ஆவணப்படம் திரையிடல் திறனாய்வு

தமிழ்க் கலை இலக்கியப் பேரவை தஞ்சை கிளையும் , தமிழ்ப் பல்கலைக்கழக அறிவியல் தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சித்துறையும் இணைந்து நடத்திய ஆவணப்படம் திரையிடல் - திறனாய்வு அரங்கு 25.10.2008 அன்று மாலை தமிழ்ப் பல்கலைக்கழக அரண்மனை வளாகக் கூடத்தில் சிறப்பாக நடைபெற்றது.

அமர்நாத்தின் **வேர் களைத் தொலைக்காதீர்** என்ற ஆவணப்படமும் , ம.வெற்றி வீரனின் **பென்சில்** குறும் படமும் திரையிடப்பட்டன. அதன்பிறகு திறனாய்வு நடை பெற்றது. கூட்டத்திற்கு புழவர் கோ. நாகேந்திரன் தலைமைதாங்க திரு அ. தனபால் வரவேற்புரை நிகழ்த்தினார். திரு தெ. காசிநாதன், திரு. மா. இராமதாசு ஆகியோர் படங்களை திறனாய்வு செய்து உரையாற்றினர். புலவர் சிவநேசன், பேராசிரியர் அதியமான், எழுத்தாளர் தஞ்சை சாம்பான் ஆகியோர் திறனாய்வு அரங்கில் பங்கேற்று கருத்துரை வழங்கினர். நிறைவில் க. செந்தில்குமார் நன்றி கூறினார்.

# அமெரிக்க நிதி நெருக்கடியின் இன ஒதுக்கல்



வட அமெரிக்காவிலும், பல வளர்ச்சியடைந்த நாடுகளிலும் இன்று ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக் கடியும் பங்குச் சந்தையின் வீழ்ச்சியும் இந்த நூற்றாண்டின் முக்கியமான வரலாற்றுநிகழ்வு. முதலாளித்துவம்தனது முற்றுரிமை - நிதி மூலதன காலகட்டத்தில் 'சோசலிசத்தை' நோக்கித் திரும்பி யுள்ளது! ஆனால் இது உழைக்கும் மக்களுக்கான சோசலிசம் அல்ல. இந்த 'சோசலிசம்' பெரும் கூட்டுக் குழுமங் களையும், பங்குச் சந்தையில் கொள்ளை இலாபம் அடித்த வங்கிகளையும் காப்பாற்று வதற்கான சோசலிசம்.

அரசு பிரச்சினைகான தீர்வல்ல: பிரச்சினையே அரசுதான் என்ற தாராளமயக் கொள்கை 1980 களில் அதிபர் ரீகனால் பரப்பப்பட்டது. பொருளாதாரத்தில் அரசின் கட்டுப் பாடுகள் நீக்கப்பட்டு தங்கு தடையற்ற சந்தையின் ஆதிக்கத்திற்கு வழிவகை செய்யப்பட்டது. இன்று சந்தையைக் காப்பாற்ற அரசு களமிறங்கியுள்ளது. உலகமய நிதிமய வளர்ச்சிக் கட்டத்தில்தேவையான பொழுது பணத்தைப் புழக்கத்தில் விட்டு முதலாளித்துவ அமைப்பைக் காப்பாற்றுவதே அரசின் பணியாகி விட்டது.

**▪ வான்முகில்**

நெருக்கடி ஏற்படும் பொழு தெல்லாம் முதலாளித்துவ அமைப்பு அந்தச் சுமையை உழைக்கும் மக்களின்மீது திணிக்க பல்வேறு தந்திரங்களைக் கையாளுகிறது. ஒரு தேசத்தின் வளத்தில் உழைக்கும் வர்க்கம் உள்ளிட்ட சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் சொந்தமாக இருப்பது அத்தேசத்தின் கடன் மட்டுமே என்றுமார்க்ஸ் கூறியது இன்று வரை உண்மையாக உள்ளது. தேசத்தின் கடன் முழுவதும் உழைக்கும் மக்களின் தலையில் கட்டப்படுகிறது. ஒரு சில தனி நபர்களிடம் மட்டுமே தேசிய வளம்

குவிக்கப்படும்போது அடித்தட்டு மக்களின் மீது சுமத்தப்படும் கடன் சுமையின் அளவு மட்டுமே நிலைமைக்கு ஏற்றபடி கூடுகிறது ; அது உண்மையில் குறைவதே இல்லை.

கடந்த ஏழு ஆண்டுகளில் வட அமெரிக்காவின் 400 பணக்காரர் களுடைய சொத்தின் மதிப்பு 670 பில்லியன் டாலர் உயர்ந்துள்ளது. 2007ஆம் ஆண்டின் இறுதியில் இவர்களது சொத்தின் மதிப்பு 1.5 ட்ரில்லியன் டாலராக இருந்தது. (1ட்ரில்லியன் = 1 இலட்சம் கோடி)ஒரு விழுக்காடு மக்களின் வருமானம் மொத்த அடித்தட்டு மக்களில் 50 விழுக்காட்டினரின் வருமானத்தைவிட அதிகமாக உள்ளது அதுபோல ஒரு விழுக்காடு மக்களுடைய சொத்தின் மதிப்பு 90 விழுக்காடு அடித்தட்டு மக்களின் மொத்த சொத்து மதிப்பை விட அதிகமாக உள்ளது.

1970 களில் ஏற்பட்ட பொருளாதார பின்னடைவிற்குப் பின்னர் வட அமெரிக்காவாழ் அடித்தட்டு மக்களின் குடும்ப வருமானம் உண்மையில் அதிகரிக்கவே இல்லை. அடித்தட்டு மக்கள் கடன் வாங்கியே வாழ்க் கையை நடத்துகின்றனர். வட அமெரிக்காவில் மொத்த மக்கள் தொகையில் 66.4% வெள்ளை இனத்தவர். 13.4 % கறுப்பின மக்கள் 14.8% லத்தீன் அமெரிக்க நாடுகளி லிருந்து புலம் பெயர்ந்து வாழ்பவர்கள். இவர்களிடையே நிலவும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் காரணமாக வெள்ளை இனத்தவர் வாழும் குடியிருப்புகள் ஒவ்வோர் நகரத்திலும் தனித் தனியாகவே உள்ளன. இன ஒதுக்கலும் வஞ்சனையும் கறுப்பின மக்களை தொடர்ச்சியாக பாதித்து வருகின்றன. பொருளாதார ஏற்றத்தாழ்வுகளால் கறுப்பினத்தவர் மட்டுமின்றி புலம் பெயர்ந்து வாழும் லத்தீன் அமெரிக்க மக்களும் பெரும் பாதிப்புகளுக்கு ஆளாகியுள் ளனர்.வெள்ளை இனத்தவரில் 75விழுக்காட்டினர் சொந்த வீடுகளில் வசிக்கிறார்கள். கறுப்பினத் தவரில் 48 விழுக்காட்டினர் மட்டுமே சொந்த வீடுகளில் வசிக்கிறார்கள் . இது 2006ஆம் ஆண்டுக்கான புள்ளி விபரம்.

வரம்பின்றி வழங்கப்பட்ட இரண்டாம் நிலை வீட்டு அடமானக் கடன்கள் தான் (Sub-Prime Mortgage Loan) வடஅமெரிக்காவின் இன்றைய பொருளாதார வீழ்ச்சிக்கு முக்கிய காரணம். இந்த வீட்டு அடமானக்கடன்கள் கடனைத் திருப்பித் தரும் திறனையும் வீட்டின் உண்மையான மதிப்பையும் கணக்கிட்டு முறையாக வழங்கப்படும் வங்கிக் கடன்கள் அல்ல. கடனைத் திருப்பிக் கட்டும் திறனுடையவர் களுக்கு வங்கிகள் வழங்கும் முதன்மைக் கடன்களால் (Prime Loan) இத்தகைய பாதிப்புகள் ஏற்படுவதில்லை. இரண்டாம் நிலை அடமானக்கடன்கள் தரகர்களால் நிதி நிறுவனங்களிடமிருந்து ஏற்பாடு செய்து தரப்படுகின்றன. தரகர்கள் இத்தகைய கடன்களை 'நின்ஜா' கடன்கள் என ஏளனமாக அழைக் கிறார்கள். எந்த வேலையும், வருமானமும், சொத்தும் இல்லாதவர் களுக்கு வீட்டு அடமானக் கடன்கள் வழங்கப்பட்டதாக கதைகள் பரப்பப்பட்டன. (Ninja - No Income, No Job, No Asset) இத்தகைய கடன்களால் அடகு வைத்த தமது சொந்த வீடுகளை இழந்ததில் பெரும்பான்மையோர் கருப்பின மக்களே. நின்ஜா கடன் கருப்பின மக்களின் சொத்துக் களையும் சொந்த வீடுகளையும் பறிப்பதற்கான திட்டமாக செயல்படுத்தப்பட்டது.

ஆனால் கடன் பெறத்தகுதியற்ற கறுப்பின மக்களுக்கு கடன் தந்ததாலேயே இந்தப்பெ பாருளாதார நெருக்கடி ஏற்பட்டதாக பரப்புரை செய்யப்பட்டது. அண்மையில் வட அமெரிக்க வரலாற்றில் முன்னெப்போது மில்லாத படி பல லட்சம் கறுப்பின மக்கள் நின்ஜா கடன்களால் தங்களது வீடுகளை இழந்துள்ளார்கள்.

இரண்டாம் நிலை அடமானக் கடன்கள் மிகுந்த எச்சரிக்கையுணர் வோடு குறைந்த அளவில் தேவைப்படும் ஒரு சிலருக்கு மட்டுமே தரப்பட்டிருக்க வேண்டும். அதிகமான லாபம் பெற வேண்டும் என்பதற்காக கட்டுப்பாடற்று வரம்பு மீறி இந்த கடன் முறை பயன் படுத்தப்பட்டுள்ளது. இந்த நின்ஜா கடன் 1994 ஆம் ஆண்டு 35 பில்லியன் டாலராக இருந்தது. இதுவே 2005 ஆண்டு 665 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது. 1998 ஆம் ஆண்டு மொத்தம் தரப்பட்ட அடமானக் கடன்களில் , இரண்டாம் நிலை அடமானக் கடனின் பங்கு 10 விழுக்காடாக இருந்தது. இதுவே 2006 ஆம் ஆண்டு 25 விழுக்காடாக அதிகரித்தது. வங்கிகளின் செயல் பாடுகள் கட்டுப்பாட்டுச் சட்டங்களின் மூலம் வெகுகாலமாக அரசின் கண்காணிப்பின் கீழ் இருந்து வருகின்றன. ஆனால் அடமானக் கடன் தருகின்ற நிறுவனங்களின் செயல்பாடுகள் அரசின் கட்டுப் பாட்டிற்குள் கொண்டு வரப் படவில்லை. வீடுகளின் விலை வேகமாக அதிகரித்து வந்த வேளையில் குடும்ப வருமானம் அதிகரிக்க வில்லை.

மொத்த வருமானத்தில் 50 விழுக்காட்டிற்கும் அதிகமாக வீட்டிற்காக செலவிட்ட குடும்பத்தாரின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்தது. இத்தகைய குடும்பங்களின் எண்ணிக்கை 2005 ஆம் ஆண்டு 17 மில்லியனாக இருந்தது. இந்த வாய்ப்பான சூழ்நிலையைப் பயன்படுத்தி அடமானக்கடன் தரும் நிறுவனங்கள் அதிக லாபம் பெற இரண்டாம் நிலை அடமானக்கடன் முறையைப் பயன்படுத்தினர். அதிக வட்டி அடமானக்கடன்களை கறுப்பினத் தவரில் 54.7 விழுக் காட்டினர் வாங்கியுள்ளனர். வெள்ளையினத் தவரில் 17.2 விழுக்காட்டினர் மட்டுமே வாங்கியுள்ளனர்.

அதிக வட்டிக் கடன்களைக் கட்ட முடியாமல் கறுப்பினத்தவர் இழந்துள்ள சொத்தின்மதிப்பு 21,300 கோடி (213 பில்லியன் டாலர்) டாலர்.

இந்தக் தரகர்கள் திட்டமிட்டு கறுப்பின, கலப்பின மக்களை வஞ்சித்த

விதத்தைப் பார்ப்போம்.

வீட்டு உரிமையாளர் ஆவதே வட அமெரிக்காவில் பொருளாதார சமத்துவத்தை அடைவதற்கான அடிப்படைத் தேவையாக உள்ளது.

டெட்ராய்ட் நகரின் எந்த மூலையிலும் நீக்ரோக்கள் தங்களிடம் உள்ள பணத்தைக் கொண்டு வீட்டை வாங்கவும், வாடகைக்குப் பெறவும் கூடிய நாள் வரவேண்டும் என்பதே என் கனவு என்று மார்ட்டின் லூதர் கிங் 1963 ஆம் ஆண்டு கூறினார். ஆனால் 45 ஆண்டுகளுக்குப் பிறகு டெட்ராய்ட் நகரில்தான் இன்று கறுப்பின மக்கள் மிக அதிகமான நின்ஜா கடன்களைப் பெற்றுள்ளதால் தங்களது வீடுகளை இழந்துள்ளார்கள். அதாவது அதிக வட்டித் தொகையைக் கட்ட முடியாமல் அடமானம் வைத்த வீட்டை மீட்க முடியாமல் வீடுகளை இழந்துள்ளார்கள். வீட்டு உரிமையாளராகும் கறுப்பினத் தவரின் கனவு திட்டமிட்டு அழிக் கப்பட்டது எவ்வாறு?

முதலாவதாக கறுப்பின மக்களில் 55 விழுக்காட்டினர் சொந்த வீடுகளை வாங்குவதற்கு குறைந்த வட்டியில் வழங்கப்படும் முதன்மைக் கடனை பெறத் தகுதியுடையவர்களாக இருந்தும், இவர்கள் பல்வேறு தந்திர மொழிகளால் அதிக வட்டி கட்ட வேண்டிய இரண்டாம் நிலை கடன் களைப் பெறும்படி வஞ்சனையாக ஏமாற்றப்பட்டுள்ளனர். இரண்டாவதாக இரண்டாம் நிலை அடமானக் கடனுக்கான வட்டி தொடக்கத்தில் மிகக் குறைவாக உள்ளதாகக் கூறியே அவர்களை ஈர்க்கின்றனர். இந்த கடனுக்கான மாதத் தவணையில் அவர்கள் செலுத்த வேண்டிய உரிமையும், காப்பீட்டுத் தொகையையும் கணக்கில் காட்டாமல் இப்படிச் செய்கின்றனர். நீண்ட காலத்தில் (15-30 ஆண்டுகள்) திருப்பி செலுத்தக்கூடிய இத்தகைய கடன்களை தரகர்களை நம்பி வாங்கும் கறுப்பினத்தவர் மூன்று ஆண்டுகளுக்குப்பிறகு மாதத் தவணையைக் கட்ட முடியாமல் திணறி, வீட்டை இழக்கும் பரிதாப நிலைக்கு ஆளாகின்றனர். கடன்பெற்ற மூன்றாண்டுகளுக்குப் பின்பு மாதத் தவணைத்தொகை அதிகரிக்கும்போது, அதனைத்தவிர்க்க காலக்கெடுவிற்கு முன்பே முழுக் கடனையும் அடைக்க முயன்றால் ( pre-closure) அவர்களுக்கு அதிக தண்டம் (pre-payment penalty) விதிக்கப்படுகிறது. இவ்வாறு இரண்டாம் நிலை அடமானக்கடன் பெற்றோர் கடனைத் திருப்பிக் கட்டவும் முடியாமல் கட்டியவீட்டை மீட்கவும் முடியாமல் திணறுகின்றனர். நியூயார்க், பாஸ்டன், சிக்காகோ போன்ற ஆறு வட அமெரிக்க நகரங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி, வெள்ளை இனமக்களின் எண்ணிக்கையைப் போல் நான்கு மடங்கு கறுப்பின மக்கள் அதிக வட்டி இரண்டாம் நிலைக் கடனைப் பெற்றள்ளனர்.

சிட்டி குரூப், ஜே.பி.மார்கன் சேஸ், எச்.எஸ்.பி.சி., வாஷிங்டன் மியூச்சுவல் போன்ற ஏழு நிறுவனங்கள் கறுப்பின மக்களுக்கு இத்தகைய கடன்களை அளித்துள்ளன. கடன் பெற்றோரில் 41 விழுக்காடு கறுப்பினத்தவர் 6.9 விழுக்காட்டினர் மட்டுமே வெள்ளை இனத்தவர்.

கறுப்பின மக்கள் மீது இத்தகைய கடன்களைச் சுமத்தியது. இனப்பாகுபாட்டின் வெளிப்பாடே என்பதில் ஐயமில்லை. ஆனால் கறுப்பின மக்கள் தெற்காக இந்தக்கடனைப் பெறுகிறார்கள் என்று பார்த்தால், சொந்த வீடு உடையவர்கள் வட அமெரிக்க சமூகத்தில் பலவிதமான வேறு கடன்களைப் பெறத் தகுதி உடையவர்களாக கருதப்படுகிறார்கள். மேலும் ஒரு குறிப்பிட்ட நகரத்தின் சிறந்த கல்வி நிறுவனங்களில், சொந்த வீடு படைத்தவர்களின் குழந்தைகள்தான் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். அதிக வட்டி வீட்டு அடமானக்கடன்களால் ஏழை மக்களுக்கு புதிதாக வீடு வாங்கிக் கொள்ளும் வாய்ப்பு அதிகரித்துள்ளதாக ஒரு கருத்து பரப்பப்பட்டது. சென்ற ஆண்டு அதிக வட்டியில் இரண்டாம் நிலை அடமானக்கடன் பெற்றோரில் 11 விழுக்காட்டினர் மட்டுமே புதிய வீடு வாங்க கடன் பெற்றவர்கள். பெரும்பாலானோர் ஏற்கனவே தங்களுக்குச் சொந்தமான வீட்டை மறு அடகுவைத்து மருத்துவம் போன்ற பிற செலவுகளுக்கான கடன்களை அடைக்கவே வீட்டை அடமானம் வைத்துள்ளனர்.

அதாவது, வீட்டு அடமான தரகர்களின் பொய்த் தகவல்களால் ஏமாந்த பெரும்பாலான கறுப்பின மக்கள், தங்கள் வீட்டை அடமானம் வைப்பது சிறந்த முதலீடு என்று எண்ணி அடமானம் வைத்துள்ளனர். ஏனென்றால் தரகர்கள் வீட்டின் மதிப்பை செயற்கையாக உயர்த்தி, கறுப்பின மக்களின் வீடுகளை அடமானம் வைத்து அதிக வட்டியில் பெருமளவு கடன்களைப் பெறத் தூண்டினார்கள். இத்தகைய கடன்களால் தரகர்களும், கடனளிக்கும் நிறுவனங்களும் கொள்ளை லாபம் அடைந்திருப்பது மட்டுமே உண்மை. கடனைத் திருப்பிச் செலுத்தும் திறன், வருமானம் ஆகியவற்றைக் கணக்கில் கொள்ளாமல் வீட்டு உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்ட அடமானக் கடன்கள் தரகர்களையும், கடனளிக்கும் நிறுவனங்களையும் கொள்ளை லாபத்தை சுருட்ட வைத்தன. அதிக வட்டியில் கடனைப்பெற்ற கறுப்பின / கலப்பின மக்கள் தங்கள் வீடுகளை இழந்தனர்.

வீட்டு அடமானக் கடன் தருவதில் அரசு எவ்வித கட்டுப்பாடுகளையும் விதிக்கவில்லை என்பதால் இது சாத்தியமாயிற்று. வங்கிகளும் மற்ற நிதி நிறுவனங்களும் தங்களது அதிக லாபத்தை நிதிச் சந்தையில் முதலீடு செய்தன. கடனைத் திரும்பப் பெறுவது பற்றி யாருமே கவலைப் படவில்லை கறுப்பின மக்களுக்கோ வீடுகளை மீட்கமுடியவில்லை. மீட்க முடியாமல் போன வீடுகளின் மதிப்பு சரசரவென சரிந்து போயிற்று. ஆக சொத்து மதிப்பு ஒரேயடியாகக்குறைந்துபோயிற்று.

ஊகவர்த்தகத்தால் செயற்கையாக அதிகரிக்கப்பட்ட சொத்து மதிப்பு, திடீரென்று பணப் புழக்கம் நின்று போனதால் - அதாவது கடன்கள் திரும்ப செலுத்தப்படாததால், உறைந்து போய்விட்டது. இது வங்கிகளின் பணப் புழக்கத்தையும் உறைய வைத்துவிட்டது. இவ்வாறு உருவாக்கப்பட்ட நெருக்கடி தான் இன்று பூதாகரமாக உருவெடுத் துள்ளது.

இந்த நெருக்கடிக்குக் காரண மான வங்கிகளையும் காப்பீட்டு நிறுவனங்களையும் காப்பாற்றவே வட அமெரிக்க அரசு எழுபதாயிரம் கோடி டாலரை ஒதுக்கியுள்ளது. அதாவது, கறுப்பின மக்களையும், லத்தீன் அமெரிக்க மக்களையும் வஞ்சித்து கொள்ளையடித்த நிறுவனங்களைக் காப்பாற்றவே அரசின் தரப்பிலிருந்து இத்தனை பெரிய தொகை வழங்கப் பட்டுள்ளது.

கறுப்பின மக்கள் வட அமெரிக்க அரசின் கொடுமைகளுக்கு ஆளாக்கப்படுவது புதிதொன்றுமில்லை; காத்ரீனா புயல் நியூ ஆர்லியன்ஸ் நகரைத் தாக்கியபோது அதிகமான பாதிப்பிற்கு ஆளானது கறுப்பின மக்களே. வட அமெரிக்க அரசு அவர்களுக்கு எந்த நிவாரணமும் அளிக்கவில்லை. அரசும் சரி ஊடகங்களும் சரி தமது இனவெறியை அவ்வாறு வெளிப் படுத்தியதை உலகறியும். இரண்டாம் நிலை அடமானக்கடன்களும் கறுப்பின மக்களின் பொருளாதாரச் சீரழிவுக்கே இட்டுச்சென்றதைக் காணும் போது, வட அமெரிக்காவின் இனப் பாகுபாட்டு உளவியலை மீண்டு மொருமுறை அறியத்தருகிறது. கொள்ளையடித்த தனி நபர்களையும் வங்கிகளையும் காப்பதற்காக வட அமெரிக்க அரசு தரும் 70,000 கோடி டாலரில் ஒருசிறு பகுதியை முன்னரே அந்த மக்களுக்கு அளித்திருக்குமானால் - வட்டி விகிதங்களைக் குறைத் திருக்குமானால் இந்த நெருக்கடி ஏற்பட்டிராது. ■

# சிங்களனுக்குத் துணைபோகும் இந்திய அரசைக் கண்டித்து உண்ணாப்போராட்டம்

**சி**ங்களப் பேரினவாத அரசோடு இணைந்து இனக்கொலைப் போர் புரியும் இந்திய அரசைக் கண்டித்தும், 'சிங்கள அரசுக்கு ஆயுதம் வழங்காதே, வழங்கிய ஆயுதங்களைத் திரும்பப் பெறு' என வலியுறுத்தியும், 02.10.2008 அன்று சிதம்பரத்தில் கண்டன உண்ணாப் போராட்டம் நடைபெற்றது. தமிழ்த் தேசப்பொதுவுடைமைக் கட்சியின் முன்முயற்சியில் மார்ச்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சி , மக்கள் உரிமைக் கூட்டமைப்பு ஆகியவையும் இணைந்து இப்போராட்டத்தை நடத்தின.

சிதம்பரம் பெரியார் சதுக்கத்தில் அன்று காலை 8.00 மணிக்குத் தொடங்கிய கண்டன உண்ணாப் போராட்டம் மாலை 5.00 மணிவரை நடைபெற்றது. த.தே.பொ.க. சிதம்பரம் நகரச் செயலாளர் , தோழர். கு. சிவப்பிரகாசம் தலைமை தாங்கினார். மா.பெ.பொ.க, மாவட்டச்செயலாளர் , தோழர் பா. மோகன், மக்கள் உரிமைக் கூட்டமைப்பு நகரச்செயலாளர் தோழர் வை. இரா. பாலசுப்ரமணியன், தமிழக மாணவர் முன்னணி நகரச்செயலாளர் தோழர் தே. அரவிந்தன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

திரளானோர் கலந்துகொண்ட இந்த எழுச்சிமிக்க உண்ணாப் போராட்டத்தில் மாணவர்களும், இளைஞர்களும் கணிசமாக பங்கு பெற்றது குறிப்பிடத்தக்கது.

போராட்டத்தை வாழ்த்தி தமிழக இளைஞர் முன்னணி பொதுச் செயலாளர் தோழர் நா. வைகறை , பாட்டாளி மக்கள் கட்சி துணைத்தலைவர் திரு வ.ம.ச.சௌந்தரபாண்டியன், மக்கள் உரிமைக் கூட்டமைப்பு திரு பழமலை, சீர்காழி தமிழ்ச்சங்கம் தமிழ்விரும்பி, பாவேந்தர் இலக்கியக் கழக பொறுப்பாளர் கவிஞர் இராசப்பா, சேத்தியாத்தோப்பு சர்க்கரை ஆலை தொழிற் சங்கத்தலைவர் தோழர் பாலகுரு, த.தே.பொ.க . முருகன்குடி தோழர் மு. பழனிவேலு ஆகியோர் உரையாற்றினர்.




த.தே.பொ.க . தலைமைச் செயற்குழு உறுப்பினர் தோழர் கி. வெங்கட்ராமன் கண்டன உரையாற்றினார்.

பேரறிவாளனின் தாயார் திருமதி. அற்புதம் குயில்தாசன் சிறப்புரையாற்றி , பழச்சாறு அளித்து உண்ணாப்போராட்டத்தை முடித்து வைத்தார்.

நிறைவில் த.தே.பொ.க தோழர் ப. சௌந்தரராசன் நன்றி நவின்றார்.

# சிங்களன் பங்காளியா தமிழன் பகையாளியா இந்திய அரசை எதிர்த்து கண்டன ஆர்ப்பாட்டம்



சென்னை

சிங்கள அரசின் இனக்கொலைப் போருக்குத் துணைப்போகும் இந்திய அரசைக் கண்டித்தும், சிங்கள அரசிற்கு கொடுத்துள்ள ரேடார் மற்றும் ஆயுதங்களை இந்திய அரசு திரும்பப் பெற வலியுறுத்தியும், இனக்கொலைப் போர்புரியும் சிங்கள அரசிற்கு நிதி உதவி அளிப்பதை நிறுத்தக்கோரியும், படைப்பயிற்சி அளிப்பதை நிறுத்த வலியுறுத்தியும் த. தே.பொ.க முன்முயற்சியில் தமிழகமெங்கும் 13.10.2008 அன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**சென்னை**:

தமிழ்த்தேசப் பொதுவுடைமைக் கட்சி, பெரியார் திராவிடர் கழகம், தமிழ்த்தேசிய விடுதலை இயக்கம் ஆகியவை இணைந்து சென்னை நினைவரங்கம் (மெமோரியல் ஹால்) அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தின. த.தே.பொ.க பொதுச் செயலாளர் தோழர் பெ. மணியரசன் தலைமை தாங்கினார். த.தே.வி.இ. பொதுச் செயலாளர் தோழர் தியாகு, பெ.தி.க பொதுச்செயலாளர் தோழர் விடுதலை இராசேந்திரன், முன்னாள் சட்ட மேலவைத் தலைவர் புலவர் புலமைப்பித்தன் இயக்குநர் சீமான் உள்ளிட்ட பலர் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கண்டன உரையாற்றினர்.

**ஒசூர்**

த.தே.பொ.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் தோழர் கோ. மாரிமுத்து தலைமையில் ஒசூரில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பெரியார் தி.க தோழர் பிரேம்குமார் முன்னிலை வகித்தார். தோழர்கள் இளையராசா ( பெ.தி.க) அ. இராமச் சந்திரன் (ம.தி.மு.க) ஒப்புரவாளன் (த.ம.தொ.மு), செந்தமிழ் (தொ.வி.மு.,) முத்தாலு (த.தே.பொ.க) ஆகியோர் கண்டன உரையாற்றினர். கவிஞர் குமரேசன் (ம.தி.மு.க) கண்டன கவிதை வழங்கினார்.

திரளானோர் கலந்துகொண்ட இந்த ஆர்ப்பாட்டத்தை தமிழ்த்தேசப் பொதுவுடைமைக் கட்சி, தொழிலாளர் விடுதலை முன்னணி, தமிழக மக்கள்



திருத்துறைப்பூண்டி





திருச்செந்தூர்



ஈரோடு

தொழிலாளர் முன்னணி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், பெரியார் திராவிடர் கழகம் ஆகியவை ஒருங்கிணைத்து நடத்தின.

**திருச்செந்தூர்**:

த.தே.பொ.க. பொதுக்குழு உறுப்பினர் தோழர் மு. தமிழ்மணி தலைமையில் தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் தேரடி வீதியில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பெரியார் தி.க, மாவட்டச்செயலாளர் தோழர் பாபு மனோகரன் , ஆதித்தமிழர்ப் பேரவை தோழர் சங்கர், விடுதலைச் சிறுத்தைகள் தோழர் தமிழ்குட்டி, தமிழர் தேசிய இயக்க மாவட்டச் செயலாளர் தோழர் துரை. அரிமா, மக்கள் உரிமைக் கூட்டமைப்பு தோழர் சு.க. மகாதேவன், தோழர் கல்லை பெருமாள் (தமிழக உழவர் முன்னணி) ஆகியோர் உரையாற்றினர்.

த.தே.பொ.க தலைமைச் செயற்குழு உறுப்பினர் தோழர் கி. வெங்கட்ராமன் கண்டன உரையாற்றினார்.

**திருத்துறைப்பூண்டி**:

த.தே.பொ.க. ஒன்றியச் செயலாளர் தோழர் கா. அரசு தலைமையில் திருத்துறைப்பூண்டி தலைமை அஞ்சலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தை முடித்துவைத்து தோழர் இரா. கோவிந்தசாமி விளக்க உரையாற்றினார்.

**மதுரை**:

மதுரை ஜான்சிராணி பூங்கா அருகில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் த.தே.பொ.க , த.தே.வி.இ., பெ.தி.க, த.ஒ.வி.இ. ஆகிய அமைப்புத் தோழர்கள் திரளாகக் கலந்துகொண்டனர். தோழர் இராசு. (த.தே.பொ.க) தலைமை தாங்கினார். தோழர்கள் கதிர்நிலவன் (த.தே.வி.இ) ஸ்டாலின் (பெ. தி.க) அருணா (மகளிர் ஆயம்), விடுதலைசெல்வம் (த.ஒ.வி.இ) , ஆனந்தன் (த.தே.பொ.க) ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

**தஞ்சை** :

தஞ்சை தொடர்வண்டி நிலையம் அருகில் நடைபெற்ற எழுச்சி மிக்க ஆர்ப்பாட்டத்திற்கு த.தே.பொ.க மாவட்டச்செயலாளர் தோழர் பழ. இராசேந்திரன் தலைமை தாங்கினார். தோழர்கள் புதுக்கோட்டை பாவாணன், அயனாபுரம் சி.முருகேசன் (உலகத் தமிழர் பேரமைப்பு ) அரங்க குணசேகரன் ( தமிழக மனித உரிமை இயக்கம்) குடந்தை அரசன், (விடுதலைச் சிறுத்தைகள்) நா.வைகறை (தமிழக இளைஞர் முன்னணி) வழக்கறிஞர் இளமதி ( ஆதித்தமிழர் பேரவை),சோலை மாரியப்பன்(பெ.தி.க., குழ.பால்ராசு, இராசு.முனியாண்டி (த.தே.பொ.க.)ஆகியோர் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினர்.

**ஒரத்தநாடு :**

த.தே.பொ.க.சார்பில் ஒரத்தநாடு பேருந்து நிலையம் அருகில் 24.10.2008 மாலை கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தோழர் அர்ச்சுணன் தலைமை தாங்கினார். தோழர் கலியபெருமாள் விளக்கஉரையாற்றினார். தோழர்கள் கி.வெங்கட்ராமன், நா.வைகறை, பழ.இராசேந்திரன் ஆகியோர் கண்டன



ஓசூர்



கோவை



மதுரை

உரையாற்றினர். திரளானோர் கலந்துகொண்ட எழுச்சி மிக்க நிகழ்ச்சியாக இவ்வார்பாட்டம் நடைபெற்றது.

**கோவை :**

கண்டன ஆர்ப்பாட்டம் கோவையில் 13.10.2008 திங்கள் மாலை 5 மணிக்கு எழுச்சியுடன் நடைபெற்றது.

தோழர் கு.இராமகிருஷ்ணன் (பெ.தி.க.) தலைமை தாங்கினார். தோழர்கள் பா.தமிழரசன் (த.தே.பொ.க.) அனுபவ் ரவி (பா.ம.க.) , வெண்மணி (ஆதித்தமிழர் பேரவை), இரவிக்குமார் ( ஆதித் தமிழர் விடுதலை முன்னணி) , தென்னரசு (விடுதலை சிறுத்தைகள்), அறிவுடை நம்பி (த.ஒ.வி.இ.) தேவேந்திரன் (த.தே.வி.இ.) வள்ளுவராசன் (பு.இ.மு.) உள்ளிட்ட பல்வேறு அமைப்புத் தோழர்கள் கண்டன உரை நிகழ்த்தினர்.

ஆர்ப்பாட்டத்தில் பா.சங்கர் (த.தே.பொ.க.) முருகன், செந்தில், பன்னீர் , மாரியப்பன், ரவிசங்கர், முத்துராசு, சுரேசு, தேவராசு, சிவக்குமார், மணிகண்டன் , உதயக்குமார் உள்ளிட்ட தமிழக இளைஞர் முன்னணித் தோழர்களும் மற்றும் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோரும் கலந்து கொண்டு இந்திய அரசுக்கு எதிரான முழக்கங்களை எழுப்பினர்.

**ஈரோடு**

ஈரோடு தலைமை அஞ்சலகம் முன்பு நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு தோழர் மோகன்ராஜ் (தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம்) தலைமை தாங்கினார். ம.தி.மு.க. மாவட்டச் செயலாளர் திரு கணேசமூர்த்தி, தோழர்கள் ச.அர.மணிபாரதி (த.தே.பொ.க.), வழக்குரைஞர் பாவேந்தர் (த.ஒ.வி.இ.), இரா.இளங்கோவன் (பெ.தி.க.) ஜெயக்குமார் (த.இ.மு.) இளங்கோவன் (த.தே.பொ.க.) ஆகியோர் கண்டன உரையாற்றினர். ■



## இத்தாலிக்காரர் விடுதலைப்புலி ஆனார்

போர், மற்றும் இயற்கை அழிவுகளால் மக்கள் பாதிக்கப்படும் போது, மனிதாபிமான சமூக சேவைகளில் ஈடுபடுத்திக்கொள்ளும் சர்வதேசத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் ஒன்று இத்தாலி நாட்டைச் சேர்ந்த சோ ஆ எனும் அமைப்பு.

இந்த அமைப்பு இலங்கை சிங்கள அரசின் இனவாதப் போரினால் பாதிக்கப்பட்டுள்ள ஈழ மக்களுக்கு உதவும் பொருட்டு கிளிநொச்சியில் ஒரு அலுவலகம் வைத்து செயல்பட்டு வந்தது.அந்த கிளிநொச்சி அலுவலகத்தின் முகாமையாளராக பணிபுரிந்து வந்தவர் **கியோவானி போர்டா** என்ற இத்தாலியர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் செயல்பாட்டால் ஈர்க்கப்பட்ட இவர், தற்போது விடுதலைப் புலிகள் அமைப்பின் அனைத்து விதி முறைகளையும் ஏற்றுக்கொண்டு ஒரு போராளியாக அந்த அமைப்பில் இணைந்துவிட்டார் என்று தெரியவந்துள்ளது.

எங்கிருந்தோ வந்த ஒரு இத்தாலியன் தமிழர்களின் ஞாயத்திற்காக உயிர்கொடுக்க முனைந்திருப்பது போராளிகளின் முயற்சிக்கு பலம் சேர்த்திருக்கிறது. கி யோவானி போர்டா போன்ற மாந்தநேயமும் போர்க் குணமும் மிக்க மனிதர்களால் நிர்ணயிக்கப்படுகிறது வெற்றி.

# டி-ஜா-வு அல்ல தாய் - மூ-ச்சு

ஒரு குரங்கைப் பார்த்து, ஏ குரங்கே ! நீ எப்படிக் குரங்காக இருக்கிறாய் ? என்று கேட்டால் என்னைப் போல சொறிந்து பார் என்று தான் சொல்லும்.

ஈழத் தமிழினம் அழிகிறது என்று இந்திய அரசுக்கு எடுத்துச் சொன்னதால் எங்களைப் போன்று மாநிலங்களை அமைத்துக் கொள்ளுங்கள் என்று தான் சொல்லும். இயன்ற குறும்பும் செய்யும்.

விடுதலையின் விளிம்பில் நிற்கிற தமிழீழம், ஒரு மாநிலமாக மட்டுப்படுமா என்பது வினாவாக நிற்கட்டும். இரண்டு மாநிலங்களாகக் கட்டி உருட்டி விட இயலுமா என்பதை முயற்சித்துப் பார்க்கட்டும். ஈழ விடுதலைக்காக புலிகள் போராடுகிறார்களா அல்லது எலிகள் போராடுகிறார்களா என்பதை எடைபோடும் தகுதி ஈழத் தமிழர் அல்லாத எவருக்கும் இல்லை. வன்முறையா மென் முறையா என்பதை எதிரி முடிவு செய்து கொண்டிருக்கிறான்.

தமிழக அரசின் சட்ட திட்டங்களை மதித்து காவல் துறையின் இசைவு பெற்று அவர்கள் ஒதுக்கித் தரும் இண்டு இடுக்குகளில் ஒன்று திரண்டு அற முறையில் எழுப்பும் உணர்ச்சி மிகுந்த போராட்டங்கள் ஒரு பெண்மணிக்கு காக்கை வலிப்பு போன்றுதோன்றுகிறது.

14.10.2008 இந்து நாளேட்டில் மாலினி பார்த்த சாரதி என்ற ஆரியப் பெண்மணி முரண்பட்ட செய்திகளைப் பெய்து ஒரு கட்டுரை யாத்திருக்கிறார்.

தமிழர்களின் ஈழச்சார்பு எழுச்சியை **டி-ஜா-வு** என்ற பிரஞ்சு சொல்லால் குறிப்பிட்டு மலிவாகக் கொச்சைப் படுத்தியிருக்கிறார். இந்தக் கட்டுரை மட்டும் தமிழில் வெளியிடப் பட்டிருக்குமானால் எத்தகைய எதிர் விளைவுகளைத் தூண்டியிருக்கும் என்பதைக் கணிக்க முடியாது.

de-je-vu என்ற சொல்லுக்கு நினைவுச் சிதைவு - distortion of memory என்றும் மிகுமறதி நோய் paramnisia என்றும் காக்கை வலிப்பு போன்றது a form of epilepsy என்றும் 'காணாத ஒன்றைக் கண்டு விட்டதுபோன்று பரபரப்பு அடைவது' என்றும் பொருள்.

தமிழக மக்களின் ஈழச் சார்பு இன்றுவரை அமைதியாகவும் மாநிலச் சட்டங்களை மதித்தும் நடுவண் அரசை மதித்து வேண்டியும் நிற்கிற வேளையில் அதனைத் திசை திருப்பி வன்முறையைத் தூண்டும் நோக்கத்தோடு எழுதியதற்காக மாலினி மீதும் இந்து ஏட்டின் மீதும் மாநில அரசு ஏன் தக்க நடவடிக்கை எடுக்கக்கூடாது?

தமிழரைத் தமிழரல்லாதார் ஒடுக்குவதற்கு எதிரி வடித்துத்தரும் கருவியாகவே இந்து ஏடு செயல்பட்டு வருகிறது.

காக்கை வலிப்பு வந்தவன் சாவிக் கொத்தைப் பிடிப்பது போல, அவர்கள் குறிப்பிட்ட காக்கை வலிப்பு எழுச்சி இந்து ஏட்டின் குடுமியைக் கொத்தாகப் பிடிப்பதே அதற்கான சரியாக மறுமொழியாக இருக்கும்.

தமிழகத்தின் எழுச்சி பேறுகாலத் தாய் மூச்சுக்கு ஈடானது. விளைவாகத் தமிழீழம் பிறக்கும்நாளை !

**- தென்னன் மெய்ம்மன்**

## மகளிர் ஆயம் நடத்திய பெரியார் பிறந்தநாள் கூட்டங்கள்

மகளிர் ஆயம் சார்பில் பெரியாரும், பெண்ணுரிமையும் என்ற தலைப்பில் கூட்டங்கள் நடைபெற்றன. பெரியார் பிறந்த நாளையொட்டி இந்நிகழ்ச்சி நடத்தப் பட்டது.

**முருகன்குடி**

கடலூர் மாவட்டம், பெண்ணாடம் பகுதியில் உள்ள முருகன் குடியில் 27.09.2008 அன்று மாலை நடைபெற்ற கருத்தரங்கத்திற்கு தோழர் வளர்மதி தலைமை தாங்கினார். மகளிர்ஆயம் தமிழக அமைப்பாளர் தோழர் மதுரை அருணா, மதுரை மாவட்ட அமைப்பாளர் தோழர் மேரி மற்றும் தோழர்கள் பெ.ம.எழிலரசி, நித்தியா, பிரேமா ஆகியோர் கருத்துரை வழங்கினர். தமிழ்த் தேசப் பொதுவுடைமைக்கட்சி தோழர் மு.பழனிவேல் வாழ்த்துரை வழங்கினார்.

60க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்துகொண்டு நிகழ்ச்சியை சிறப்பித் தனர்.

**செங்கிப்பட்டி**

28.09.2008 அன்று மாலை செங்கிப்பட்டியில் நடைபெற்ற மகளிர் ஆய திறந்த வெளி கருத்தரங்கு எழுச்சிமிக்க பொதுக்கூட்டமாகவே அமைந்தது. தோழர் மீனா தலைமை தாங்கினார். தோழர் மதுரை அருணா, தோழர் மேரி ஆகியோர் பெரியார் நினைவைப்போற்றியும் மகளிர் எதிர்கொள்ளும் சிக்கல்கள் பற்றியும் தெளிவுரையாற்றினர். தோழர்கள் ஜெ.கவுசல்யா, சுதா வாணி ஆகியோரும் உரையாற்றினர்.

காவிரி கலைக்குழுவினரின் கோலாட்ட நிகழ்ச்சி செவிக்கும், சிந்தனைக்கும் விருந்துபடைத்தது. நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் உள்ளிட்ட ஏராளமானோர் இந்நிகழ்ச் சியில் பங்கேற்றனர்.

# நான் வித்யா



அரிது அரிது கூன், குருடு, செவிடு, பேடு நீங்கிப் பிறத்தல் அரிது என பண்டைய இலக்கியங்கள் பேசுகின்றன. இப்படி குறைகளோடு பிறக்கும் குழந்தைகளை எந்த தாய், தந்தையரும் புறக்கணிப்பதில்லை, ஆனால் ஆண் உருவில் இருந்து பெண்ணாக மாறும் திருநங்கையர்களை தாய், தந்தையர்கள் அனாதையாக விட்டு விடும் அவலம் தொடர்கிறது.

இவர்கள் ஆணாகவும் இல்லாமல் பெண்ணாகவும் இல்லாமல் இந்த சமூகத்தில் படும் வேதனையை சொல்லில் அடக்க இயலாது. இவர்கள் பெண்ணாக மாறியதும் தன் குடும்ப உறவுகளில் இருந்தே வெளியேற்றப்படும்போது திருநங்கையர்கள் தங்களின் இருப்பை நிலை நிறுத்த தங்களின் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள இவர்கள் யாசகம் கேட்டு கடை கடையாக ஏறி இறங்கும்போது இவர்களை ஒரு கேளிக்கை பிறவியாக பார்த்து கிண்டலும் கேலியும் செய்யும் கோமாளி தனம் தான், நம்மிடையே உள்ளது. திருநங்கையர் படும் வேதனைகளை **“நான் வித்யா”** என்ற நூலில் சரவணன் பதிவு செய்துள்ளார்.

இவர்கள் ஆண் பிள்ளையோடும் ஒட்ட இயலாது பெண் பிள்ளையோடும் ஒட்ட இயலாது என்றே குறிப்பிடுகின்றனர்.

எனவே திரு நங்கையர்கள் தனித்துப் போன சூழலில் தங்களின் உணர்வுகளை பகிர்ந்து கொள்ள தனி உலகம் தனி பண்பாட்டு நெறி முறைகள் தனி வாழ்க்கை நெறி முறைகள் தேவைப்படுவதால் இதற்கான தேடல் தொடங்குகிறது. சமூகத்தின் பொது நீரோட்டத்திலிருந்து வெளியேற்றப்படும்போது தனக்கான கோரிக்கைகள் முன்னெடுக்கிறார்கள். ஒரு பொது கழிப்பிடத்தை இவர்களால் எப்படி எதிர்கொள்ள இயலும் என்பதை நினைத்துப் பாருங்கள். எனவே தான் திருநங்கையர்களை மூன்றாம் பாலினமாக அறிவிக்க கோரும் கோரிக்கைகளில் பல்வேறு விசயங்கள் பொதிந்து கிடக்கின்றன.

ஆணா பெண்ணா என்ற கேள்விக்கு குழந்தைகளுக்கு அதன் குறியை வைத்து கூறி விடுகின்றோம். திருநங்கையர்க்கு என்ன அளவுகோல் உள்ளது. இவர்கள் குறிப்பிட்ட காலம் வரை ஆணாக வளர்ந்தாலும் பெண் தன்மை அடைந்தவர்கள்

ஒரு திருநங்கையாக முழு நிலையை எய்திய உடன் ஆணின் உடைகளை மட்டுமல்லாது ஆணின் பாலியல் அடையாளங்களையும் அகற்ற துணிந்து விடுகின்றனர். அதில் ஏற்படும் வலியும் வேதனையும் கொடுமையானது ஆனால் தான் ஓர் ஆண் அல்ல ஒரு பெண் என்ற நிலையை எய்தியதும் தான் பட்ட துயரங்கள், வேதனைகள் யாதும் மறைந்துவிடுவதாக குறிப்பிட்டுள்ளார்.

இவர்களுக்கிடையே நம்பிக்கை சார்ந்த சம்பிரதாய சடங்குகளும் நடைபெறுகின்றன. ஒரு பெண் பூப்பெய்தினால் என்னவிதமான சடங்குகள் செய்யப்படுகிறதோ அதே போல் செய்கின்றனர். தங்களின் அடையாளங்கள் அகற்றிய பின் அரவாணிகளின் சமூகமே இந்த சடங்கினை செய்கின்றது.

பல்வேறு மத இன நம்பிக்கை கொண்டாலும் அரவாணியாக மாறியதும் ஓர் பொது தன்மையில் இணைந்து விடுகின்றனர். இவர்களிடையே எந்த பாகுபாடும் கிடையாது. திருநங்கை அல்லது அரவாணிகள் என்ற ஒற்றைத் தன்மையில் இணைந்து விடுகின்றனர். சாதிய அடுக்குகளை கொண்ட சமூகத்தில், இவர்களோ சாதியற்றவர்களாகவே வாழ்கின்றனர். இவர்களில் யாரேனும் சாதி, மதம் சம்பந்தமாக பேசி விட்டால், அதை ஒழுங்கு படுத்த இவர்களின் ஜமாத்து கூடி இவர்களுக்கு தண்டனையும் வழங்குகின்றது.

அர்த்த நாரீசுவரரை கண்ட போதெல்லாம் கையெடுத்து வணங்கும் போது அர்த்த நாரீசுவரர்களாக வாழ்ந்துவரும் இவர்களை வணங்க வேண்டாம் இவர்களின் கோரிக்கைகளை மனிதத்தோடு ஏற்க வேண்டாமா?

பள்ளியாகட்டும் அல்லது வேலை கோரும் நிறுவனங்களாகட்டும் இதில் இவர்களுக்கான இடம் எங்கே வைக்கப்பட்டுள்ளது என்பது தான் கேள்வி. எனவே தான் இவர்களின் கோரிக்கை விசாலமானது அனைவரும் ஏற்று கொள்ளவேண்டியது. முகப் பொலிவும் அங்க அசைவுகளும் எத்தனை காலம் இவர்களுக்கு சாதகமாக இருக்கும்? குறிப்பிட்ட காலம் கடந்த பின் இவர்களின் கதி என்ன என்ற புதிர் நிறைந்த வாழ்வு இவர்களைக் கேள்விக் குறியாய் வாட்டுகிறது. இளமை காலங்களில் எல்லா நிலைகளிலும் மறுக்கப்படும் போது இவர்களுக்கு கை கொடுக்கும் ஒரே தொழில் பாலியல் தொழில் தான் என்பதை பல திருநங்கையர்கள் வெளிப்படுத்தும் எண்ணக் குமுறல்களில் இருந்தே அறிய முடிகிறது.

எனவே இவர்களுக்கான பாதை செப்பனிடப்பட வில்லையே என்றுஇச் சமூகத்தின் மீது இவர்கள் காட்டும் கோபத்தின் வெளிப்பாட்டைப் புரிந்து கொள்ளவேண்டும். இதற்கு இந்நூல் சிறந்த கருவியாக விளங்குகிறது.

**- தஞ்சை சாம்பான்**

**“நான் வித்யா”**
ஆசிரியர் : **லிவிங்ஸ்மைல் வித்யா**
வெளியீடு : **கிழக்கு பதிப்பகம்**
33/15, எல்டாம்ஸ்சாலை,
ஆழ்வார்பேட்டை, சென்னை - 600 018.
பக்கம் : 216 விலை : **ரூ.100/-**

# கலை உலகின் கண்டனக் குரல்

முனி



***சிறகு முளைத்து***
***விதை ஒன்று***
***அலையும்***
***முளைக்க***
***ஒரு பிடி மண் தேடி...!***

என்றார் ஈழத் தமிழர்களைப் பற்றி கவிஞர் இன்குலாப்.

சூறைக் காற்றில் சிக்கிய பஞ்சாக ஈழத் தமிழர்கள் உலகெங்கும் புகலிடம் தேடி அலைகிறார்கள். ஆணவம் தலைக்கேறிய சிங்களப் பேரினவாத இராணுவம் அங்கே தமிழர்களின் உயிர்களைப் பலிவாங்கிக் கொண்டு இருக்கிறது.

குருதி சிந்தும் தமிழர்களுக்கு ஆதரவாக கோடம்பாக்கத்-திலிருந்து மனித நேயமுள்ள நடிகர்களும் இயக்குனர்களும் கவிஞர்களும் ஏனையத் திரைத்துறைத் தொழிலாளர்களும் அணி திரண்டு எல்லா வடிவங்களிலும் தீவிரமாகப் போராடிவருகின்றனர்.

திரை உலகினர் இம்முறை தன் எழுச்சியாகவும், இன உணர்வுடனும் போராடி வருவது பாராட்டுக்குரியது.

**திரை உலகினரின் பேரணியும், போராட்டங்களும்...**

**காட்சி *1***

அக்டோபர் 19, ராமேஸ்வரத்தில் தமிழ் திரை இயக்குனர்கள் சங்கம் சார்பாக இலங்கை இராணுவத்தின் படுகொலைகளைக் கண்டித்து ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக பேரணியும் பொதுக்கூட்டமும் நடைபெற்றன. இதில் கலந்து கொண்ட அனைவரும் தமிழின உணர்வோடு பேசினர். இயக்குனர்கள் சேரன், சீமான், அமீர், ஆர்.கே.செல்வமணி ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

**காட்சி 2**

அக்டோபர் 24, தடை செய்யப்பட்ட இயக்கத்திற்கு ஆதரவாக பேசியதாக அமீரும், சீமானும் கைது செய்யப்பட்டனர். அப்பொழுது அங்கு கூடிய நூற்றுகணக்கான துணை இயக்குனர்கள் கைதைக் கண்டித்து கண்டனக் குரல் எழுப்பினர்.

**காட்சி 3**

அக்டோபர் 25, சென்னை வட பழனி காமராஜர் சிலை அருகே இயக்குனர் **ராம், சுப்ரமணிய சிவா** ஆகியோர் முன்னிலையில் திரண்ட 300 க்கும் மேற்பட்ட இணை, துணை இயக்குனர்கள் சிங்களப் பேரினவாததிற்கு எதிராக முழக்கங்களை எழுப்பி, ராஜபக்சேவின் உருவ பொம்மையை எரித்துக் கைதானார்கள்.

**காட்சி 4**

கைது செய்யப்பட்ட அனைவரும் சாலிகிராமம் சமூக நலக் கூடத்தில் காவலில் வைக்கப்பட்டனர். அங்கும் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக கருத்தரங்கம் நடத்தினர். மாலை அங்கு இயக்குனர்கள் பாரதிராஜா, வீ.சேகர், பாலுமகேந்திரா, செல்வமணி ஆகியோர் வந்தனர். திரை உலகினரின் போராட்டத்தை, தொடர்ந்து கொச்சைப்படுத்தி எழுதி வரும் ஞாநியைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**காட்சி 5**

அக்டோபர் 26, சென்னை திரைப்பட வர்த்தகர் சங்கத்தில் கூடிய திரைத் துறையினர் சீமான், அமீர் விடுதலைக்கு பின்பு போரட்டத்தை விரைவுப் படுத்த முடிவு செய்தனர்.

**காட்சி 6**

அக்டோபர் 28, இயக்குனர்கள் ராம், சுப்பிரமணிய சிவா, கவிதா பாரதி மற்றும் ஐம்பதுக்கும் மேற்பட்ட இணை, துணை இயக்குனர்கள் குமுதம் அலுவலகம் சென்று ஞாநியின் அவதூறு பரப்பும் கட்டுரைகளுக்குக் கண்டனம் தெரிவிக்கும் கடிதத்தை ஆசிரியரிடம் கொடுத்தனர். இக்கடிதத்தில் பாரதிராஜா, பாலுமகேந்திரா, சேரன், பேரரசு, வி.சி. குகநாதன், செல்வபாரதி, ராம், வெற்றிமாறன், ஆர்.கே. செல்வமணி, வெ. சேகர் உள்ளிட்ட 173 இயக்குனர்கள் மற்றும் இணை, துணை இயக்குனர்கள் கையொப்பமிட்டிருந்தார்கள்.

**காட்சி 7**

அக்டோபர் 30, ஈழப் போரட்டத்தை தொடர்ந்து கொச்சைப் படுத்தி செய்தி வெளியிடும் தினமலரைக் கண்டித்துஇ தினமலர் அலுவலகத்திற்கு முன்பு திரண்ட திரை உலகினர் தினமலர் நாளிதழுக்கு எதிராக “தமிழர் காசு இனிக்குதாடா...! தமிழ் உணர்வு கசக்குதாடா...!□ போன்ற முழக்கங்களை எழுப்பினர். இயக்குனர் பாரதிராஜா, பாலா, வெ.சேகர் ஆகியோர் தினமலர் ஆசிரியர் குழுவைச் சந்தித்துப் பேசினர்.

தொடர் போராட்டங்கள் மூலமாக மிகுந்த எழுச்சியோடு தமிழ் திரைப்பட உதவி இயக்குனர்கள் போராடி வருகின்றனர். துணை இயக்குனர்கள் தாயுமானவர், ஐந்து கோயிலான், பாபு, மணி, திருமுருகன் ஆகியோர் முன்னணியில் நின்று தமிழ் உணர்வுள்ள கலைஞர்களை ஒன்று திரட்டும் மகத்தான பணிகளை செய்கின்றனர்.

தொடர்ந்து ஈழப் போரட்டத்தின் உண்மை நிகழ்வுகளை மறைத்தும், திரித்தும் செய்தி வெளியிடும் ஊடகங்கள் இதே போக்கினை தமிழ் திரை உலகினர் நடத்தும் போராட்டத்திலும் கடைப் பிடித்து வருகிறது. மானுட உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கக் களத்தில் இறங்கியிருக்கிறது கனவுத் தொழிற்சாலை. அதை உள்நோக்கத்தோடு கிண்டல் செய்பவர்கள் கண்டனத்திற்குரியவர்கள். □

## புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றம்

**நடத்தும்**

## கல்லூரி மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

**தலைப்பு**

1. தமிழ்த்தேசத் தன்னுரிமை
2. பெண்ணியமும் பெரியாரும்
3. கல்வி வணிகக் கொள்ளையும் கண்மூடி அரசுகளும்

இத்தலைப்புகளில் ஏதேனும் ஒன்றுபற்றி கையெழுத்துப்படியில் 8 பக்கங்களுக்கு மிகாமல் கட்டுரை இருக்க வேண்டும். அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரி மாணவர்கள் மட்டும் போட்டியில் கலந்து கொள்ளலாம். குறிப்பிட்ட கல்லூரியில் படிப்பதற்குரிய சான்று இணைக்கப்படவேண்டும். கட்டுரை கிடைக்கவேண்டிய கடைசி நாள் 30.11.2008 அனுப்பவேண்டிய முகவரி: **கவிஞர் தமிழேந்தி தமிழகச் செயலாளர் ,புரட்சிக்கவிஞர் கலை இலக்கிய மன்றம், 44, இராசாசி வீதி, அரக்கோணம்** - 631001 கைபேசி: 9245737457, 9443432069.

## பிறந்த நாள் வாழ்த்து

தமிழ்த்தேசப் பொதுவுடைமைக்கட்சி சிதம்பரம் கிளை உறுப்பினரும், தமிழக மாணவர் முன்னணி சிதம்பரம் நகரச் செயலாளருமான அண்ணாமலைப் பல்கலைக்கழக பொறியியல் மாணவர் தோழர் **தே.அரவிந்தன்** 29.09.2008 அன்று தனது 20-ஆவது வயதை எட்டினார். பிறந்தநாளையொட்டி புதிய தமிழர் கண்ணோட்டம் வளர்ச்சி நிதியாக ரூ. 500/- வழங்கினார்.

தோழர் தே . அரவிந்தன் நீடு வாழ வாழ்த்துகிறோம்.

# உலகச் சந்தை விழட்டும்
# தமிழ்த் தேசச் சந்தை எழட்டும்

**பெ.மணியரசன்**

பொருளியல் - பொருளியல் விதிகளால் மட்டும் இயங்குவதில்லை. ஒரு கருத்தியல் சார்ந்த அரசியல் ஒழுங்கமைப்பில் தான் பொருளியல் விதிகள் இயங்குகின்றன.

கண்ணுக்குத் தெரியாத சந்தையின் கை ஒன்று சந்தையை ஒழுங்குபடுத்துகிறது என்ற ஆடம்ஸ்மித் கோட்பாடு கடந்த காலங்களிலும் தோற்றுப்போனது. அதே கோட்பாட்டை முன்னிறுத்தி, சந்தை - தன்னைத் தானே ஒழுங்குபடுத்திக் கொள்ளும் என்று புதிய தாராளமயர்கள் அடித்த தம்பட்டமும் தோற்றுப் போயுள்ளது. வேகமாகப் பறந்த விமானம் மெதுவாகத் தரை இறங்கத் தெரியாமல் மோதிச் சிதறுவது போல், புதிய தாராளமயம் என்ற ஏகாதிபத்தியப் பொருளியல் நொறுங்கி விழுகிறது.

“சந்தையில் அரசு தலையிடக் கூடாது” என்ற முழக்கத்தை ஒலிம்பிக் சுடர்போல் கையில் ஏந்தி உலகை வலம் வந்த வல்லரசிய அரசியல் - அந்தச் “சுடரை” கீழே போட்டு அதைத் தன் காலால் மிதித்து அணைத்து விட்டது. ஏழுலட்சம் கோடி டாலர்களை திவாலாகிப்போன வங்கி மற்றும் காப்பீட்டுக் கழகங்களுக்கு வழங்கி அவற்றை அரசுடைமை ஆக்கியுள்ளார் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஜார்ஜ் புஷ். (இத்தொகை இந்திய மதிப்பில் சற்றொப்ப 350 லட்சம் கோடி ரூபாய் ஆகும்)

பிரித்தானிய அரசு, 50 ஆயிரம் கோடி பவுண்டுகளை அந்நாட்டு நிறுவனங்களுக்கு இழப்பீடாகக் கொடுக்க முன்வந்துள்ளது.

வங்கிகளும், காப்பீட்டுக் கழகங்களும் ஏன் திவாலாகி வருகின்றன? கடன் வாங்கியோர் திருப்பிச் செலுத்தவில்லை. ஏன் திருப்பிச் செலுத்தவில்லை? அமெரிக்காவில் அதிகரித்து வரும் விலை உயர்வு வட்டி வீத உயர்வு வேலையின்மை ஆகியவற்றால், மக்கள் ஓட்டாண்டி ஆகிவிட்டனர்.




கடன் வாங்கிக் கட்டிய வீடுகளை விற்றும் வீட்டுக் கடன்களை அடைக்க முடியவில்லை. இவர்களில் பல பேர் வீடுகளை இழந்து சாலையோரங்களில், பூங்காக்களில் தங்கள் கார்களில் வசிக்கின்றனர்.

கார்களை வீடாக்கிக் கொண்டு, பொதுக் குளியலறைகளைப் பயன் படுத்தி வருகின்றனர்.

கடன்வாங்கிக் கட்டிய வீடுகளைக் கடன் அடைக்க முடியாமல் இழந்தவர்களில் கருப்பினத்தவரும் இலத்தீன் அமெரிக்கரும் அதிகம். ஆப்பிரிக்கக் கருப்பினத்தவரில் 55 விழுக்காட்டினரும், இலத்தீன் அமெரிக்கரில் 45 விழுக்காட்டினரும் வீடிழந்துள்ளனர்.

பொருளியல் மந்த நிலை, பொருளியல் பின்னடைவு என்று அறியப்படும் நோய் முதலாளியத்துடன் உடன் பிறந்ததாகும். முப்பதாண்டு அல்லது ஐம்பதாண்டுகளுக்கொருமுறை இந்த மந்த நிலை திரும்பத் திரும்ப வந்து கொண்டுதான் உள்ளது.

1929 இல் தொடங்கி முப்பதுகளில் ஆட்டிப்படைத்த பெரும் மந்தநிலை (great depression) பற்றி இப்பொழுது பேசுகிறார்கள். ஆனால் அதற்கு முன் 1870 - 1890 களில் பெரும் மந்த நிலை ஒன்று நிலவியுள்ளது. இதுபற்றி லெனின் குறிப்பிடுகிறார் :

*தற்கால முதலாளிய ஏகபோகத்தின் உண்மையான தொடக்கம் அதிகம் போனல் 1860-ஆண்டுக்கு முற்பட்டதல்ல. முற்றுடைமை (ஏகபோக) வளர்ச்சியில் முதலாவது முகாமைக் கால கட்டம் 1870 ஆம் ஆண்டுகளாகும். தடையற்ற போட்டி என்ற கோட்பாட்டின் வழியாகவே இந்த வளர்ச்சி ஏற்பட்டது. இதன் விளைவாகவே பெரும் பொருளாதார மந்த நிலை உருவானது. (லெனின்,* ***ஏகாதிபத்தியம் முதலாளியத்தின் உச்சக்கட்டம்,*** *தமிழில் தேர்வு நூல் தொகுதி 4 - பக்கம் 58, 59)*

1980 களில் தொடங்கிய உலகமயக் கருத்தியல் 1990 களில் இருந்து அளவிடமுடியாத கொள்ளை லாபத்தை முற்றுடைமை நிறுவனங்களுக்கு வழங்கியது. பொருளியல் நடவடிக்கைகளில் அரசு தலையிடக் கூடாது என்ற கொள்கை, வளர்ச்சியடைந்த முற்றுடைமை முதலாளிய நாடுகளால் வளர்ச்சியடையாத நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது. சந்தையில் மட்டுமின்றி, கல்வி, பொது நலம், போக்குவரத்து போன்ற துறைகளிலும் அரசு தலையிடாத தாராளமயக் கொள்கை இந்தியா போன்ற வளர்ச்சியடையாத நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது.

1930 - களில் ஏற்பட்ட பெரும் மந்த நிலையிலிருந்து முற்றுடைமை முதலாளியம் விடுபட, கீன்ஸ் என்ற பிரித்தானியப் பொருளியல் வல்லுநர், மக்கள் நல நடவடிக்கைகளில் அரசு தலையிட வேண்டும் ; கல்வி பயில , வேலையில்லாக் கால உதவிகள் பெற, மருத்துவ வசதிகள் பெற மக்கள் நலத்திட்டங்களை அரசு செயல்படுத்த வேண்டும் என்றார். அந்த அறிவுரையைக் கூட உலகமயம் சட்டை செய்யவில்லை.

தடையற்ற சந்தையில் போட்டியில் வெல்பவர் வாழட்டும், தோற்பவர் வீழட்டும் என்ற பொருளியல் கோட்பாட்டைப் பின்பற்றிய முற்றுடைமை முதலாளியம், மக்கள் நலத் திட்டங்களிலும் அதேபோட்டி முறையில் வாழ்பவர் வாழட்டும் வீழ்பவர் வீழட்டும் என்று விட்டுவிட்டது.

அதன் எதிர் விளைவுதான் இப்பொழுது தொடங்கியுள்ள மந்த நிலை. இது ஒட்டுவார் ஒட்டி நோய் போன்றது. உலக முற்றுடைமை நிறுவனங்களுடனும், அம்முதலாளிய அரசுகளுடனும் பொருளியல் உறவு வைத்துள்ள எல்லா நாடுகளுக்கும் இந்த மந்த நோய் பரவி விடும்.

இந்தியாவில் இயங்கும் தனியார் மற்றும் அரசு வங்கிகள் திவாலாகி விடக்கூடாது என்பதற்காக, 84 ஆயிரம் கோடி ரூபாயை அவற்றின் ஈட்டுப்பொருள்களுக்கு மாற்றாக ரொக்கமாக வழங்கியது, இந்திய சேம வங்கி, (ரிசர்வ் பாங்க்) பத்திரங்களாகவும், தங்கமாகவும் இருந்த ஈட்டுப் பொருள்களுக்கு ஈடாக இந்த ரொக்கத்தை வழங்கியது. அத்துடன் நில்லாமல் அட்டவணை வங்கிகள் செலுத்தியிருந்த காப்புத் தொகையில் 1.5 விழுக்காட்டுப்பணத்தை அந்தந்த வங்கிகளுக்கு ரொக்கமாகத் திருப்பிக் கொடுத்துவிட்டது சேம வங்கி. இவ்வாறு திருப்பிக் கொடுத்த காப்புத் தொகை மொத்தம் ரூ.60,000 கோடி ரூபாய் ஆகும்.

ஆக மொத்தம் 1,44,000 கோடி ரூபாயை வங்கிகளுக்கு ரொக்கமாகக் கொடுத்துள்ளது சேம வங்கி.

வேளாண் அறிஞர் தேவிந்தர சர்மா இது குறித்து இவ்வாறு கேட்கிறார். உழவர்களின் கடன் 60,000 கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டபோது, அதற்கு எங்கிருந்து பணம் வந்தது என்று கேட்டவர்கள் - குறிப்பாகத் தொலைக் காட்சியினர் இந்த 1,44,000 கோடி ரூபாய் சேம வங்கி இருப்பிலிருந்து கொடுக்கப் பட்டுள்ளதே, இதற்கு எங்கிருந்து பணம் வந்தது என்று கேட்டார்களா, என்றார்.

இந்தியப் பங்குச் சந்தை வீழ்ச்சியடைந்ததற்குக்காரணம் அமெரிக்க நெருக்கடியும் வெளிநாட்டு நிறுவனங்கள் தாங்கள் போட்ட பணத்தை ஒரே நேரத்தில் திருப்பி எடுத்துக் கொண்டதும் தான். அமெரிக்கப் பொருளியல் நெருக்கடியால், உடனடியாகக் குறைந்தது 30 ஆயிரம் பேர் இந்தியாவில் வேலை இழப்பர் என்று மதிப்பிடப்படுகிறது. வெளிப்புற வேலைகள் (Outsourcing Jobs) வழங்கக்கூடாது என்ற கருத்து அமெரிக்காவில் வலுப்பெற்று வருகிறது.

குடியரசுத்தலைவர் தேர்தலில் வெற்றிவாய்ப்பைக் கூடுதலாகப் பெற்றுள்ள வேட்பாளர் பாரக் ஒபாமா, வெளிப்புற வேலை மையங்களை எதிர்க்கிறார். மட்டுமின்றி அமெரிக்காவில் வேலைபார்க்கும் இந்திய ஊழியர்கள் பல்லாயிரக் கணக்கானோர் வேலை இழக்கும் போக்கு தொடங்கிவிட்டது.

இப்பொழுது நடப்பது ஒரு பெரும் நெருக்கடியின் தொடக்கம்தான். அண்மையில் தொலைக்காட்சியில் அமெரிக்க மக்களுக்கு நம்பிக்கையும் துணிவும் ஏற்படுத்துவதற்காக உரையாற்றிய புஷ் , “இது நீண்ட வலிமிகுந்த மந்த நிலை” என்று ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்.

1929 லிருந்து 1933 வரை நீடித்த பெரும் மந்த நிலை காலத்தில் அமெரிக்க மக்கள் பட்ட துயரங்கள் கொஞ்ச நஞ்சமல்ல.

அப்போது வேளாண் வருமானம் பாதியாகக் குறைந்தது. தொழிற்சாலைகள் உற்பத்தித் திறனில் 40 விழுக்காடு மட்டுமே உற்பத்தி செய்தன. 25 விழுக்காட்டு மக்கள் வேலையின்றி அலைந்தனர். பட்டினி கிடந்த மக்கள் இலவசக் கஞ்சித்தொட்டிகளில் நீண்ட வரிசையில் நின்று கொண்டிருந்தனர். வீடிழந்த மக்கள் நகருக்கு வெளியே போடப்பட்ட தற்காலிக குடிசைகளில் வசித்தனர். வேலை தேடி, ரயில் பாதைகளிலும், சாலைகளிலும் மக்கள் அலைந்தனர்.

வேளாண் பொருளியல் நொறுங்கியது; உழவர்கள் நிலங்களிலிருந்து விரட்டப்பட்டனர். கடன் கட்ட முடியாத உழவர்களின் சொத்துக்கள் நீதிமன்ற ஆணைகளின் கீழ் பறிமுதல் செய்யப்பட்டன. முதலில் நிலக்கரி மற்றும் துணித் தொழில்கள் நசிந்தன. அவற்றைத் தொடர்ந்து

அனைத்துத் தொழில்களும் வீழ்ந்தன. அர்கான்சாஸ் மாநிலத்தில் வீடிழந்த மக்கள் குகைகளில் வசித்தனர். கலிபோர்னியாவில் மக்கள் பொதுச் சாக்கடைகளில் வசித்தனர்.

அமெரிக்காவின் பிறப்பு விகிதம் மிகவும் குறைந்தது ; தற்கொலை விகிதம் அதிகரித்தது. வறுமை நெருப்பில் புழுவாய்த்துடித்த மக்கள் துயர் துடைப்புகோரி வெள்ளை மாளி கைக்கு இலட்சக் கணக்கில் கடிதங்கள் எழுதினர். அவற்றுள் ஒரு தாய் எழுதிய மடல் மந்த நிலையின் நிரந்தர நினைவுச் சின்னமாய் வரலாற்றில் நிலைத்துவிட்டது.

நியூயார்க் மாநிலத்திலிருந்து குடியரசுத் தலைவர் மனைவி எலினார் ரூஸ்வெல்ட்டுக்கு அப்பெண்மணி எழுதி மடல் அது.

***அருள்கூர்ந்து என் கோரிக்கைக்குச் செவி கொடுங்கள் ரூஸ்வெல்ட் அம்மையார் அவர்களே, . அண்மையில் பிறந்த என் குழந்தைக்கு உடைகள் வாங்க வேண்டும். நான் உங்களிடம் கருணைத்தொகை கேட்கவில்லை. என்னை நம்புங்கள். நெருக்கடி தீர்ந்து நல்ல காலம் பிறந்தவுடன் நீங்கள் கொடுத்த தொகையைத் திருப்பித் தந்து விடுவேன். சும்மா தர வேண்டாம். இதோ இக் கடிதத்துடன் இரண்டு தங்க மோதிரங்கள் வைத்துள்ளேன். ஒன்று என் தாய் எனக்குப்போட்டது. இன்னொன்று என் கணவர் எனக்குப் போட்டது. இவற்றை அடமானமாக வைத்துக் கொண்டு பணம் அனுப்புங்கள். அம்மையார் அவர்களே அன்பு காட்டுங்கள்.- (கிளைவ் வெப் ,தி இந்து 04.10.2008)***

வரலாறு தன்னையே திருப்பிக் காட்டும் என்பர். 1930களில் ஏற்பட்ட பெரும் மந்த நிலை இப்பொழுது திரும்பியிருக்கிறது. ஆனால் அதே வடிவிலும் உள்ளடக்கத்திலும் அச்சு அசலாக நிகழ்வுகள் திரும்ப நடக்கும் என்று எதிர்பார்க்கக் கூடாது. முன்பு நடந்தவற்றை ஒத்ததாகவும் அதே சமயம் வெவ்வேறு வடிவங்களில் புதிய உள்ளடக்கத் தோடும் இந் நெருக்கடிகள் வெளிப்படும்.

அப்போது ஏகாதிபத்திய நாடுகள் தங்களின் முதலாளியச் சுரண்டலைப் புதிய வடிவில் நடத்திடப் புதிய உத்திகள் வகுத்தன. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் முன் முயற்சியில் 44நாடுகளின் 730 பேராளர்கள் கலந்து கொண்ட மாநாடு வட அமெரிக்காவில் நியூ ஹாம்ஷயரில் பிரெட்டன் உட்ஸ் என்ற இடத்தில் மவுண்ட் வாஷிங்டன் ஓட்டலில் நடந்தது. அம்மாநாட்டு முடிவுப்படி அமைக்கப்பட்டவை தாம். மறுசீரமைப்புக் மற்றும் வளர்ச்சிக்கான பன்னாட்டு வங்கி, (பிறகு உலக வங்கி என பெயர் மாற்றப்பட்டது) காட் ஒப்பந்தம் (General Agreement on Tariff and Trade ) பன்னாட்டு நிதியம் (ஐ.எம்.எப். ) ஆகியவை.

பிரித்தானிய முதலாளியப் பொருளியியல் வல்லுநர் கீன்ஸ், சமூக நலத்திட்டங்களையும் சேர்த்து அரசு செய்தால் பெரும் மந்த நிலை போன்றவை மீண்டும் வராமல் தடுக்க முடியும் என்றார். அதை முதலாளிய நாடுகள் ஓரளவு பின்பற்றத் தொடங்கின. ஆனால் உலக மயம் என்ற பெயரில் புதிய தாராள மயம் வந்த பின் சமூக நலத்திட்டங்களிலிருந்து படிப்படியாகப் பின்வாங்கிக் கொண்டன.

இரண்டாவது பெரும் மந்த நிலை என்று வர்ணிக்கப்படும் இப்போதையப் பெரும் நெருக் கடியிலிருந்து விடுபட முதலாளிய அரசுகளும், முதலாளியப் பொருளி யலாளரும் பல்வேறு சாகசத் திட்டங்களை முன்மொழிகின்றனர்.

கீன்ஸுக்கு மறு உயிர்ப்பு வழங்குவது பற்றி சிலர் பேசுகின்றனர். காரல் மார்க்சின் முகமூடியை அணிந்து கொள்ளலாம் என்று மற்றும் சிலர் கூறுகின்றனர்.

முற்றுடைமை முதலாளிய ஏடான நியூயார்க் டைம்ஸ் கட்டுரையாளர் “நீங்கள் இன்னும் முதலாளியத்தை நம்புகிறீர்களா?” (20.09.2008) என்று கேட்டுத் தமது கட்டுரையைத் தொடங்கினார்.

1990களில் கம்யூனிசம் தோற்றுவிட்டது என்று கழிபேருவகை கொண்டவர்கள் இப்போது, “முதலாளியம் தோற்றுவிட்டதா” என்று வினா எழுப்பித் திகைக்கிறார்கள்.

உலகமயம் என்ற பன்னாட்டு முற்றுடைமை முதலாளியம், தன் முரண்பாடுகளால் தனக்குள்ளேயே நொறுங்கிக் கீழே விழுவதைக் கண்ட உழைக்கும் மக்களும், நடுத்தரப் பிரிவினரும், நேர்மையான சிந்தனை யாளர்களும் மார்க்சியத்தை நோக்கி நகர்கிறார்கள்.

ஜெர்மனியில் ரைன் ஆற்றுக் கரையில் டிரியர் நகரில் உள்ள காரல் மார்க்ஸ் பிறந்த இல்லத்திற்குப் பார்வையாளர் வருகை பலமடங்கு கூடிவிட்டது என்று ஏடுகள் எழுதுகின்றன. காரல் மார்க்ஸ் எழுதிய உலகத் திருப்பு முனை நூலான ‘மூலதனத்தின்’ விற்பனை மும்மடங்கு அதிகரித்துள்ளது என்கிறார். ‘டையட்ஸ்’ என்ற பெர்லின் வெளியீட்டகத்தலைவர் ஜோர்ன் ஷுட்ரும்ப்.

உலக மயம் - புதிய தாராளமயம் - தனியார்மயம் என்பதற்கு மாற்றே கிடையாது. (Tina - There is no alternative) என்றுகோபுரத்தின் மீதேறி கொக்கரித்தவர்கள் இப்போது காரல் மார்க்சின் நிழல்தேடுகிறார்கள்.இவர்கள் நேர்மையான நோக்கத்தோடு மார்க்சைத் தேடவில்லை ;

பிரான்சு குடியரசுத்தலைவர் நிக்கோலஸ் சர்கோசி, மார்க்சின் மூலதன நூலில் பலவரிகளில் அடிக் கோடிட் டுள்ளராம். ஜெர்மன் நிதியமைச்சர் பீர் ஸ்டெயின் புருக் “நல்ல விவரங்கள் அதில் இருக்கின்றன” என்றாராம். போப், ‘மகத்தான பகுப்பாய்வு நூல்’ என்று மூலதனத்தைப் பாராட்டுகிறாராம்.

காண்டர்பரி தலைமைக் கண்காணியார் ரோவன் வில்லியம்ஸ், கடிவாள மில்லாத முதலாளியம் ஒரு புராணசாகசக் காரனைப்போல் ஆக்கப்பட்டுள்ளது, அது உண்மை யானது போலவும், ஆற்றல் உள்ளது போலவும், ஏற்றிப் போற்றப் பட்டு விட்டது என்று நெடுங்காலத்திற்கு

முன்பாகவே மார்க்ஸ் கண்டறிந்தார்”, எனக்கூறுகிறார்.

பிரிட்டனில், சுதந்திரச் சந்தையின் ஆரவார ஆதரவு ஏடுகளான தி டைம்ஸ் , தி டெய்லி டெலிகிராஃப் போன்றவை சட்டென்று மார்க்சு மீது அக்கறை கொண்டவை ஆகிவிட்டன. “கடைசியில் பார்த்தால், மார்க்ஸ் சரியாகத்தான் இருப்பாரோ” என்று அவை ஆராயத் தொடங்கிவிட்டன.
*( தி இந்து 22.10.2008)*

முதலாளிய அரசியல் தலைவர்களும், சிந்தனையாளர்களும் மெய்யாகவே மார்க்சியர்களாக மாறிக் கொண்டிருக்கிறார்கள் என்று கருதினால் அது ஏமாளித்தனம்.

தனது பிறவி ஊனங்களைப் போக்கிக்கொள்ளும் பொறியமைவு முதலாளியக் கருத்தியலில் இல்லை . “மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள உறவில் அப்பட்டமான தன்னலத்தைத் தவிர பரிவுணர்ச்சிக்கு வேலை இல்லை என்றாக்கிய முதலாளியம் , மனித உறவுகளை வெறும் பணப்பட்டுவாடாவாக மாற்றிவிட்டது” என்றனர் மார்க்சும் - எங்கெல்சும் (கம்யூனிஸ்ட்டுக் கட்சி அறிக்கை). உழைக்கும் மக்களை வெறும் கூலிக்காரர்களாகவும், ஒட்டு மொத்த மக்களை வாடிக்கையாளர்களாகவும் மாற்றி உழைப்பைச் சுரண்டுவதில் தான் முதலாளியக் கருத்தியலின் உயிர் இருக்கிறது. எனவே முதலாளியம் ஒரு போதும் தற்கொலை செய்து கொள்ளாது.

முதலாளியத்தைச் செப்பனிட மார்க்சியத் தொழில் நுட்பத்தில் சிலவற்றைப் பயன்படுத்த முடியாதா என்று அவர்கள் முயல்கிறார்கள். மார்க்சின் மூலதனம் மக்களுக்கான உருவாக்கம் ; இவர்கள் உருவாக்க முயலும் மூலதனத்தின் மார்க்ஸ் முதலாளியத்தின் திரிபாக்கம்.

ஆனால் உலகெங்கும் உள்ள உழைக்கும் மக்களும் நடுத்தரப் பிரிவினரும், நேர்மையான அறிவாளர்களும் மார்க்சியத்தை இப்பொழுது மெய்யான நேயத்தோடு நோக்குகிறார்கள். முற்றுடைமை முதலாளியக் கொள்ளை நோயிலிருந்து மக்களைக் காப்பாற்றும் மருந்தாகக் கருதுகிறார்கள். மார்க்சியப் புரட்சியாளர்கள் இப்புதிய போக்கைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

***“பண்ட உற்பத்தித் தொழிலில் கிடைக்கும் இலாபங்கள் “நிதித் தில்லுமுல்லு மேதைகளுக்குச்” சென்றுவிடுவது பற்றி லெனின் சுட்டிக்காட்டினார். இந்தக்கட்டுரையை லெனின் 1916 சனவரி , சூன் மாதங்களுக்கிடையே எழுதினார். நிதி மூலதனம் தொடக்க நிலையில் இருந்த அந்தக் காலத்திலேயே அதனை அடையாளம் கண்டு தொலை நோக்கோடு, பல எச்சரிக்கைகளைச் செய்த லெனினது மேதைமையை வியக்காமல் இருக்க முடியவில்லை.”***



வளர்ச்சியடைந்த முதலாளிய நாடுகளில் முதலாளிய அரசுகள் தன் தன் நாட்டுச் சமூக வளர்ச்சிக்காகத் திட்டமிடுவதில்லை. ஆனால் முதலாளிய நிறுவனங்கள் தன் தன் நிறுவன வளர்ச்சிக்காகத் திட்டமிடும்.

முதல் முதலாக சோவியத் ஒன்றியத்தில் அமைந்த நிகரமை அரசுதான் ஐந்தாண்டு வளர்ச்சித் திட்டங்களை வகுத்துச் செயல் படுத்தியது. அதை பார்த்துப் புதிதாக விடுதலை அடைந்த முதலாளிய நாடுகள் சில, தங்கள் நாட்டுக்குரிய ஐந்தாண்டுத் திட்டங்களை வகுத்தன. இந்தியாவும் ஐந்தாண்டு வளர்ச்சித் திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தியது.

ஆனால் உலகமயம் - புதிய தாராளமயம் என்ற முதலாளிய முற்றுடைமைக் கோட்பாடு செயலுக்கு வந்தபின், இந்தியா ஐந்தாண்டுத் திட்டங்களை வெறும் சடங்காக்கி, உருத்திரித்து விட்டது.

குறிப்பாக உற்பத்தித் தொழிற்சாலைகள், வேளாண்துறை ஆகிய இரண்டும் பின்னுக்குத் தள்ளப்பட்டு தகவல் தொழில் நுட்பம் சார்ந்த சேவைத்துறை முதன்மைப்படுத்தப்பட்டது. தமிழகம் உள்ளிட்டு இந்தியா முழுவதும் கடுமையான மின்வெட்டு நிலவு வதற்குரிய காரணங்களுள், உற்பத்தித் துறை இரண்டாம் இடத்திற்குத் தள்ளப் பட்டதும் ஒன்றாகும்.

பண்ட உற்பத்தியைச் சார்ந்திருந்த பழைய முதலாளியம் முற்றுடைமையாக ( ஏகபோக) வளர்ச்சி பெற்றதும் நிதிமூலதனத்தைச்சார்ந்ததாக மாறி விட்டதை லெனின் சுட்டிக் காட்டினார். அதன் தீய விளைவு களையும் சுட்டிக்காட்டினார்.
(நூல் : *ஏகாதிபத்தியம் - முதலாளியத்தின் உச்சகட்டம்*)

தொழிற்சாலைகளை விடவும் வங்கிகளும் பங்குச் சந்தைகளும் முதன்மை பெற்றன.

“...... *பண்ட உற்பத்தி இன்னும் ஆட்சி புரிந்தாலும் பொருளியல் வாழ்வின்*

*அடிப்படையெனத் தொடர்ந்து கருதப்பட்டாலும், அதன் அஸ்திவாரம் உண்மையில் பறிக்கப்பட்டு, லாபங்களில் பெரும்பகுதி நிதித் தில்லு முல்லுக்கார "மேதை" களுக்குச் சென்றுவிடும் ஒரு கட்டத்தை முதலாளிய வளர்ச்சியானது வந்தடைந்துள்ளது. இந்தத் தில்லு முல்லுகளுக்கும் மோசடிகளுக்கும் அடிப்படையில் சமூக மயமாக்கப்பட்ட* உற்பத்தியே அமைந் திருக்கிறது. ஆனால், இந்தச் சமூகமய மாக்கலைச் சாதித்த மனித சமூகத்தின் மாபெரும் முன்னேற்றத்தால் ஆதாயமடைவோர்...... ஊக வணிகர்களே". (மேலது பக். 69)

இன்று பங்குச் சந்தை என்பது ஊக வணிகச் சூதாட்டக் களமாக உள்ளது. இதற்கு முதலாளிய அரசுகள் முழு உரிமை அளித்துள்ளன. இந்தியப் பங்குச் சந்தையில் புள்ளிகள் வீழ்ச்சி அடைந்தால், நாடே அலறுகிறது; நிதியமைச்சர் வெளிநாட்டுப் பயணங்களை இரத்து செய்து, சரிவை நிமிர்த்தும் தந்திரங்களில் ஈடுபடுகின்றார்.

பண்ட உற்பத்தித் தொழிலைச் சார்ந்து, அதன் நிதித் திரட்டலுக்காகத் தொடங்கப்பட்ட பங்குச் சந்தை, இப்போது பண்ட உற்பத்தித் தொழிலைத் தன்னைச் சார்ந்ததாகக் கீழ்ப்படுத்திவிட்டது.

பண்ட உற்பத்தித் தொழிலில் கிடைக்கும் இலாபங்கள் "நிதித் தில்லுமுல்லு மேதைகளுக்குச்" சென்றுவிடுவது பற்றி லெனின் சுட்டிக்காட்டினார். இந்தக் கட்டுரையை லெனின் 1916 சனவரி , சூன் மாதங்களுக்கிடையே எழுதினார். நிதி மூலதனம் தொடக்க நிலையில் இருந்த அந்தக் காலத்திலேயே அதனை அடையாளம் கண்டு தொலை நோக்கோடு, பல எச்சரிக்கைகளைச் செய்த லெனினது மேதைமையை வியக்காமல் இருக்க முடியவில்லை.

தொழில்நுட்பம் வளர வளர, அதனைப் பயன்படுத்தி, ஊக வணிகம் பெரிய அளவில் வளர்ந்து பொருளியல் ஒழுங்கைச் சீர்குலைத்து அராஜகங்கள் புரியப் போவதை லீஃப்மன் மேற் கோளைத் தமது கருத்துக்கான சான்றாக எடுத்துக்காட்டி எச்சரிக்கிறார்.

"லீஃப்மன் பின்வருமாறு ஒப்புக்கொள்ள வேண்டியதாகிறது.

'பெரிதும் நிகழக்கூடியது என்னவெனில், பொருளியல் அமைப்பின் ஒழுங்கினை மேலும் பாதிக்கும் இன்னும் பல முக்கியத் தொழில் நுட்பப் புரட்சிகளை மனித குலம் கூடிய விரைவில் காணப்போகிறது..... தீவிரப் பொருளாதார மாறுதல் ஏற்படும் இம்மாதிரியான காலங்களில் பொது விதியாக ஊக வணிகம் பெரிய அளவில் வளரவே செய்யும் !"

தொழில்நுட்பப் புரட்சிகள் ஏற்படுவதற்குக் காரணிகளாக அமைய உள்ள "மின்சாரம் , விமானப் போக்கு வரத்து" ஆகியவற்றை லெனின் சுட்டிக்காட்டினார். ( மேலது பக்கம் 73)

இ ப் பொ ழு து , தொழில்நுட்பப்புரட்சி, தகவல் தொழில்நுட்பத்தில் ஏற்பட்டது. அது பண்ட உற்பத்தித் தொழில்களை முழுக்க முழுக்க நிதி மூலதனத்தை, வங்கிகளை - பங்குச் சந்தையைச் சார்ந்ததாக மாற்றியுள்ளது.

பங்குச் சந்தையில் பங்கின் மதிப்புப் புள்ளிகள் வீழ்ச்சியடையும் போது, பங்குகளைத் திரும்பப் பெறுகின்றனர். பண்ட உற்பத்தித் தொழில்களுக்கும் மற்ற சேவைத்துறை உள்ளிட்ட தொழில்களுக்கும் மூலதனம் வற்றிவிடுகிறது. மூலதனம் பாய்ந்து வரும் வாய்க்காலில் அடைப்பு ஏற்பட்டு தேக்கநிலை உருவாகிறது. இதனால் தொழில்கள் மூடப்படுகின்றன. விரிவாக்கங்கள் நிறுத்தப்படுகின்றன. உற்பத்தி அளவு குறைக்கப்படுகின்றன.

நிதிமூலதனத்தில் இருந்த ஊக வணிகம், தகவல் தொழில் நுட்பப் புரட்சிக்கான கணிப்பொறிகள் வந்த வுடன் அன்றாட வாணிகத்திற்கும் வந்து கோலோச்சுகிறது. தங்கம், பருப்பு, எண்ணெய் உள்ளிட்ட பல்வேறு பண்டங்களின் விலை ஊக வணிகர் களால் தீர்மானிக்கப்படுகிறது. சந்தைதன் போக்கில் விலைகளைத் தீர்மானிக்க வாய்ப்பில்லை; பொருள் ஓர் இடத்தில் நிலையாக இருப்பு வைக்கப் பட்டிருக்கும். எங்கோ ஒரு கிட்டங்கியில் இருக்கும். அப்பொருள் அங்கே இருக்கும்போதே பல பேர்க்குக் 'கைமாறும்' . அதாவது அப்பொருள் பற்றிய தகவல்கள் தாம் பரிமாறிக் கொள்ளப்படும். இந்த பரிமாற்றம் இணைய தளத்தில் நடைபெறுகிறது. ஒருவர் 90 நாட்களுக்கு அக்கிட்டங்கியில் அப்பொருளை வைக்கலாம். அதற்குள் இன்னொருவர்க்கு கைமாறினால் (இணைய தளத்தில்) அவருக்கு 90 நாட்கள் அதே இடத்தில் இருக்கலாம். இணைய தளத்தில் ஊகமாக ஒருவிலை வைக்கப்பட்டு , அதை வாங்குவோர் கைக்கு, இருந்த இடத்தில் இருந்தபடியே கைமாறும். இணையதளத்திரைதான் சந்தை. கற்பனை விலைவைத்து , கரவாகப்பேசி விலை உயர்த்துவோர் தாம் சந்தையின் "புதிய மக்கள் "

இவர்களைத் திருட்டுக்கும்பல் என்று சொல்லாமல், முதலாளி, வணிகர் என்று சொல்ல முடியுமா?

இவர்களுக்கு சட்டப் பாதுகாப்பை முழுமையாகத் தந்திருப்பது தாராளமயம்.

கண்ணுக்குத் தெரியாத சந்தையின் கை ஒன்று சந்தையை ஒழுங்குபடுத்தும் என்று ஆடம்ஸ்மித் கூறியதை இப்பொழுது இப்படி மாற்றிக் கூறலாம்; நுகர்வோரின் கண்ணுக்குத்தெரியாத கையொன்று சந்தை அராஜகத்தைக் கட்டவிழ்த்து விடும்; அக்கை ஊக வணிகர்களின் கை!

நுகர்வோர்க்கு மட்டுமல்ல, அந்த மாயக்கை அரசுக்கே தெரியாது. தெரிய வேண்டியதில்லை என்று விதி முறைகளை இந்திய அரசு உருவாக்கியுள்ளது. இந்தியப் பங்குச் சந்தைக் கட்டுப்பாட்டு வாரியம் (செபி) அதற்காக விதிகளைத் தளர்த்தியுள்ளது.

யாரென்றே தெரியாத அயல் நாட்டு நிறுவனங்கள், அயல் நாட்டு தனிநபர்கள் இந்தியப் பங்குச்சந்தையில்

மூலதனம் போட்டு சூதாடலாம்! அயல்நாட்டுப்பணம், பணம், பணம் அதுதான் தேவை. எங்கிருந்து வருகிறது. யாரிடமிருந்து வருகிறது. எப்படி வருகிறது என்று தெரிவிக்க வேண்டிய தேவை இல்லை. அது சந்தைச் சூதாட்டத்தில் விளையாடி விட்டு, எப்பொழுது வேண்டுமானாலும் வெளியேறிக்கொள்ளலாம் . இதற்குப் பெயர் 'பறக்கும் பணம்' (Hot Money).

மன்மோகன் சிங் - ப. சிதம்பரம் அலுவாலியா மூவர் கொற்றம் இவ்வாறு நாட்டை அயல்நாட்டார் வேட்டைக்குத் திறந்துவிட்டுள்ளது.

இப்பொழுது அன்றாடம் பங்குச் சந்தைப் புள்ளிகள் வீழ்ச்சி யடைவதில், மேற்படி பெயர் தெரியாத சகுனிகள் திரும்பப்பெற்றுக்கொண்ட சூதாட்டப் பங்கேற்புப் பத்திரங்கள் எவ்வளவு என்று செய்திகள் வெளியாகி வருகின்றன. கடந்த சனவரியிலிருந்து ஆகஸ்ட் வரை 800 கோடி டாலர்களை வெளிநாட்டு நிறுவனங்கள் திரும்ப எடுத்துச்சென்றுவிட்டன. அதன்பிறகு 15000 கோடி டாலர் அளவுக்கு இன்னும் பங்குச்சந்தையில் வெளிநாட்டு நிறுவனங்களின் பணம் இருக்கிறதாம் செப்டம்பர் - அக்டோபரில் இதில் கணிசமாக எடுத்திருப்பார்கள்.

பெயர் தெரியாத சகுனிகளைப் பங்குச் சந்தையில் அனுமதிக்கக் கூடாது என்று ஏற்கெனவே, இந்தியச் சேம வங்கி எச்சரித்துள்ளது. ஆனால் மூவர் கொற்றம் அதையெல்லாம் சட்டை செய்யும் மனநிலையில் இல்லை. அமெரிக்க மாமா சொன்னால் தான் கேட்பார்கள். அந்த மாமாவோ அங்கே முன்பல் இரண்டும் உடைந்து வாய்திறக்கவே கூச்சப்படுகிறார்.

ஏகாதிபத்தியத்திற்கான வரையறையை மிகத் துல்லியமாக லெனின் சொன்னார்.

*1. பொருளியல் வாழ்வில் தீர்மானிக்கும் ஆற்றல் உள்ள முற்றுடைமைகளை ( ஏகபோகங்களை) தோற்றுவிக்கும் வகையில் உயர்ந்த கட்டத்திற்கு உற்பத்தியின், மூலதனத்தின் ஒன்று குவிப்பு வளர்ந்து விடுதல்.*

*2. வங்கி மூலதனம் தொழில்துறை மூலதனத்துடன் ஒன்று கலந்து நிதி மூலதனம் உருவாதல்; இந்த நிதி மூலதனத்தின் வழி நிதியாதிக்கக் கும்பல் உருவாதல்.*

*3. பண்ட ஏற்றுமதியைவிட மூலதன ஏற்றுமதி தனி முக்கியம் பெறுதல்.*

*4. பன்னாட்டு முற்று டைமைக் கூட்டுகள் உருவாகி, உலகைத் தமக்கிடையே பங்கிட்டுக் கொள்ளுதல்.*

*5. இத்துடன் , மிகப்பெரிய முதலாளிய அரசுகளிடையே அனைத்து உலகப் பரப்பும் பங்கிடப் படுதல் நிறைவடையும்*

*( மேலது பக்கம். 171)*

1990 களில் சந்தை வழியாக உலகை விழுங்கக் கிளம்பியது ஏகாதிபத்தியம். அதற்கு மிகப் பெரும்பாலான நாடுகளின் ஒப்புதலைப் பெற்ற காட் ஒப்பந்தம்; அதன்வழி உருவாக்கப்பட்ட உலக வணிக அமைப்பு (WTO) ஆகியவை லெனின் காலத்தில் உருவாகாதவை. ஆனால் லெனின் கணித்த வரையறுப்புகளை அவை மெய்ப்பித்தன.

சிட்டி வங்கி, சிட்டி பைனான்ஸ், எச்.எஸ்.பி.சி., ஆக்ஸிஸ் போன்ற பல வெளிநாட்டு வங்கிகளும், அவிவா, ஏ.ஐ.ஜி., அலையன்ஸ், ஐ.என்.ஜி. போன்ற பல வெளிநாட்டுக் காப்பீட்டுக் கழகங்களும் தமிழகம் உள்ளிட்டு இந்தியாவெங்கும் வந்து வலை விரித்துள்ளன.

தொழிற்துறையில், போர்டு, யுண்டாய், நோக்கியா, ஹோண்டா என பல்வேறு வெளிநாட்டு நிறுவனங்கள் வந்துவிட்டன.

இந்தியாவில் டாட்டா, ரிலையன்ஸ், டி.வி.எஸ், பஜாஜ் போன்ற நிறுவனங்கள் பன்னாட்டு நிறுவனங்களாக வளர்ச்சி யடைந்துள்ளன.

ஒரு குறிப்பிட்ட பண்ட உற்பத்தியில் ஏற்பட்ட முற்றுடைமை பலபொருள் உற்பத்திகளைக் கைப்பற்றும் முற்றுடைமையாக வளர்ந்தது. மோட்டார் உற்பத்தி தொடங்கி, ஊறுகாய், உப்பு வரை, டாட்டா நிறுவனம் உற்பத்தி செய்கிறது. ஒரு நாட்டு முற்றுரிமை நிறுவனம், பல நாட்டு முற்றுடைமை நிறுவனமாகியது; அதுவே உலக முற்றுடைமை நிறுவனமாக வளர்ந்தது.

முதலாம், இரண்டாம் உலகப்போருக்குப்பிறகு, ஏகாதிபத்தியங்களுக்கிடையே போர் இல்லாமல் உலகைப் பங்கிட்டுக்கொள்ள உலகவங்கி, ஐ.எம்.எஃப், காட் ஒப்பந்தம் போன்றவை நிறுவப்பட்டன, ஆனாலும் சோவியத் ஒன்றியம் இடையூறாக இருந்தது. அந்த நிகரமை நாடு வீழ்ச்சியடைந்தவுடன் உலகம் தாராளமாக ஏகாதிபத்திய நாடுகளால் பங்கிட்டுக்கொள்ளப்பட்டது.

ஏகாதிபத்தியத்தின் தனிக் குணமாக தேசிய ஒடுக்குமுறையை லெனின் குறிப்பிடுகிறார். ஏகாதி பத்தியத்தின் உலகமயக் காலகட்டம் இப்பொழுது நடந்து கொண்டுள்ளது. உலகமயம் என்பதன் சாரம் தேச மறுப்பாகும். உலகம் ஒரே சந்தை என்பதுதான் அதன் தாரகமந்திரம்.

இந்த ஏகாதிபத்தியமும் அதன் துணைத்தளபதிகளின் நாடுகளும் இன்று தன்முரண்பாடுகளால் நொறுங்கி விழத் தொடங்கியுள்ளன. ஏகாதி பத்தியங்களின் வளர்ச்சி அதன் முழுமையை அடைந்துவிட்டது. அதற்கு இனிமேல் வளர்ச்சியில்லை. சிதைவுகள் தாம் அதன் எதிர்காலம். ஆனால் இந்த அழிவைத் தடுத்து நிறுத்த, மாற்று ஏற்பாடுகளும், சீர்திருத்தங்களும் செய்து கொள்ள ஏகாதிபத்திய நாடுகளும் முதலாளிய உலகமும் முயல்கின்றன. ஆனால் அதற்கான கருத்தியல் ஆய்தம் அவற்றிடம் இல்லை.

வரலாற்றில், ஏகாதிபத்தியம் போல் மனித குலத்திற்குத் தீங்கிழைத்த அரசு வடிவம் வேறு எதுவுமில்லை. கொள்ளைக்கார மன்னர்கள் இருந்தார்கள். அவர்களை விட கொடியவர்கள் ஏகாதிபத்திய ஆட்சியாளர்களும், பன்னாட்டு நிறுவனத்தலைமை நிர்வாகிகளும்.

பியர் ஸ்டெர்ன்ஸ் (Bear Stearms) என்ற வங்கி நிர்வாகிகள், அவ்வங்கி திவாலாகப் போகிறது என்பதைத் தெரிந்து கொண்டு, அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல், நூற்றுக்கணக்கான கோடி டாலர்களை போனசாக எடுத்துக்கொண்டார்கள் என்கிறார் இதழாளர் சாய்நாத். ரோமாபுரி தீப்பற்றி எரிந்தபோது நீரோமன்னன் பிடில் வாசித்ததாக ஒரு கண்டனம் உள்ளது. அந்த நீரோவை விட கொடியவர்கள் இல்லையா இந்த நிர்வாகிகள்? மாதம் 15 லட்சம் ரூபாய் சம்பளம் எடுத்துக்கொள்ளும் நிர்வாகிகளுக்கு இது அல்லாமல், கார் , வீடு உள்ளிட்ட இலவச வசதிகள் ஏராளம் என்கிறார் தேவேந்திர சர்மா.

தமிழ்நாட்டில் உள்ள தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களில் மாதம் ஐம்பதாயிரம் ரூபாய் சம்பளம் பெறும் ஊழியர்கள் பலர் இருக்கிறார்கள். மக்களைக் கொள்ளையடிக்கும் இந்நிறுவனங்கள் அக்கொள்ளையில் ஒரு பங்கை ஊழியர்களுக்கும் , தொழிலாளர்களுக்கும் வழங்கி , அவர்களைத் தம்பக்கம் ஈர்த்துக் கொள்கின்றன. இவர்கள் முற்றுடைமை முதலாளிகளின் பன்னாட்டுக் கொள்ளையின் ஆதரவாளர்களாக மாற்றப்படுகின்றனர்.

இந்தியாவில் இடதுசாரிக் கட்சிகளே பன்னாட்டு முற்றுடைமை நிறுவனங்களை அழைப்பதை மேற்குவங்கத்தில் பார்க்கிறோம். அந்நிறுவனங்களை எதிர்க்கும் உழவர்களை சுட்டுத்தள்ளியது அங்குள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி. காவல்துறையினரை மட்டும் நம்பாமல் கட்சித் தொண்டர்களையும் ஏவி உழவர்களைத் தாக்கியது.

இவ்வாறு தொழிலாளி வர்க்கத்தின் ஒரு பகுதி முதலாளியக் கொள்ளையின் காவலர்களாக மாறுவது காரல் மார்க்ஸ் காலத்திலேயே நிகழ்ந்தது. அவர்களைத் "தொழிலாளர் பிரபுக்கள்" என்று கண்டனம் செய்தார் மார்க்ஸ்.

*லெனின் இவ்வாறு கூறினார் : "தெளிவாக, இத்தகைய பிரம்மாண்ட மிகை இலாபங்களை ( முதலாளிகள் தமது "சொந்த" நாட்டுத் தொழிலாளர்களைக் கசக்கிப் பிழிந்து பெறும் இலாபங்களைவிடக் கூடுதலானவை) பயன்படுத்தி, தொழிலாளர் தலைவர்களுக்கும், தொழிலாளர் பிரபுக் குலத்தோரின் (Labour aristocrats) மேல் மட்டத்தினருக்கும் லஞ்சம் கொடுக்க முடிகிறது. முன்னேறிய நாடுகளின் முதலாளிகள் இதையேதான் செய்கிறார்கள். இந்த மேல் மட்டத்தினருக்கு வெவ்வேறான ஆயிரம் வழிகளில் நேர்முகமாகவும், மறைமுகமாகவும், வெளிப் படையாகவும், திருட்டுத்தனமாகவும் லஞ்சம் கொடுக்கிறார்கள்.*

*"முதலாளிகளாக மாறிய இந்தத் தொழிலாளர்கள் அல்லது "தொழிலாளிப் பிரபுக் குலத்தோர்" தங்களது வாழ்க்கை முறையிலும், ஊதியத்தின் அளவிலும், தங்கள் கண்ணோட்டம் முழுவதிலும் அற்பவாதி மனப்பான்மை கொண்ட இவர்கள், இரண்டாவது அகிலத்தின் முதன்மைத் தூண்கள் ( இராணுவத் தூண்கள் அல்ல) ஆவர். ஏனெனில், அவர்கள். தாம் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் முதலாளிய வர்க்கத்தின் மெய்யான கையாள்கள், முதலாளிய வர்க்கத்தின் தொழிலாளர் தளபதிகள் ( Labour lieutenants of the capitalist Class) சீர்திருத்த வாதத்திற்கும் தேசிய வெறிக்குமான மெய்யான சாதனங்களாக இருக்கின்றனர்.*

-லெனின் ***ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சகட்டம்*** நூல் முன்னுரை - பக் - 47,48 இம்முன்னுரை 1920 ஜூலை 6-இல் பிரஞ்சு பதிப்புக்காக எழுதப்பட்டது.

உலகெங்கும் நொறுங்கிவரும் உலகமயம் இந்தியாவிலும் நொறுங்கத் தொடங்கியுள்ளது. இப்போது தமிழக உழைக்கும் மக்களின் கடமைகளைத் துல்லியப்படுத்திக்கொள்வது கட்டாயத்தேவை.

தங்கள் தங்கள் அரசுக் கெதிரான மக்கள் எழுச்சிகள் உலகெங்கும் பரவும். இந்தியாவிலும் எழுச்சி படரும்.

ஒவ்வொரு நாட்டு எழுச்சியும் அந்நாட்டின் குறிப்பான சிக்கல்களில் மையங்கொண்டு உருவாகும். இந்தியா ஒரு பலதேச நாடு என்பதால் இங்கு ஒவ்வொரு மாநிலத்திலும் அதற்கென உருவாகும் நெருக்கடிகளிலிருந்து போராட்டம் வெடிக்கும். தனித்தனி வடிவம் கொண்டிருக்கும்.

எடுத்துக்காட்டாக, மராட்டி யத்தில் வடவரை வெளியேற்றக்கோரி எழுந்துள்ள போராட்டம் தீவிரப்பட்டு, பல்வேறு சிக்கல்களையும் தழுவியதாக வளரும் . ஆனால் எல்லா மாநிலங்களிலும் வெளியாருக்கெதிரான போராட்டம் வெடிக்கும் என்று கருதக்கூடாது.

உலகத்தை ஒரே சந்தையாக்கிய உ லகமயத்தை வீழ்த்த, உலகத்தைப் பலதேசச் சந்தையாக்குவதே சிறந்த வழி. இந்தியத் துணைக்கண்டத்தை ஒரே சந்தையாக்கியுள்ளார்கள். இதை மாற்றி மொழிவாரி மாநிலம் ஒவ்வொன்றையும் தனித் தேசியச் சந்தையாக்க வேண்டும்.

*தமிழ்த் தேசச்சந்தை தமிழக அரசின் முழுக்கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். உணவுப் பொருள்கள், மற்ற நுகர்வுப் பொருட்கள், தொழிற்சாலைகள், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் அனைத்தும் தமிழகச் சந்தை விதிகளுக்கு உட்பட்டவை என்று ஆக்கினால், உலகமயப் பேரழி விலிருந்து தமிழக மக்களைப் பாதுகாக்க வழி கிடைக்கும்.*

இந்திய ஆளும் வர்க்கக் கட்சிகள் மேற்கண்ட உரிமைகள் போய்விட்டால், தங்கள் கொள்ளைக்கும் பேரதிகாரத்திற்கும் ஆபத்து என்று எதிர்க்கும். அக்கோரிக்கை எழுப்புவோர் மீது அடக்குமுறை ஏவும்.

இந்த உரிமைகளைத் தமிழக கங்காணிக்கட்சிகள் கேட்கமாட்டா. இவ்வாறான உரிமைகள் மாநிலங் களுக்குக் கிடைப்பது இந்திய தேசியத்திற்கு ஆபத்து என்று இடதுசாரிக்

கட்சிகள் எதிர்க்கும்.

மிஞ்சியிருப்பது தமிழ்த்தேசிய இயக்கங்கள் தாம்.

*எமது தேசியமொழி தமிழ்*
*எமது தேசிய இனம் தமிழர்*
*எமது தேசம் தமிழ்த்தேசம்*

*இறையாண்மையுள்ள தமிழ்த் தேசக் குடியரசு அமைப்பது எமது இலக்கு* என்ற துல்லியமான வரையறுப்பும் இலட்சியமும் கொண்ட தமிழ்த்தேசிய இயக்கமாக இருக்கவேண்டும்.

வர்ண - சாதி எதிர்ப்பை உள்ளடக்கிய மண்ணுக்கேற்ற மார்க்சியம் அந்த தமிழ்த் தேசியத்தின் தத்துவமாகஇருக்கவேண்டும். நிகரமைச் சமூகம் ( சோசலிசச்சமூகம்) படைப்பதை இலக்காகக் கொண்டிருக்கவேண்டும்.

பதவி, பணம், புகழ் இவற்றில் ஆசைவைக்காத ஒப்படைப் பாளர்களைக்கொண்ட அமைப்பாக இருக்க வேண்டும்.

தேர்தல்பாதையைப்புறந்தள்ளி போர்க்குணம் மிக்க மக்கள் எழுச்சிப் போராட்டப் பாதையில் செல்ல வேண்டும்.

இத்தகுதிகளைக்கொண்ட அமைப்பு தொடக்கத்தில் சிறிதாக இருந்தாலும் விரைந்து வளரும்.

இவ்வாறான மாற்று அமைப்பு ஒன்றினை உருவாக்கத் தம்மாலான பங்களிப்பு செலுத்த முன்வராதவர்கள், அதற்காக உழைக்க முன்வராதவர்கள் , இருப்பவற்றுள் குறைந்த தீமை பயக்கும் தேர்தல் கட்சியை ஆதரிக்கும் புளித்துப்போன கோட்பாட்டைப் பேசுவார்கள்; அவநம்பிக்கையை விதைப்பார்கள். இதன் விளைவு, நடைமுறையில் உள்ள தீமையை அப்படியே ஆதரிப்பது என்பதுதான். அதாவது மாமூல் நிலைமை மாறாமல் இருக்க ஆதரவளிப்பதுதான்

இச்சிந்தனை புதிய மாற்றத்தின் தடைக்கல்லாகும்! பொருளியல் தேக்கநிலை- அரசியல் தேக்க நிலையை உடைக்கும். அதன் விளைவாக அரசியல் நிலையற்ற தன்மை உருவாகும். அரசியல் நிலையற்ற தன்மை புரட்சிக்கான எழுச்சியைத் தொடங்கிவைக்கும்.

## நெய்வேலி மின்சாரம் தமிழகத்திற்கே
## தொழில்முனைவோர் உண்ணாப்போராட்டம்

வெளிநாட்டு பெரு நிறுவனங்களுக்கு தடையற்ற மின்சாரம் வழங்கும் தமிழக அரசு தமிழ்நாட்டு சிறுதொழில் முனைவோருக்கு மின்வெட்டை பரிசாக வழங்குகிறது. இதனைக் கண்டித்தும், அசாம், அரியானா, ஆந்திரா ஆகிய மாநிலங்களில் தேசிய அனல் மின்கழகம் உற்பத்தி செய்யும் மின்சாரத்தை அந்தந்த மாநிலங்களுக்கே வழங்குவது போல் நெய்வேலி மின்சாரம் முழுவதையும் தமிழகத்திற்கே வழங்க வலியுறுத்தியும், சிறுதொழில் முனைவோர் உண்ணாப்போராட்டம் நடத்தினர்.

சிதம்பரம் சிறுதொழில் முனைவோர் அமைப்பு சார்பில் 14.10.2008 காலை 8.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை கொட்டும் மழைக்கு இடையிலும், திரளானோர் கலந்துகொண்ட உண்ணாப்போராட்டம் சிதம்பரம் பெரியார் சதுக்கத்தில் நடைபெற்றது. அமைப்பாளர் திரு கு. சிவப்பிரகாசம் தலைமைதாங்கினார். திருவாளர்கள். மா.கோ. தேவராசன் , பால ரவி , பொன் . சக்திவேல், சீ. அருண்ராஜ், ஆ. உதயன், பெரி. முருகப்பன், கோ. சுப்புராயன், ச. செந்தில்குமார், எல். துரைராஜ், க. சேகர், க. சக்திவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிதம்பரம் வர்த்தகர் சங்கத்தலைவர் திரு இராம. ஆதிமூலம், குறுந்தொழில் சங்க மாவட்டத்துணைத்தலைவர் திரு. கு. சீராளன், சிதம்பரம் புகைப்படக் கலைஞர் சங்க செயலாளர் திரு க. மணிகண்டன், தமிழ்நாடு ஓவியர் சங்க மாநில அமைப்புச் செயலாளர் திரு. அ. அன்பழகன், மக்கள் விழிப்புணர்வு இயக்கத்தலைவர் திரு. சி. மதியழகன் , வர்த்தகர் சங்க துணைச்செயலாளர் திரு கோ. முரளி, அக்னி சிறகுகள் ஆலோசகர் திரு. அ. குபேரன் , தமிழக உழவர் முன்னணி மாவட்டத்தலைவர் , திரு அ.கோ. சிவராமன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

தமிழக உழவர் முன்னணி ஆலோசகர் திரு கி. வெங்கட்ராமன் விளக்கவுரையாற்றி, பழச்சாறு அளித்து உண்ணாப் போராட்டத்தை முடித்து வைத்தார்.

நிறைவில் இரா. வெங்கடேசன் நன்றி கூறினார்.



# மருத்துவர்களும் மத குருக்களும் - 4

ம.செந்தமிழன்

ப பகுத்தறிவுவாதம் பொருள்முதல் வாதத்திற்கு நெருக்கமானது என்ற புரிதல் உள்ளது. ஆனால் **பகுத்தறிவுவாதம் கொச்சைப் பொருள் முதல்வாத வகையைச்சேர்ந்தது. கொச்சைப் பொருள்முதல்வாதம் இறுதியில் கருத்து முதல் வாதத்திற்கு வலு சேர்க்கிறது.** இக்கூற்றை மெய்ப்பிக்கும் சான்றுகளைக் காண்போம்.

இந்திய நிலப்பரப்பில் நிலவிய பண்டைய மெய்யியல்களின் தேடலில் உலகின் தோற்றம் குறித்த சிந்தனையே மிகுதியாகக் காணப்பட்டது. உலகம் எப்படித் தோன்றியது? எதனால் ஆக்கப்பட்டது? யாரால் தோற்றுவிக்கப்பட்டது? எவ்வாறு இயங்குகிறது? ஆகிய கேள்விகளுக்கு விடை காணும் முயற்சியில் மெய்யியலாளர்கள் ஈடுபட்டனர்.

ஆரிய வேதியர்கள் மேற்கண்ட அனைத்து வினாக்களுக்கும் 'கடவுள்' என்ற கருத்தை விடையாக முன் வைத்தனர். நான்கு வேதங்கள், பிராமணங்கள், ஆரண்யங்கள், உபநிடதங்கள் ஆகிய நூல்கள் பல்வேறு கடவுளர் குறித்துப் பாடுகின்றன. வேத காலம் என்றழைக்கப்படுவது இந்நூல்களின் காலமேயாகும்.

இவையனைத்தும் கருத்துமுதல் அடிப்படையிலானவை. ஆயினும் இந்நூல்கள் நேரிடையான மெய்யியலைப் பேசவில்லை. வேதியரின் மெய்யியல்கள் வேதகாலத்திற்குப் பிறகே தோன்றி வளர்ந்தன.

வேதகால மெய்யியல்களில் மீமாம்சம், நியாய வைசேடிகம் ஆகிய இரண்டும் முகாமையானவை. மீமாம்சம் கடவுள் மறுப்புக் கோட்பாடு. நியாய வைசேடிகம் கடவுள் ஏற்புக் கோட்பாடு. அதே வேளை மீமாம்சம் ஒரு முழுமையான பொருள் முதல் வாதம் அல்ல என்பது குறிப்பிடத்தக்கது. நியாய வைசேடிகமும் முழுமையான வேத ஆதரவுக் கோட்பாடு அல்ல.

இவ்விரண்டு கோட்பாடுகளுக்கிடையில் நிகழ்ந்த விவாதம் ஒன்றை பேரா. நா. வானமாமலை விளக்கியுள்ளார்.[1]

'நியாய வைசேடிகர்கள் கடவுள் உண்டென்று கீழ்வருமாறு விவாதித்தார்கள் :

"பாண்டம் இருந்தால் அதைச் செய்த குயவன் இருக்க வேண்டும் குயவன் அறிவுடைய படைப்பாளி. இது போலவே பிரபஞ்சம் இருப்பதால் அதற்கு ஒரு படைப்பாளியும் இருக்க வேண்டும். அவன் பரிபூரண ஞானமும் எல்லா இடங்களிலும் நீக்கமற வசிப்பவனுமாக இருத்தல் வேண்டும். இப்பிரபஞ்சத்தை அவன் அணுக்களாய்ப் படைத்து யுகாந்திரங்களில் அழிக்கிறான்."

பிரபஞ்சப் படைப்பு பிரபஞ்ச அழிப்பு பற்றிய இக்கொள்கையை மீமாம்சர்கள் எதிர்த்தார்கள். அவர்கள் வாதம் வருமாறு :

"ஒவ்வொரு பொருளுக்கும் ஆரம்பமும் முடிவும் உண்டு. உதாரணமாக நீ கூறும் பாண்டத்தை எடுத்துக் கொள்வோம் இதனால் பிரபஞ்சம் படைக்கப்பட்ட தென்பதோ அல்லது இது அழிக்கப்படும் என்பதோ நிரூபணமாகிவிடவில்லை. புதிதாக உருவாவதும், இருப்பதும், அழிவதுமான ஒரு தொடர்ந்த செயல்முறைதான் பிரபஞ்சத்தில் காணப்படுகிறது. தனித்தனிப் பொருள்களைப் பொறுத்தவரை நம்மால் அறியப்படுவதற்கு மேல் அவற்றைப் பற்றி கற்பனை செய்து கொள்ள வேண்டியதில்லை. உன்னைப் பெற்றவர்கள் உனது தாயும் தந்தையும். நீ பிறக்க ஒரு கடவுளைக் கற்பனை செய்து கொள்ள வேண்டியதில்லை."

மேற்கண்ட விவாதத்தில் நியாய வைசேடிகர்களின் அடிப்படைத் தர்க்கம் என்னவெனில் :

பிரபஞ்சம் படைக்கப்பட்டதல்ல என்றால் அது தர்க்க நியாயமற்றது. ஏனெனில் ஒரு பொருள் இருந்தால் அதைச் செய்தவர் வேண்டும்.

இது அடிப்படையில் காரண – காரிய வாதமே ஆகும். ஆகவே இதுவும் தர்க்க அணுகுமுறையே. (Logical approach) என்பதில் ஐயமில்லை.

பகுத்தறிவுவாதம் அனைத்தையும் பொருள்களாகவும் செய்திகளாகவும் அணுகுகின்றது. (material and matter) அனைத்திற்கும் காரண – காரிய விளக்கம் கேட்கிறது.

பண்டைய பொருள்முதல்வாத மெய்யியல்களை ஒழித்துக்கட்ட களம் இறங்கிய கருத்துமுதல் வாதிகள் அனைவரும் காரண - காரியவாதிகள்தான்.

பிரபஞ்சத் தோற்றம் குறித்த சகல பொருள்முதல்வாத விளக்கங்களையும் அவர்கள் காரண – காரியம் எனும் ஒற்றை ஆயுதம் கொண்டே வலுவிழக்கச் செய்தனர்.

ஆனால் காரண - காரியத்தொடரில் காரணர் அல்லது கர்த்தா என்பதை இன்றியமையாக் கூறாக வலியுறுத்தினர். பொருள்முதல்வாத முகாமைச் சேர்ந்தவர்களில் கணிசமானோரை ஏற்கும்படியும் செய்தனர்.

'அணுத்துகள்களின் சேர்க்கையே பிரபஞ்சம்' என்ற அணுவியக் கோட்பாடு பண்டைய மெய்யியல்களின் அறிவியல் அறிவின் உச்சம். கருத்துமுதல்வாதிகள் அறிவியலுக்கு விரோதமானவர்கள் ஆனால் ஒரே ஒரு கேள்வியால் அணுவியத்தின் அடிப்படையையே கேள்விக்குள்ளாக்கினர். 'அணுக்களின் சேர்க்கை எனில் அணுக்களைப் படைத்தது யார்?'

இவ்வகைக் கேள்விகளால் அவர்கள் பொருள்முதல்வாதத் தளத்தைக் கடுமையாகத் தாக்கினர். இவர்களுக்கு அறிவுசீவிகள் என்ற பிம்பமும் கிடைத்தது.

காரண – காரியம் என்ற தர்க்க வியலைத் திரித்து அதை மட்டும் பிடித்துக் கொண்டிருந் தமையே இத்தகைய பிம்பத்தை ஏற்படுத்த உதவியது.

பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்த இந்த கோட்பாட்டுப் போரின் உச்சமாக ஆதி சங்கரரின் ஒருமைவாதம் (அத்வைதம்) தோன்றியது.

சங்கரர், 'பிரபஞ்சம் வேறு படைத்தவன் வேறு அல்ல. இரண்டும் ஒன்றே. அதுவே பிரம்மம்'
என்றார்

பொருள்முதல்வாதிகள் பிரபஞ்சத் தோற்றம் குறித்து எவ்வளவுதான் அறிவியல்பூர்வ விளக்கங்கள் அளித்தாலும் 'அவையனைத்துமே பிரம்மத்தில் அடங்கியவையே' என்றார் சங்கரர்.

ஒருமைவாதத்தின் ஆழத்தில் காரண – காரியமே அடித்தளமாக நின்றது. மேலோட்டப் பார்வையில் ஒருமைவாதம் காரணம், காரியம் ஆகிய இரண்டையும் நிராகரிப்பது போலத் தோன்றினாலும் ஒருமைவாதம் காரண – காரியத்தின் உச்ச வடிவமே.

ஆனால் அது ஒரு தந்திரமான வடிவம் ஏன், எதனால் என்ற கேள்விகளை விட 'யாரால்' என்ற கேள்வியையே அது அதிகம் வலியுறுத்தியது.

அது எப்படித் தோன்றியது? அதற்கும் முந்தையது எப்படித் தோன்றியது? போன்ற வினாக்களை முடிவிலிகளாக (infinite) அடுக்கிக் கொண்டே போனால் இறுதியில் மிஞ்சுவது சுழியமே (பூஜ்ஜியமே).
இந்தச் சுழியமே பிரம்மம் என்றது சங்கரரின் ஒருமைவாதம்.

காரணர் இல்லாத காரண – காரிய அணுகுமுறையை பிரபஞ்சத்தோற்றத்திற்கு பொருள்முதல்வாதக் கோட்பாட்டின் படி பொருத்தினால் 'பிரபஞ்சம் இருந்துகொண்டுள்ளது – அதற்குத் தொடக்கமும் இல்லை. முடிவும் இல்லை' என்ற பதில் கிடைக்கும் சுழியம் தோன்றாது, பிரம்மமும் தோன்றாது.

மனிதர் குறித்த கோட்பாட்டுத் தளங்களில் தமிழர், உடல், உயிர், மனம் என்ற பகுப்பைக் கொண்டிருந்தனர். வேதியர், உடல், ஆன்மா என்று பகுத்தனர். உடலே அடிப்படை என்பது பொருள்முதல்வாதம். ஆன்மாவே அடிப்படை என்பது கருத்து முதல்வாதம்.

காரண - காரியத்தின் மற்றும் ஒரு கேள்வி,
'இறந்த பின் உயிர் எங்கு போகிறது?' என்பதாகும்.

எந்த ஒரு நிகழ்வையும், தொடர் காரண – காரிய கண்ணிகளின் இணைப்பாக மட்டுமே அணுகுவது இத்தகைய கேள்விகளை எளிதில் எழுப்பும். எத்துணை விடைகள் கிடைத்தாலும் இக்கேள்விகள் எழுப்பப்பட்டுக் கொண்டே இருக்கும்.

ஏனெனில் காரண - காரியத் தொடரில் எல்லா நேரத்திலும் காரணம் வெளிப்படையாக தோன்றுவது இல்லை.உடனடிக் காரணம், அடிப்படைக் காரணம், நேரடிக்காரணம், மறைமுகக் காரணம் என்று பலக்காரணிகள் இருக்கின்றன. இவற்றுள் நேரடிக்காரணிகளை மட்டுமே காரியத்தோடு தொடர்பு படுத்த வலியுறுத்துவதில்தான் கருத்து முதல்வாதத்தின் வெற்றி இருக்கிறது. நேரடி காரணிகளை சொல்லமுடியாதபோது அந்த இடத்தில் காரணர் அல்லது கர்த்தா அல்லது கடவுள் என்ற ஒன்றை இக்கருத்தியலால் வைக்க முடிகிறது.

சிறந்த அறிவியலாளர்கள் கூட இக்களத்தில் வீழ்ந்துவிடுவதுண்டு. எடுத்துக்காட்டாக 'கருவளர்த்திசைத் தோன்றி ......' என்ற பரிபாடல் பிரபஞ்ச தோற்றத்திற்கு பெருவெடிப்பை முன் வைக்கிறது. இன்று சொல்லப்படும் பெருவெடிப்பு (Big Bang Theory) கோட்பாட்டை ஈராயிரம் ஆண்டுக்கு முன் நம் தமிழ் அறிஞர் உணர்ந்து சொல்லியிருப்பது மெய்சிலிர்க்கவைக்கிறது. ஆயினும் இந்த அறிவியலாளர் கூட இவ்வெடிப்புக்கு திருமாலை காரணராக சொல்லிச்செல்கிறார். ஏனெனில் காரண - காரியத் தொடரில் தவிர்க்க முடியாத ஒன்றாக காரணர் ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டார்.

இன்றும்கூட செயற்கை கோளை செலுத்துகிற மாபெரும் அறிவியலாளர்கள் கூடம், சாம்பிராணி ஏற்றி ராக்கெட் அனுப்புவதைப் பார்க்கிறோம். மேற்சொன்ன தத்துவ அவலம்தான் இது.

இத்தகைய மெய்யியல் பின்புலத்தில், தொல்காப்பியம் மேற்கண்ட காரண – காரியக் கோட்பாட்டை மிகத் திறமையாகக் கையாண்டது. முனைவர் க. நெடுஞ்செழியன் இக்கூற்றை விளக்கியுள்ளார்.

'இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்' எனும் தொல்காப்பிய நூற்பாவிற்குச் சேனாவரையர்,

தன்னியல்பில் திரியாது நின்ற பொருளை அதன் இயல்பு கூறுங்கால் ஆக்கமும் காரணமும் கொடாது இற்றெனச் சொல்லுக

இயல்பாவது பொருட்குப்பின் தோன்றாது உடன் நிகழுந்தன்மை.

(எ.டு.) நிலம் வலிது, நீர் தண்ணிது, தீ வெய்து, வளி உளரும், உயிர் உணரும் என வரும் என்பார்.[2]

இவ்வடித்தளத்திலிருந்து முனைவர் க. நெடுஞ்செழியன் மிக விரிவான ஆய்வு முடிவுகளைக் கண்டுள்ளார். அவற்றின் சுருக்கம் :'இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்'

'செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறல்.'
ஆகிய இரு கூற்றுகளையும் தொல்காப்பியர் முன்வைக்கிறார். இவற்றுள், 'இயற்கைப் பொருளை அதன் இயல்போடு அழைக்க வேண்டும்' என்பது - இயற்கை இயல்பாகவே உள்ளது எனும் ஆழமான பொருளைக் கொண்டது. இயற்கை என்பதே இயல்பாக இருப்பது – படைக்கப்பட்டதல்ல என்பது இதன் சாரம்.

'செயற்கைப் பொருளை' அது எதனால் செய்யப்பட்டது எனக் கூற வேண்டும் என்பது – அச்செயற்கைப் பொருள் யாரோ ஒருவரால் அல்லது சிலரால் செய்யப்பட்டது என்பதை உணர்த்துவது. மேலும் அப்பொருளின் உள்ளடக்கத்தை காரண – காரிய அணுகுமுறையுடன் அணுக வேண்டும் என்ற பொருளும் உண்டு.

சான்றாக, மண்பாண்டம் - என்பது செயற்கைப் பொருள். மண்ணால் செய்யப்பட்ட பாத்திரம் என்ற விளக்கம் இதன் பெயரிலேயே உள்ளது. இது செயற்கைப் பொருளாகையால், செய்தவர் என ஒருவர் இருப்பார். மேலும் இப்பொருளின் உள்ளடக்கத்தில் இயற்கைப் பொருள்களே இருக்க முடியும். ஏனெனில் **புத்தம் புதிதாக இல்லாத ஒன்றை யாராலும் படைத்து, ஒரு பொருளைச் செய்ய முடியாது.**

1. பிரபஞ்சத் தோற்றம்
2. செயற்கைப் பொருள்களின் ஆக்கம்

ஆகிய இரு முகாமைக் கருத்துகளையும் தனித்தனியே கையாண்டு, இறுதியில் **இயற்கை இயல்பாக இருப்பது** என்ற பொருள்முதல்வாதத்தை நிலைநாட்டுகிறார் தொல்காப்பியர்.

இந்த அறிவு நுட்பம் பண்டைய மெய்யியல் தளத்தில் புரட்சிகரமானதாக விளங்கியது.

இக்கட்டுரையின் தொடக்கத்தில் கண்ட 'நியாய வைசேடிகர்களின்' மண்பாண்ட விவாதத்தை இப்போது கணக்கில் எடுத்துக் கொள்வோம்.

மண்பாண்டத்தின் மீது காரண – காரியத்தைச் செலுத்தும் போது தொல்காப்பியம் தரும் விளக்கம் இதுவெனலாம்.

1. அது மண்ணால் ஆக்கப்பட்டது.
2. குயவரால் செய்யப்பட்டது
3. மண்ணை யார் ஆக்கியது என நீங்கள் கேட்டால், 'மண் ஒரு இயற்கைப் பொருள் - அதை யாரும் ஆக்க முடியாது' என்பதே விடை.

காரண காரியத்தைச் செயற்கைப் பொருள் மீது செலுத்தாமல், இயற்கைப் பொருள் மீது செலுத்தி விடை தேடிச் சலித்து கடவுளை நம்பிய பரிதாபம் நிகழ்ந்த காலத்தில் தமிழர் மெய்யியல் இக்குழப்பத்தை இறுதிக்கும் இறுதியாகத் தீர்த்து வைத்தது.

பகுத்தறிவுவாதம் இத்தகைய புரிதல்கள் இல்லாமல், அனைத்தின் மீதும் காரண – காரியத்தை ஆயுதமாகவே எந்திரகதியில் செலுத்துகிறது.

ஆகவே பகுத்தறிவுவாதம் **கட்டவிழ்ந்த நிலையில்** கருத்துமுதல்வாதத்திற்கே துணை செய்கிறது.

## ஆங்கில மருத்துவமும் - பகுத்தறிவுவாதமும்

மருத்துவத்துறையில், பகுத்தறிவுவாதத்தின் குழந்தையான ஆங்கில மருத்துவமுறை அல்லது அலோபதி (allopathy) மருத்துவமுறை எவ்வாறு அறிவியலுக்கு எதிரானதாகவும் மனித நேயத்திற்கு எதிரானதாகவும், சாரத்தில் பெருமுதலாளிய – ஆதிக்க சாதிய – நலன்களுக்குச் சாதகமாகச் செயல்படுகிறது என்பதைக் காண்போம்.

இந்தியாவின் முதல் ஆங்கில மருத்துவப் பள்ளி, 1824ஆம் ஆண்டு கொல்கத்தா **சமற்கிருதக் கல்லூரியில்** தொடங்கப்பட்டது.[3]

ஆங்கில மருத்துவ முறையை இந்தியாவில் நடைமுறைப்படுத்தி, மரபுசார்ந்த மருத்துவ முறைகளை ஒழித்துக் கட்டும் பணியில் ஆங்கிலேயருடன் கைகோர்த்தவர்கள் **பார்ப்பனர்** உள்ளிட்ட ஆதிக்க சாதியினரே.

இப்பணியில் அவர்களுக்கு இன்றளவும் துணை நிற்பது, பகுத்தறிவுவாதம்தான்.

ஆங்கில மருத்துவமுறையின் கோட்பாடுகளையும் அடிப்படைகளையும் ஆராய்ந்து இவற்றைப் புரிந்து கொள்வோம்.

தொடரும்.


சான்றுகள்:

**1.பண்டைய வேதத் தத்துவங்களும் வேத மறுப்புப் பௌத்தமும்.**
-பக் 33.
பேரா. நா. வானமாமலை, (மக்கள் வெளியீடு, டிசம்பர் 1995.)

**2. தமிழர் இயங்கியல் - தொல்காப்பியமும் சாரக சம்கிதையும்**
- பக் 47
முனைவர் க. நெடுஞ்செழியன். (பாலம் வெளியீடு, 2000)

**3. History of Medicine with special reference to India –**
Prof. H. Roy. (www.Surgical-pathology.com/ebook1.htm)


■

## புதிய தமிழர் கண்ணோட்டம் திறனாய்வுக் கூட்டம்

தமிழ்க்கலை இலக்கியப்பேரவை மற்றும் தமிழ்ப் பல்கலைக்கழக அறிவியல் தமிழ் வளர்ச்சித்துறை இணைந்து ***புதிய தமிழர் கண்ணோட்டம்*** இதழ் திறனாய்வுக் கூட்டம் நடத்தின. 27.09.2008 மாலை தஞ்சை தமிழ்ப்பல்கலைக் கழக வளாகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு மூத்த வழக்குரைஞர் திரு தஞ்சை அ. இராமமூர்த்தி தலைமைதாங்கினார்.

இதழில் இடம் பெற்ற கவிதைகள் குறித்து கவிஞர் நீடா. இளஞ்செழியன் அவர்களும், கட்டுரைகள் குறித்து தஞ்சை தமிழ்ப்பல்கலைக்கழக இலக்கியத்துறை பேராசிரியர் முனைவர் பெ. இராமலிங்கம் அவர்களும், ஆசிரிய உரைகள் குறித்து குடந்தை தமிழ்க்கழக தலைவர் திரு சா. பேகன் அவர்களும், ஆய்வுரை நிகழ்த்தினர்.

தொடக்கத்தில் புலவர் கோ. நாகேந்திரன் வரவேற்புரை நிகழ்த்த நிறைவில் கவிஞர் கு. அப்பண்ண முத்து நன்றி கூறினார்.

# பருவ நிலை மாற்றமும் தாராளமய முதலாளியமும்

(**அண்ணாமலைப் பல்கலைக் கழக தொலைநிலைக்கல்வியக பொருளியல் புலம் 10.10.2008 அன்று இருநாட்கள் 'பருவநிலை மாற்றத்தின் பொருளியல் சிக்கல்கள் : ஒரு பல்துறை நோக்கு** '( Economic issues in climate change: A multidesciplinary perspective ) **என்ற பயிலரங்கை நடத்தியது. அதில் 10.10.2008 அன்று ஆற்றப்பட்ட உரையின் சுருக்கம் இக்கட்டுரை**).

வானக் கூரையின் கீழ் ஒரே கொந்தளிப்பு. நிரந்தரமானவை என்று நினைக்கப்பட்டவை நிலைகுலைந்து விழுகின்றன. பொருளியல் நெருக்கடி, நிதிநிலை நெருக்கடி, எரிசக்தி நெருக்கடி, உணவு நெருக்கடி, பருவநிலை நெருக்கடி... என்று எல்லாம் ஒருசேர அழுத்தி வருகின்றன.

இந்த மண்ணுலகிற்கு மறு பிரசவம் ஒன்று நடந்தாக வேண்டிய தேவை எழுந்துள்ளது.

அறிவியலாளர்கள், பொருளியலாளர்கள், சமூக வியலாளர்கள், அரசியல்வாணர்கள், அறவியல் வாணர்கள் அனைவரும் இணைந்து மக்களை வழிநடத்தி இந்த மறுபிரசவத்தை நிகழ்த்தியாக வேண்டும் . ஏனெனில் சந்திக்கிற நெருக்கடிகள் ஒன்றுக்கொன்று நெருக்கமான தொடர்புடையவை. உற்று நோக்கினால் ஒரு மூலத்திலிருந்து இவை உதித்து வருவது புலனாகும்.

**பருவநிலை நெருக்கடி**

இவற்றுள்ளும் பருவநிலை சிக்கல் இதுநாள் வரை உரியவாறு கவனிக்கபடாமலிருந்து இன்று பருவநிலை நெருக்கடியாக (Climatic Crisis) முற்றிவிட்டது.

நவீன கால மனிதகுலம் மேற்கொண்டிருக்கும் வளர்ச்சிப்பாதை சுற்றுச்சூழலை சீர்குலைத்து விட்டது. இந்த உலகம் வாழத் தகுதியற்றதாக மாற்றப்பட்டு வருகிறது. பருவநிலை தாறுமாறாக மாறியிருப்பதற்கு



**கி.வெங்கட்ராமன்**

மனிதர்களே 90 விழுக்காடு பொறுப்பு என்பதை ஆய்வறிக்கைகள் ஆதாரத்தோடு எடுத்துக்கூறுகின்றன.

நவீனத் தொழில் வளர்ச்சி, அதிவேகப் போக்குவரத்து, பசுமைப்புரட்சி வேளாண்மை, நவீன நாகரிகம் ஆகியவை நிலக்கரி, பெட்ரோல், எரிவாயு போன்றவற்றை எரித்துதான் எழுப்பப்பட்டுள்ளன. இவை வெளியிடும் கார்பன்-டை-ஆக்சைடு, மீத்தேன், நைட்ரஸ் ஆக்சைடு, கார்பன் டெட்ரா குளோரைடு ஆகிய பசுமை இல்ல வாயுக்கள் (Green House Gases - GHG) புவியைச் சுற்றியுள்ள ஓசோன் படலத்தை ஓட்டை போட்டுவிட்டன. சூரியனிலிருந்து வெளிப்படும் புற ஊதாக் கதிர்கள், அகச்சிவப்புக் கதிர்கள் ஆகியவற்றின் தாக்கத்தை இந்த புவிப்பந்து நேரடியாக எதிர்கொள்ள வேண்டியதாயிற்று.

விளைவாக புவியின் வெப்பம் அதிகரித்துவிட்டது. இருபது இலட்சம் ஆண்டுகளில் பூமிக்கு ஏற்பட்ட வெப்ப உயர்வுக்கு நிகராக கடந்த இருநூறு ஆண்டுகளில், அதாவது தொழில்புரட்சி ஏற்பட்டதற்குப் பிறகு, வெப்ப உயர்வு ஏற்பட்டுள்ளது.

**பருவ நிலை மாற்றத்தால் இந்தியாவில் ஏற்படும் பொருளியல் தாக்கம்**

இந்தியத் துணைக் கண்டத்தைப் பொருத்த அளவில் மழைப்பொழிவில் எதிரெதிர் முனைகள் அதிகரிக்கும். கொட்டும் மழையும், கொடும் வறட்சியும் மாறி மாறி வாட்டும்.

வட இந்தியாவின் வெப்பநிலை கூடுதலாக உயரும். பஞ்சாப், ராஜஸ்தான், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் மழை அளவு குறையும். பிற பெரும்பாலான மாநிலங்களில் எதிர்பாராத திடீர் பொழிவு ஏற்படும்.

இவற்றின் காரணமாக நீர் மின்சார உற்பத்தியில் பாதிப்பு ஏற்படும். அதேநேரம், நிலத்தடி நீர்மட்டம் குறைவதாலும், வெப்ப உயர்வை ஈடுகட்டவும் மின்சாரத்தின் தேவை அதிகரிக்கும்.

இந்தியா முழுவதும் வேளாண் உற்பத்தி 30% வரை குறையும் ஆபத்து உள்ளது.

கடல் மட்டம் உயர்வதால் இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் இந்தியாவின் 7500 கி.மீ கடற்கரை பாதிப்படையும். 5763 ச.கி.மீ பரப்பளவு கடற்கரைப் பகுதிகள் கடல் அரிப்பில் விழுங்கப்படும். 70 இலட்சம் கடலோர மக்கள் நிரந்தரமாகப் புலம்பெயர நேரிடும். கிழக்குக் கடற்கரை அதிகமான பாதிப்பைச் சந்திக்கும்.

கடல் மட்டத்திற்கும் கீழே உள்ள கேந்திரா பாரா (ஒரிசா), நெல்லூர் (ஆந்திரா), நாகப்பட்டினம் ஆகிய கடற்கரை நகரங்கள் கடலில் மூழ்கும் ஆபத்து உள்ளது. சென்னை, மும்பை ஆகிய துறைமுக நகரங்களின் பல பகுதிகள் கடல் அரிப்பில் விழுங்கப்படும் ஆபத்து இருக்கிறது.

தாறுமாறான மழைப்பொழிவு, கடல் அரிப்பு, புயல் காரணமாக சாலை, ரயில் தண்டவாளம் பழுதடைவது அதிகரிக்கும்.

கடல்மீன் வளம் குறையும். இதன் மூலம் கிடைக்கும் வெளிச் செலாவணி குறையும். மீனவர் வாழ்க்கை பாதிக்கப்படும்.

வைரஸ், பாக்டீரியா ஆகியவை பெருகி மலேரியா, டெங்கு, சிக்குன் குனியா போன்ற தொற்றுநோய்கள் அதிகரிக்கும் . இதன் காரணமாக அரசுக்கும், மக்களுக்கும் செலவு உயரும்.

பருவநிலை மாற்றத்தால் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி உண்மை அளவில் (GDP in real terms ) 2100 வாக்கில் 13% வரை குறையும் என ஐ.நா. தொழில் வளர்ச்சி அமைப்பு (United Nations Industrial Development Organisation - UNIDO) எச்சரிக்கிறது. (The Hindu, Chennai - 5.9.08)

புவிவெப்பம் $2^0$c உயர்ந்தால் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 5% (GDP) குறைய வாய்ப்புண்டு.

**முதன்மைக் குற்றவாளி**

இந்தியா உள்ளிட்ட உலக நாடுகளை இவ்வாறு அழிவின் விளிம்பிற்குக் கொண்டு வந்த முதன்மைக் குற்றவாளி அமெரிக்க ஐக்கிய நாடு தான். புவியைச் சூடேற்றிய பசுமை இல்ல வாயுக்கள் வெளியேற்றத்தில் வட அமெரிக்க வல்லரசின் பங்கு 40% ஆகும். ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் 28%ம், ஜப்பான், 9%ம் இந்த அழிவுப் பணியில் பங்கேற்றிருக்கின்றன.

அதிகம் மாசுபடுத்தியவர்கள்தான் இதனை சரிசெய்வதிலும் அதிகம் பொறுப்பேற்க வேண்டும் என்று ஆய்வறிக்கைகள் முன்மொழிந்தன.

ஆனால் பொறுப்பை ஏற்காத குற்றவாளியாக அமெரிக்காதான் உள்ளது.

**உலக நாடுகளின் முயற்சி**

பருவநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்த ஓசோன் படலத்தைப் பாதுகாக்க வேண்டும் என்று உணர்ந்த ஐக்கிய நாடுகள் அவை 1987-ல் மாண்ட்ரீல் உடன்பாடு (Montreal Protocol) கண்டது. அதன் அடிப்படையில் அரசாங்களிடை பருவநிலை மாற்ற ஆய்வுக்குழு (IPCC) உருவாக்கப் பட்டது .

ரியோ- புவி உச்சி மாநாடு பிரேசிலின் ரியோடி ஜெனிரோவில் நடைபெற்ற ஐ.நா. பருவநிலை மாற்றப் பணித்திட்டப் பேரவை (United Nations Framework Convention of Climate Change - UNFCCC) உருவாக்கப் பட்டது.

இப்பேரவையின் மாநாடு ஜப்பானின் கியோட்டோ நகரில் 1997-ல் கூடியது. இப்பேரவையின் இலக்கினை எட்டுவதற்கு கியோட்டோ உடன் படிக்கை (Kyoto protocol) வரையப் பட்டது.

கியோட்டோ உடன்படிக்கை 2012 வுடன் முடிவடைவதால், அதன்பின்னர் தொடர வேண்டிய பணிகள் குறித்து பாலி வரையறை (Bali Road Map) உருவாக்கப்பட்டது.

இது 2009-ல் கோப்ஹேகனில் (டென்மார்க்) கூடும் உச்சிமாநாட்டில் உடன்படிக்கையாக மாறவேண்டும்.

**சூடேற்றம் தொடர்கிறது. காரணம் என்ன?**

ஆனால், உலக வானிலை ஆய்வுக்குழு நவம்பர் 2007-ல் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி பசுமை இல்ல வாயுக்களை வெளியேற்றுவதை வளர்ந்த நாடுகள் குறைக்கவில்லை என்பது தெரிகிறது. 1990-ம் ஆண்டின் அடிப்படை அளவை ஒப்பிட 2004-ஆம் ஆண்டில் அமெரிக்கா வெளியேற்றியிருக்கும் பசுமை இல்ல வாயுக்களின் அளவு 21.1% அதிகமாகும். கியோட்டோ உடன்படிக்கை நிபந்தனைகள் செயலாகவில்லை என்பது தெளிவாகிறது. மாறாக, நடப்புகள் அம்முடிவின் எதிர்த்திசையிலேயே தொடர்கின்றன.

இவ்வாறு ஏன் நிகழ்கிறது என்ற வினாவுக்கு விடை தேடும்போது உலகம் மேற்கொண்டுள்ள வளர்ச்சிப் பாதை அல்லது வளர்ச்சி மாதிரி (Development Paradigm) குறித்து முடிவு செய்ய வேண்டிய தேவை எழுகிறது.

சுற்றுச்சூழல் பாதிப்பு, புவி வெப்பமடைதல் ஆகியவை ஏற்படுவதற்கு மூன்று காரணங்கள் சொல்லப்படுகின்றன. PAT என்று சுருக்கமாக அதனை அழைக்கிறார்கள்.

(1) மக்கள் தொகைப் பெருக்கம் (Population) (2) செழிப்பான வாழ்க்கை (Affluence) (3) பின்தங்கிய தொழில்நுட்பம் (Technology) என்பனவே அவை.

பூமியின் வளங்கள் வரம்புக்கு உட்பட்டவை. ஆனால் மனிதனின் தேவையோ வரம்பற்று இருக்கிறது. இதனை பூமியின் வளவரம்புக்கு இசைய மாற்றியாக வேண்டும். அதற்கு (1) மக்கள் தொகைப் பெருக்கத்தை நிலைப்படுத்தி, பின்பு குறைக்க வேண்டும்.(2) தொழில் நுட்பத்தை மேம்படுத்த வேண்டும். (3) அடிப்படையான சமூகப் பொருளாதார மாற்றம் ஏற்படவேண்டும் என்ற மூன்று வழிகள் சொல்லப்படுகின்றன.

மேற்சொன்ன மூன்றுமே தேவைதான். ஆனால் எது பருவநிலை மாற்றத்தைத் தடுப்பதற்கு, சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்கு அடிப்படை வழியாய் அமையவல்லது என்று தீர்மானிக்க வேண்டும்.

புவி வளத்தின் மீது மக்கள் தொகைப் பெருக்கம் பெரும் அழுத்தத்தைக் கொடுத்து வருகிறது என்பதை மறுக்க முடியாது. ஆயினும் அண்மைக் காலமாக உலகின் மக்கள் தொகைப்பெருக்கம் வேகம் குறைந்து வருவது கண்கூடு. வளர்ச்சியடைந்த நாடுகள் சிலவற்றில் மக்கள் தொகைக் குறைந்து வருகிறது. இந்தியாவிலும் மக்கள் தொகைப் பெருக்கம் படிப்படியாக குறைந்து இன்று ஆண்டுக்கு 1.06% என்ற அளவை எட்டியுள்ளதை 2001 கணக்கெடுப்பு காட்டுகிறது. பிறப்பு விகிதமும், இறப்பு விகிதமும் ஒரே அளவை எட்டி மக்கள் தொகை நிலைத்தன்மை (Population Stabilisation) 2045 -ல் ஏற்பட்டு விடும் என்று கணக்கீடுகள் கூறுகின்றன.

எனவே சுற்றுச்சூழல் பாதிப்புக்கு இதனை முதன்மைக் காரணமாக நினைக்க வேண்டியதில்லை.

அடுத்து, தொழில் நுட்ப மேம்பாடு என்பது இப்பிரச்சினைக்குத் தீர்வாக சொல்லப்படுகிறது. கியோட்டோ உடன்படிக்கையிலிருந்து, ஸ்டென் அறிக்கை வரை அனைத்துமே இந்த மாற்றை முன் வைக்கின்றன. தொழில் நுட்பத்தில் பின் தங்கியுள்ள நாடுகளுக்கு முன்னேறிய நாடுகள் நவீன தொழில்நுட்பம் வழங்கி மாசுபாட்டைக்குறைக்க உதவ வேண்டும். இதை ‘சும்மா’ தராமல் ‘கரி வணிகம்’ வழியாகத் தரலாம் என புதிய வழியையும் கியோட்டோ உடன்பாடு கூறுகிறது.

‘கரி வணிகம்’ (Carbon Trading) என்பது வேறொன்றுமில்லை; காற்றில் கார்பன்-டை-ஆக்சைடைக் கலந்து விடுவதற்கு கியோட்டோ வழிமுறைப்படியான தற்காலிக உரிமம்தான். கியோட்டோ நிபந்தனைப்படியான அளவுக்கு இன்னும் காற்றில் கார்பன் -டை-ஆக்சைடை கலந்துவிடாத, மாசுபாட்டில் மிச்சம் வைத்திருக்கிற நாடுகளிடமிருந்து மாசுபாட்டு உரிமையை விலைக்கு வாங்கிக்கொள்வது என்பதே அது.

எடுத்துக்காட்டாக கியோட்டோ உடன்பாடு அனுமதித்திருக்கிற அளவைவிட இந்தியா 40% குறைவாகத்தான் கார்பன் -டை-ஆக்சைடை வெளியிட்டிருக்கிறது எனக்கொள்வோம். அதாவது இன்னும் 40% மாசுபாட்டு உரிமை இந்தியாவிடம் இருக்கிறது என்று பொருள்.

இந்த உரிமையை இந்தியா விற்கலாம். இதில் ஆஸ்திரேலியா 10% வேறு ஒரு நாடு5% இன்னொரு நாடு 15% என வாங்கிக்கொள்ளலாம். இதற்கான தொகையை அல்லது அதற்கு ஈடான தொழில்நுட்பத்தை இந்தியாவுக்கு வழங்கலாம்.

இதையே தனி ஒரு நிறுவனமும் செய்ய முடியும். தூய வளர்ச்சி வழிமுறை (Clean Development Mechanism - CDM) என அதற்குப் பெயரிட்டுள்ளனர்.

சந்தைப் போட்டி சார்ந்த தாராளமய முதலாளியப் பொருளாதாரத்திற்குள்ளேயே பிரச்சினையைத் தீர்க்கும் முயற்சி இது.

***அடிப்படைத்தீர்வு***

ஆனால் கார்பன் வெளியீட்டை(Carbon emission) முன்னேறிய நாடுகள் உடன்பாட்டின்படி குறைக்கவில்லை என்பதுதான் நாம் கண்டுள்ள உண்மை. கியோட்டோ முயற்சி கோபன்ஹேகனில் வலுவாகத் தொடரப்பட வேண்டும்தான். மாற்றுத்தொழில் நுட்பங்களைக் கைக்கொள்ள வேண்டும்தான். ஆனால் இந்த வழிமுறையின் வரம்பைப் புரிந்துகொள்வதும் அவசியம். புவிவெப்பம் 2100க்குள் 5ºc ஐத் தாண்டும் ஆபத்தைத் தடுப்பதற்கு இந்த வழிமுறைக்கு போதிய ஆற்றல் இல்லை.

சமூகப் பொருளியலின் இயங்கியலை அடிப்படையில் புரிந்து கொள்வது அவசியம்.

இலாப வேட்டையை அடிப்படையாகக் கொண்ட புதிய தாராளமயப் பொருளியல் (Neo- liberal Economics) தொடரும் வரை மண்ணைக் காப்பதோ, மனிதரைக்

காப்பதோ சாத்தியமில்லை.

இது தனிமனிதர் சிலரின் தன்னல வெறியால் மட்டும் நிகழ்ந்து விடவில்லை. அல்லது வரம்பற்ற நுகர்வு வெறி இதற்கு முதன்மைக் காரணம் என்று சொல்லிவிட முடியாது. தனி மனிதர்களின் நுகர்வுப் பண்பாடு இச்சிக்கலில் ஒரு முக்கியப் பங்கு வகிப்பது உண்மைதான். நோபல் பரிசு பெற்ற அல் கோர் (AlGore) தனது An inconvenient truth ஆவணப்படத்தில் சொல்கிற சில தனிநபர் செயல் மாற்றங்கள் தேவையானவைதான். ஆனால் தனிமனிதக் காரணங்கள் இப்பிரச்சினைக்கு முதன்மைக் காரணங்கள் அல்ல.

அடிப்படையான காரணம் புதிய தாராளமயப் பொருளியல் அமைவு (System) ஆகும். பசுமை மார்க்சியர் ஜான் பெல்லாமி ஃபாஸ்டர் (John Bellamy Foster) கூறுவது போல் இந்த அமைவில் கீழ்வரும் ஆறு முக்கியக் காரணிகள் ஒன்றிணைந்த வகையில் செயலாற்றுகின்றன.

**1. மூலதனக் குவிப்பு மேலும் மூலதனக் குவிப்பு (**CAPITAL ACCUMULATION OF CAPITAL**) என்ற இயங்கு சக்தி**

**2. உழைப்பாளிகள் மேலும் மேலும் சுய தொழில்களை விட்டுவிட்டு கூலித்தொழிலாளர்களாக மாறுவது.**

**3. உற்பத்தியை விரிவாக்கிக் கொண்டே இருக்கும் புதிய புதிய தொழில் நுட்பங்கள்.**

**4.செயற்கையாக உற்பத்தி செய்யப்படும் தேவைகள்** (manufactured wants)

**5. சமூகப் பாதுகாப்பைவிட இந்தப் பொருளியல் வளர்ச்சிக்குத் துணை செய்வதே அரசாங்கத்தின் தலையாய பணி என்ற ஆட்சிக்கோட்பாடு.**

**6.செல்வக் குவிப்பே செயல்திறனின் அடையாளம் என்பதைப் பதிய வைக்கும் தகவல் அமைப்பு, கல்வி அமைப்பு மற்றும் விழுமிய அமைவு** (value system)

புதிய தாராளமயப் பொருளியல் அமைவின் உள்ளார்ந்த தன்மைகள் (inbuilt character) இவை.

ஈவு இரக்கம் அற்ற மூலதனக் குவிப்பில் நாட்டமில்லாத மனிதநேயர் ஒருவர் ஏதாவதொரு பன்னாட்டுத் தொழில் நிறுவனத்தின் தலைமை நிர்வாகியாக பொறுப்பேற்க நேர்ந்தால் அவர் அப்பொறுப்பில் நீண்ட நாள் நீடிக்க முடியாது; தூக்கி வீசப்படுவார். ‘இலாபம், மேலும் இலாபம் , இன்னும் இலாபம் ’ என்ற தாரக மந்திரத்திற்குப் பொருத்தமில்லாத யாரும் இந்த முதலாளிய அமைவில் தலைமைப் பொறுப்பில் நீடிக்க முடியாது.

அதுவும் நிதி மூலதனம் (Finance Capital) கோலோச்சுகிற புதிய தாராளமயத்தில் மூலதனக் குவிப்பிற்கான கால இடைவெளி சுருங்கி வருகிறது. ‘மிக அதிக இலாபம், மிக விரைவாக ’என்பதுதான் தாராளமயத்தின் வழிகாட்டும் நெறி.

இதற்குத் துணை செய்கிற தொழில் நுட்பங்கள் தாம் ஊக்குவிக்கப்படும்.

எடுத்துக்காட்டாக, எரிபொருள் திறன் (Fuel efficiency) குறைவாக இருந்த தானியங்கி வாகனங்கள் அதிகம் கரிப்புகையைக் கக்கும் வாகனங்களாகவும் இருந்தன. இதிலிருந்து மீள வாகனங்களின் உள்கட்டமைப்பு, பொறியமைவு ஆகியவை மாற்றியமைக்கப்பட்டன. அதிக மைலேஜ் வாகனங்கள் உருவாக்கப்பட்டன. இது வாகன உற்பத்தியை அதிகப்படுத்தி, அதிக விற்பனைக்கு வழிகோலின. வாகனங்கள் பெருகின. நிறுவனங்களுக்கு இலாபம் பெருகியதே தவிர பசுமை இல்ல வாயு வெளியேற்றம் குறையவில்லை.

இலாப வேட்டைக்கு இசைவான தொழில்நுட்ப வளர்ச்சியில் தான் தனியார் நிறுவனங்கள் அக்கறை செலுத்தும். தங்கள் ஆலைகள் அல்லது நிறுவனங்கள் வெளியாக்கும் பசுமை இல்ல வாயுக்களை மறுசுழற்சி செய்யவோ, நச்சு நீக்கம் செய்யவோ கூட இவை முன்வருவதில்லை. தங்கள் இலாபத்தைக் குறைக்கிற நடவடிக்கைகளாகவே மதிப்பிடுகின்றன.

அதுவும் ‘வால்தெரு’ (Wall street) உருகிக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில் பருவநிலை மாற்றம் என்பதெல்லாம் பன்னாட்டுத்தொழில் நிறுவனங்கள் நினைத்துப்பார்க்கவே விரும்பாத செய்திகள் ஆகும்.

தொழில் கழகங்களின் சமூகப் பொறுப்பு (Corporate Social responsibility) என்பதெல்லாம் வெறும் கவர்ச்சி வசனங்களே தவிர வேறொன்றுமில்லை. அதிகம் போனால் ஆண்டுக்கு ஓரிரு நாள்கள் மருத்துவ முகாம் நடத்துவது, ஒரு சில ஏழைகளுக்கு உதவி செய்வது என்பன போன்ற - தொழில் நடவடிக்கைக்கு வெளியே நடக்கும் மக்கள் உறவு உத்தியாகவே (Public Relations Excercise) அவை இருக்கும்.

நிலவும் இலாபப் போட்டிக்குள்ளேயே புகுந்து, ஊக்க இலாபங்களை வழங்கும் உத்தி வகுத்து பசுமை இல்ல வாயுக்கள் வெளியேற்றத்திலிருந்து இந்நிறுவனங்களைத் திருப்பிவிட முடியாது.

ஏனென்றால் பெரு நிறுவனங்களைப் பொருத்தவரை இயற்கைப் பொருள்கள் என்பவை இயற்கை வளம் (Natural resource) தான். இயற்கை என்பது அடிப்படைத்தொழில் பொருள்களின் ஊற்று (Reservior of raw materials) மற்றும் கழிவுகளைக் கொட்டி வைக்கும் குழி (Sink). அவ்வளவுதான். அறிவும், உணர்ச்சியும், வரலாறும் உள்ள மனிதர்கள் கூட இந்நிறுவனங்களுக்கு மனித வளம்(Human resource) தான் ; வேறொன்றுமில்லை.

இயற்கைச் சூழலும், மனித உழைப்பும், அறிவாளர்களின் அறிவும் மட்டுமல்ல, ஆணின் உடற்கட்டு, குழந்தையின் சிரிப்பு, பெண்ணின் நளினம், தோலின் சிவப்பு ஆகிய அனைத்துமே சந்தை சரக்குகள் தாம்.

சந்தை ஆதிக்கமே அனைத்தையும் தீர்மானிக்கிறது.

ஆனால் இந்த சந்தையின் கதாநாயகர்கள் நுகர்வோர் அல்லர்; உற்பத்தியாளர்கள் தாம். நுகர்வு

முறையை, நுகர்வுப் பண்பாட்டைத் தீர்மானிப்பவர்கள் உற்பத்தியாளர்கள் தாம். உற்பத்தியாளர்கள் தாம் நுகர்வோர் என்ற வகையினத்தையே கட்டமைக் கின்றனர்.

எனவே நுகர்வோரிடம் இயற்கைக்கு இசைவான நுகர்வு முறையை போதிப்பதன் மூலம் மாற்றம் கொண்டுவர முயல்வதை முதன்மை வழியாகக் கொள்ள முடியாது. ஆனால் அது மாற்றத்திற்கு உதவி செய்யும் துணை வழிமுறை என்பதை மறுப்பதில்லை.

தேவைகள் என்பவை பெரிதும் செயற்கையாக உருவாக்கப்படுகின்றன. நுகர்வோர் என்போர் பெரிதும் கட்டமைப்படுகிறார்கள்.

புதிய தாராளமய முதலாளியம் தனது பிரதி பிம்பமாகவே இந்த நுகர்வோரைக் கட்டமைக்கிறது. தன்னல இலாபவெறி, மூலதனக்குவிப்பு என்பவை தான் புதிய தாராளமயத்தின் இயக்கு சக்திகள் ஆகும். அதேபோல் வரம்பற்றத் துய்ப்பு வெறியும், செல்வக்குவிப்புமே நுகர்வியத்தின் இயக்கு சக்தி ஆகும்.

முதலாளியமும், அது உருவாக்கும் புதிய நடுத்தர வர்க்கத்தின் நுகர்வியமும் இயற்கையை வெறும் பயன்பாட்டுப் பொருளாகவே பார்க்கின்றன. அவரவர் வாழ்நாளிலேயே இந்த பூமியைத் துய்த்துத் துப்பிவிட வேண்டும் என்ற வெறிப் பண்பாட்டை இவை பரப்புகின்றன. வெற்றியாளரின் அளவுகோலாக இவையே முன் வைக்கப் படுகின்றன. இது ஒரு வகையில் ஒழுங்கமைக்கப்பட்ட பொறுப்பின்மை ( Organised irresponsibility) ஆகும்.

தகவல் தொடர்பின் முதன்மையான பணியாக பொருள்களைச் சந்தைப்படுத்தும் பணியே நிகழ்கிறது. தகவல் பரிமாற்றம் என்பது கருத்துகளின் உரையாடலாக இருப்பதைவிட நுகர்வு குறித்த உரையாடலாக மாற்றப்பட்டு விட்டது.

சந்தை என்னும் ஆடம் ஸ்மித்தின் "கண்ணுக்குத் தெரியாத கை" எல்லாவற்றையும் சரிசெய்துகொள்ளும் என்ற கருத்தே மேலோங்கியது. எனவே சந்தை நாயகம் என்பது சனநாயகத்திற்கு மாற்றீடு செய்யப்பட்டுவிட்டது. சன நாயகத்தின் அடித்தளமாய் இருக்கவேண்டிய குடிமக்களுக்குப் (citizen) பதிலாக சந்தை நாயகத்தின் உறுப்பான நுகர்வோர் குடிமக்கள் (consumer citizen) தோன்றினார்கள். இவர்கள் சமூக - அரசியல் நடவடிக்கை எதிலும் ஈடுபடமாட்டார்கள். சமூகத்தில் எது நடந்தாலும் அசைய மாட்டார்கள். இவர்களைப் பொருத்தவரை வரம்பற்ற நுகர்வு உரிமையே சனநாயக உரிமை ஆகும்.

இந்த புதிய நடுத்தர வர்க்கமே பன்னாட்டு பெரு நிறுவனங்களுக்கான முதன்மையான சந்தை ஆகும். இந்தச் சந்தை உறவு புதை எரிபொருளை எரித்தே வலுப்படுத்தப்படுகிறது. எனவே கட்டுப்படுத்த முடியாத அளவு பசுமை இல்ல வாயுக்கள் வெறி யேற்றப்படுகிறது. புவி வெப்பம் அதிகரிக்கிறது. பருவநிலை தடுமாறுகிறது.

எனவே பருவநிலைப் பிறழ்ச்சியைத் தடுத்து நிறுத்தும் முயற்சி என்பது தனித்த ஒன்றல்ல. சுற்றுச்சூழல் மாசுபாட்டு நீக்கம் என்பதில் மையங்கொண்டு இதனைச் சாதிக்க முடியாது. மனிதர்களிடமிருந்து இம் முயற்சி தொடங்கப்படவேண்டும். இதன் பொருள், தனி மனிதர்களை மாற்றும் முயற்சியில் மையங்கொள்வது என்பதாகாது. மாறாக, இன்று மனித குலத்தை மேலாண்மை செலுத்தும் புதிய தாராளமய முதலாளிய அமைப்பு முறையை மாற்றுவதிலேயே இம்முயற்சி மையங்கொள்ளவேண்டும்.

நாம் ஏற்கெனவே சுட்டிக் காட்டியவாறு இன்று மனித குலம் சந்திக்கும் பொருளியல் நெருக்கடி நிதியியல் நெருக்கடி, எரிசக்தி நெருக்கடி, உணவு நெருக்கடி , பருவநிலை நெருக்கடி ஆகிய அனைத்தும் ஒரு மூலத்திலிருந்தே தோற்றம் பெற்றுள்ளன. **புதிய தாராளமய முதலாளிய அமைவு என்பதே அந்த மூலம் ஆகும்.**

**முதலாளியத்தின் தவிர்க்க முடியாத படிநிலையே முற்றுரிமையும், அது முன் வைக்கும் தாராளமயமும் ஆகும். எனவே இந்த அமைவு நொறுக்கப்பட்டு இதற்கு மாற்றாக சமத்துவ அமைப்பு உருவாக்கப்படுவதே அடிப்படைத் தீர்வாக அமையும்.**

சந்தைப் பொருளாதாரத்திற்கு மாற்று இல்லை (There is No Alternative -TINA) என்ற கருத்து விலங்கிலிருந்து விடுபட்டால்தான் இந்த அடிப்படைத் தீர்வை சிந்திக்க முடியும். உலகு தழுவி ஏற்பட்டுள்ள அனைத்து முனை நெருக்கடியானது சந்தைநாயகத்தின் தோல்வியை எடுத்துக்காட்டுகின்றது.

நிகரமைச் சமூக அமைவு (Socialist System) கடந்த காலத்தில் சந்தித்த சரிவுகளிலிருந்து பாடம் கற்றுக்கொண்ட, புதிய முயற்சியாக சமத்துவ அமைப்பு திகழவேண்டும். நிகரமை சமூகத்தை நோக்கிய நகர்வில் முதல்படியாக வரம்புக்கு உட்பட்ட தனிவுடைமையை அனுமதிக்கிற அமைப்பாக அது திகழ வேண்டும். அந்தந்த மண்ணின் சிறு, நடுத்தர உடைமையாளர்களை தொழில் - வணிகத் துறையில் அரசு வரம்புக்குட்பட்டு அனுமதிக்க வேண்டும். இது அந்தந்த மண்ணின் மரபிலும் வரலாற்றிலும் காலூன்றி நின்று உருவாக்கப்பட வேண்டிய மாற்று அமைப்பாகும்.

சூழல் பாதுகாப்பு அந்தந்த மொழிவழி இனங்களின் மரபான தொழில் நுட்பங்களையும், வாழ் முறையையும் மீட்டெடுப்பதில் இணைந்திருக்கிறது என்ற விழிப்புணர்வும் வேண்டும்.

அறிவாளர்கள் முன்முயற்சி மேற்கொண்டு மக்களை வழிநடத்தினால் புவி காக்கும் முயற்சி ஓர் பேரியக்கமாக மாறும்: வெற்றிபெறும். ■

# பாவெளி

## பதவி வந்திட .....

——— சொல்லேந்தி

விண்ணில் நம்மைச்சுமந்து செல்லும்
அன்னப் பறவைதான் விமானம்
என்று எண்ணுவதுண்டு
வல்லூறுகளும் அதே வடிவில்
வட்டமிடும் என்பதை
கிஃபிர்கள் காட்டின
இவை இஸ்ரேலில் பிறந்தவையாம்.

செத்தும் சிதறியும் மனித உடல்கள்;
குற்றுயிரும் குலை உயிருமாய்க்
குழந்தைகள்;
குருதிக்குளத்தில் பலர்
இக்கரையில் நான்
கடல் ஆழம் பிரித்தாலும்
உடல் மூலம் ஒன்றுதானே!

கொலைகாரனுக்குக்
குண்டு கொடுத்தவன் யாரடா?
கொன்றவனை விடக்
கொடியவன் நீயடா
கும்பி கொதிக்கக் கூச்சலிட்டேன்

ஆண்டை அதட்டினான்
இந்திய அரசமைப்பை அவமதித்து
விட்டாய்
இது தேசத்துரோகம்

ஆற்றாது அழுதால்கூட
அதில் இலக்கணக்குற்றம் காண்கிறான்
என்ன செய்ய?
ஆண்டையின் அதட்டல் அதிர்ந்ததும்
அதுவரை தமிழர்களுக்காக
மாண்ட மனிதச்சங்கிலி - இனமானம் என்று
மயக்கு மொழி பேசிக்கொண்டிருந்த
கங்காணித் தலைவர்
கையில் விலங்கெடுத்தார்
கதறிய என்னைத் தேடினார்
பதவி வந்திடப் பத்தும் பறந்துபோம்!

## பணப் பெட்டி ...

பிணப்பெட்டி போன்ற அடுக்ககம் உள்ளே
பிழையைக் காட்டிடும் பெட்டியின் முன்னே
மணற்கட்டி நிலையாய் இருக்கும் தமிழனே
மண்ணில் நடப்பதை சற்றே நீபார்
சினம்முட்டி நம்மை வேரோடு அழிக்கும்
சிங்கள, இந்திய படையைக் கண்டும்
பணப்பெட்டி தேடியே அலையும் தோழனே
பகையை அறுக்க இன்றே நீவா.

பாழ்தொட்டி இளித்திடும் குப்பைக் கூளமாய்
பாய்மரம் இழந்த படகின் நிலையாய்
சீழ்கொட்டி கிடக்குது தமிழக அரசியல்
சீமைச் சரக்குடன் மயங்கிக் கிடக்குது
தாழ்பூட்டி தலைகுனிந்து விலங்காய் நடந்து
தாக்கும் பகைக்கும் கருவிகள் ஈந்து
வீழ்ந்து போகும் மாந்தனே என்இன
வீரனே எழுஎழு விண்வரை நிமிர்ந்திட.

தந்திகள் அடித்தது போதும், இனிநம்
தலைமுறை வாழ்ந்திடதடுத்திடு பகையை
விந்திய மலைவரை நம்இடம் என்றே
விரட்டிடு வடவரை முழுதாய் இன்றே
சிந்தியக் குருதிகள் போதும் போதும்
சிலந்திக் கூடாய் சரிந்ததும் போதும்
அந்திவான் வண்ணமாய் நம்நாடு மிளிர
அறிவின் ஆற்றலே வாவா உயிர்த்துவா

காரிகை, காளையர் இருவரும் இணைந்தே
கார்இருள் ஓட்டிட முனைவோம் வாரீர்
தூரிகை எடுக்கும் தும்பை மலரே
துயரினைக் களைந்திட கருவியாய் ஆவீர்
பேரிகை கொட்டிட போராளிக் கூட்டமே
போர்க்களம் நுழைய சிரிப்புடன் எழுவீர்
யார்கை வென்றது என்பதைச் சாற்ற
ஆழ்அலைத் திரளாய் ஒன்று கூடீர்.

——— பரணி பாவலர்

## ஆயிரத்தில் ஒருவர்

சென்ற இதழ் தொடர்ச்சி

### வாழ்நாள் ரூ.1200

27. திரு ஆ.இளம்பரிதி, செங்கல்பட்டு

### மூன்றாண்டுக் கட்டணம் - ரூ.300

65 திரு ப.குமார், பெ.மேட்டுப்பாளையம்
66 திரு எஸ்.இஸ்ரேல் பெகின், சென்னை - 77
67 கவிஞர் பூவை சாரதி, நெய்வாசல்

### ஆண்டுக்கட்டணம் - ரூ.120

478 திரு இரா.சசிக்குமார், சேப்பா நத்தம்
479 திரு இரா. செந்தில்குமார், முடிகண்டநல்லூர்
480 திரு கோ.பாலசந்தர், திருமுல்லைவாசல்
481 திரு இரா.ரெங்கசாமி, வெள்ளூர்
482 திரு த.ஆனந்தன், தஞ்சாவூர்
483 திரு எஸ்.இராசசராசன், அரியலூர்
484 திரு க.காமராசு, தஞ்சாவூர்.
485 திரு ராசு, தஞ்சாவூர்
486 திரு டி.கே.ஜி.நீலமேகம், எம்.சி., தஞ்சாவூர்
487 திரு ராஜாளி, சேவைமையம், தஞ்சாவூர்
488 திரு க.தீபா, தஞ்சாவூர்
489 திரு ராஜன், மதுரை - 16
490 திரு ஜெபா, நாகர்கோவில்
491 திரு தீனதயாளன், மதுரை - 14.
492 திரு இந்திரா , முத்துப்பட்டி
493 திரு என்.இராசாராம், கோபிச்செட்டிப்பாளையம்
494 திரு மா.வே.தங்கசாமி, கவுந்தப்பாடி
495 திரு சி.தனபால், சின்னமொடச்சூர்
496 திரு ஏ.இளையராசா, சின்னமொடச்சூர்
497 திரு இரா.அமுதா, கொளப்பளூர்
498 திரு சி.இராமன், மேட்டூர்
499 திரு ஜி.புவனேஸ்வரி, சின்னமொடச்சூர்
500 திரு கு.ந.மகாலிங்கம், அத்தாணி
501 திரு ஐ.சுதாகர், மொடச்சூர்
502 திரு என்.சி.பி.பழனிச்சா, தொப்பம்பட்டி
503 திரு என்.சண்முகம், காசிப்பாளையம்
504 திரு சாமிகலியமூர்த்தி, கூடுவெளி
505 திரு நா.ஈசுவரமூர்த்தி, திருப்பூர்
506 திரு அமரேசன், திருச்செங்கோடு
507 திரு கோ.சம்பத், சென்னை - 93.
508 திரு பி.மதியழகன், திட்டக்குடி
509 திரு ஜானகிராமன், திட்டக்குடி
510 திரு மே.பா.இளங்கோ, கவுந்தப்பாடி
511 திரு தங்கபாலு, சேலம்
512 திரு சந்திரமோகன், திருவாரூர்
513 திரு கரிகாலன், வேதாரண்யம்
514 திரு என்.ஞானமுருகன், சென்னை - 116
515 முனைவர் உ.பிரபாகரன், தஞ்சாவூர்.
516 திரு துரை.கோபிநாத், தஞ்சாவூர்
517 திரு த.பன்னீர்செல்வம், தஞ்சாவூர்
518 திரு மா. அருணாசலம், தஞ்சாவூர்
519 திரு பி.தாமோதரன், ஒரத்தநாடு
520 திரு கா. சாமிநாதன், தஞ்சாவூர்
521 திரு ஸ்ரீராம் எலக்ட்ரிக்கல்ஸ், தஞ்சாவூர்
522 திரு எடிசன் பெர்னாடு, கோவை - 18
523 திரு இரா.தொமினிக், தாளவாடி
525 திரு வீ.தாமரைக்கண்ணன், சங்கரன்கோவில்
526 திரு ஜி.தனபால் , திருப்பூர் - 4
527 திரு க.முத்துராமலிங்கம், கோவை

### வைகோ , சீமான், அமீர் கைது
### த.தே.பொ.க . கண்டன ஆர்ப்பாட்டம்

சிங்களப் பேரினவாத அரசிற்கு இந்திய அரசு ஆயுதம் வழங்குவதை கண்டித்து சென்னையில் ஈழம் உண்மையில் நடப்பதென்ன? என்ற தலைப்பில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் கருத்தரங்கம் நடத்தியது. அதில் உரையாற்றியதற்காக ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ, அவைத்தலைவர் கண்ணப்பன் ஆகியோர் பிரிவினைத் தடைச் சட்டம் , அரசை கவிழ்க்கச் சதி ஆகிய சட்டப்பிரிவுகளின் கீழ் கைது செய்யப்பட்டனர். இராமேசுவரத்தில் திரைத்துறையினர் நடத்திய பேரணிப் - பொதுக்கூட்டத்தில் ஈழத் தமிழர்களின் ஞாயத்தை எடுத்துப்பேசியதற்காக இயக்குநர்கள் சீமான், அமீர் ஆகியோர் இதே சட்டப்பிரிவுகளின் கீழ் கைது செய்யப்பட்டனர்.

தமிழகக் கங்காணி அரசின் இக் கைது நடவடிக்கைகளைக் கண்டித்தும், இவர்களை உடனே விடுதலை செய்யவேண்டும் என்று வலியுறுத்தியும் தமிழ்த்தேசப்பொதுவுடைமைக் கட்சி சார்பில் 25.10.2008 அன்று தஞ்சை மாவட்ட செங்கிப்பட்டியில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கட்சியின் மாவட்டத்துணைச் செயலாளர் தோழர் குழ. பால்ராசு தலைமை தாங்கினார். பூதலூர் ஒன்றியச் செயலாளர் தோழர் க.காமராசு கண்டன உரையாற்றினார்.

ஆர்ப்பாட்டத்தை முடித்துவைத்து த.தே.பொ.க பொதுச் செயலாளர் தோழர் பெ. மணியரசன் எழுச்சியுரையாற்றினார். பெருந்திரளாக இளைஞர்களும், மாணவர்களும் பொதுமக்களும் பங்கேற்றனர்.

சிதம்பரம் :

வைகோ, கண்ணப்பன், சீமான் அமீர் கைதைக் கண்டித்து த.தே.பொ.க . சார்பில் சிதம்பரம் நகரெங்கும் கண்டன சுவரொட்டி ஒட்டப்பட்டது.

தமிழர் கண்ணோட்டம் அறக்கட்டளை சார்பில் வெளியீட்டாளர் : பெ.மணியரசன் 20/7, முத்துரங்கன் சாலை, தியாகராயர் நகர், சென்னை- 17 என்ற முகவரியிலிருந்து வெளியிடப்படுகிறது. ஆசிரியர் பெ.மணியரசன்




**தமிழக அரசு வாய்த்திறக்காது**

அக்டோபர் 08, கண்ணோட்டம் இதழ் அஞ்சல் வழியே கிடைத்தது. தொடர்ந்து எம் விடுதலை குறித்தும், தோழர் மாறன் விடுதலை குறித்தும் செய்தி பதிவு செய்து எழுதி வருவதற்கு மகிழ்ச்சியும், நன்றியும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிங்கள இனவெறி அரசின் கொடுமைகள் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே இருக்கின்றன. தமிழக மீனவர்கள் தொடர்ந்து சுட்டுக் கொல்லப் படுவதும், அதற்கு அரசியல் கட்சிகள் ஒப்புக்கு கண்டனம் தெரிவிப்பதும், தமிழக அரசோ, குடும்பத்திற்கு ஆறுதல் தொகை கொடுப்பதோடு அமைந்துவிடுவதும் ஏற்றுக்கொள்ள முடியாக் கொடுமை நிகழ்வுகள்.

இந்திய அரசு தன் படைக்கருவிகளை சிங்கள அரசுக்கு தருவதோடு, தன் படைவீரர்களையும் அனுப்புகிற வேளையில் தமிழகம் அமைதி காப்பது எதை நோக்கி என்றுத் தெரியவில்லை. தமிழகக் கட்சிகள் பொறுப்பேற்று போராடும் எனும் நம்பிக்கை இல்லை. தமிழ் அமைப்புகளை, புரட்சிமய இயக்கங்களை ஒருங்கிணைத்து வலுவாகப் போராடவேண்டும்.

***- பொழிலன் புழல் சிறை, சென்னை.***

**தேனாய் இனித்தது கட்டுரை**

அக்டோபர் - 08 இதழில் கி. வெங்கட்ராமன் அவர்கள் எழுதிய அமெரிக்க இந்திய அணு ஒப்பந்தம் பற்றிய கட்டுரையில், அமெரிக்கா விற்கு அடியாள் வேலை பார்ப்பதற்கு இந்தியா சம்மதித்தப்பிறகே இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது என்கிற செய்தியை படித்தவுடனேயே எதிர்கால இந்தியாவின் நிலையை நினைத்து நெஞ்சம் பதறியது. இராசபட்சயின் கோமாளித்தனமும் பிரபாகரனின் இராசதந்திரமும் என்கிற கட்டுரையை படித்த பிறகுதான் புலிகள் தோற்காமல் வலுவாக இருக்கிறார்கள், தமிழீழம் நிச்சயம் மலரும் என்ற நம்பிக்கை பிறந்தது. வெகுசன பத்திரிக்கைகளில் வரும் புலிகளுக்கு எதிரான செய்திகளை படித்து சோர்ந்துபோன தமிழ் உணர்வாளர்களுக்கு இக்கட்டுரை தேனாய் இனித் திருக்கும். பெ. மணியரசன் அவர்களுக்கு நன்றி.

கிறித்தவர்களுக்குக் கெதிரான சங்பரிவாரங்களின் கோரத்தாண்டவத்தையும், மதவெறியைத் தூண்டிவிட்டு ஓட்டுப்பிச்சை யெடுக்க திட்டமிடும் பாரதிய சனதா கட்சியின் சுயரூபத்தையும் வெளிச்சமிட்டுக் காட்டியது பயனுள்ளதாக இருந்தது. கட்டுரையாளருக்கு பாராட்டுகள்.

*- அதியமான், ஊரப்பாக்கம்.*

**உணர்ச்சிகரமானப் பதிவு**

அக்டோபர் 08, இதழில் பெரும்பான்மைத் தேசிய இனம், சிறுபான்மைத் தேசிய இனங்களை விழுங்கி ஏப்பமிடும் திமிங்கலங் களாகவே இருந்து வருவதை பெரும்பான்மைத் தேசிய இனம், தன் சொந்த நலனையே கவனிக்கும் தனக்காக மட்டுமே எதையும் வைத்துக் கொள்ளும் எனும் உண்மை சோவியத் கூட்டாட்சி உடைந்தபோது அம்பலமானதைக் கண்டோம் என்ற மேற்கோள் மூலம் உடைத்துக் கூறிவிட்டார் கவிஞர் காசி ஆனந்தன். அவரது உணர்வுகள் உணர்ச்சிகரமாகவே பதிவு செய்யப்பட்டுள்ளன.

*- ஆலையழகன்,வல்லம்*

**தமிழ்த்தேசிய இயக்கங்களுக்கு ஆதரவு**

தமிழீழம் அமைய நடுவண் அரசு உதவவேண்டும் என்று தி.மு.க தலைவர் கேட்கவில்லை. தி.மு.க தலைவரின் போர்க்குணம் மங்கிவிட்டது. நடுவண் அரசு, சிங்கள அரசுக்கு இராணுவ உதவி செய்ய மாட்டேன் என்று கூறவில்லை. ஈழத்தில் தமிழினப் படுகொலையை நிறுத்தவிடாமல், உறவைத் துண்டித்து சிங்கள அரசை எதிர்ப்போம் என்று இந்திய அரசு சொல்லவில்லை.

தமிழகத்தை நடுவண் அரசு ஏமாற்றுகிறது. அவைகளைக் கண்டும் தி.மு.க. போராடவில்லை. நீர்த்துப் போய்விட்டது. இனி, தமிழர்கள் தமிழ்த்தேசிய இயக்கங்களைத்தான் ஆதரிப்பார்கள்.

*- தி. சொரிமுத்தையன்*
*பாளையங்கோட்டை.*

**முரண்பாடு**

தலையங்கத்தில், தமிழ்த்தேசிய உணர்வாளர்கள் ஆற்ற வேண்டிய கடப்பாடு என்ன என்பதைச் சுட்டியிருக்கின்றீர்கள். பெரியார் ஏற்றி வைத்த கைவிளக்கை தேர்தல் கேணியில் விட்டெறிந்து விட்டு, இருளில் வழி தவறிக் கிடக்கின்றனர் தமிழர்கள்.

முன் விரோதங்கள் ஏதுமற்ற இடங்களில் கூட மதச் சின்னங்களை உடைத்தெறியும் நிகழ்ச்சி தமிழகத்தில் நடப்பதைக் காண சகிக்கவில்லை. பெரியாரின் கொள்கைகளை காற்றில் பறக்கவிட்டுவிட்டு மதவாதிகளோடு கைகோத்து தேனிலவு கொண்டா டியதன் விளைவினை நாம் கண்கூடாக அனுபவிக்கின்றோம்.

நடக்கின்ற நிகழ்வுகளை தடுத்து நிறுத்திடவில்லையெனில், தமிழர்களின் உரிமைகள் பறிபோகும் அபாயம் ஏற்படும்.

முழுநிலவனின் "பெரியாச்சி" கவிதை நன்று ஆனால் கவிதைக்கான படம் முரணாகத் தோன்றுகிறது.

*- கதிர்மதி, திருச்சி.*

**எண்ணத்தின் வெளிப்பாடுகள்**

தமிழர்களை எதிரி என்று இந்தியா கருதுகிறது. அதனால்தான் ஈழத்தமிழனாய் இருந்தால் என்ன? தமிழ்நாட்டு மீனவனாய் இருந்தாலென்ன சுடு நம்மை யார் கேள்வி கேட்க முடியும் என்ற எண்ணமே! கேள்வி கேட்பான் என்று நினைத்திருந்தால் நடுவர் மன்றத் தீர்ப்பை நடைமுறைப்படுத்த கர்நாடக அரசை அரசியல் சட்டம் 355-ன்படி எச்சரித்தும் சரிபடாவிடில் 356-ன்படி கலைத்திருக்கும் . தமிழ்நாட்டை ஆள்வது திராவிடம். தமிழர்கள் அடிமைகள் என்ற எண்ணத்தின் வெளிபாடுதான் நலம் பார்ப்பது.

***- ஆ.சு.மணியன்***
*திருத்துறைப்பூண்டி*